# குங்குமப்பூ

கே. ஏ. அப்பாஸ்
தமிழில்: கே. கணேஷ்

MADURAI UNIVERSITY LIBRARY
15 APR 1969
MADURAI.
552

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை-4

முதற் பதிப்பு: ஜனவரி, 1956.
இரண்டாம் பதிப்பு: அக்டோபர் 1963.
உரிமை பதிவுசெய்யப்பெற்றது.

URAI UNIVERSITY LIB
MADURA

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| குங்குமப்பூ | ... | 9 |
| என் குடை | ... | 34 |
| சிட்டுக் குருவிகள் | ... | 48 |
| அநாமதேய அகதி | ... | 61 |
| சில்வியா | ... | 83 |
| கொடி | ... | 98 |
| பிரதிபிம்பம் | ... | 104 |
| அரிசி | ... | 118 |
| பாதகமலம் | ... | 132 |
| ஒரு வேடிக்கை | ... | 165 |

விலை ரூபாய் மூன்று

ஜீவன் பிரஸ், சென்னை-5. (820)

# முன்னுரை

இலக்கியத் துறையில் எந்தவித உதவியும் நான் செய்யாதிருக்கும்போதே, சிலருக்கு என்னிடம் பேரன்பு உண்டாகிவிடுகிறது. என் வாழ்க்கையிலே இது ஒரு பெரும் பாக்கியமாகும். இந்த மாதிரி என்னிடம் அன்பு கொண்ட உற்ற நண்பர்களில் முக்கியமான ஒருவர் ஸ்ரீ கே. கணேஷ். உண்மையைச் சொன்னால், பலசமயம் அவர்தான் எனக்கு உதவியாக இருந்திருக்கிறார். ஒரு பத்திரிகாசிரியனுக்கு, அபூர்வமாகச் சில நல்ல கதைகள் கிடைத்தாலே, அளவிறந்த மகிழ்ச்சி உண்டாகும். அப்பாஸைப் போன்ற சில பிரபல வட இந்திய எழுத்தாளர்களின் நட்பைப் பெற்ற ஸ்ரீ கணேஷ் நான் ஆசிரியனாக இருந்த 'ஹிந்துஸ்தா'னுக்கும், இப்போது இருக்கும் 'மஞ்சரி'க்கும், அவர்களுடைய அனுமதி பெற்ற சில சிறு கதைகளைத் தமிழாக்கி உதவியிருக்கிறார். இந்த இலக்கிய உறவிலிருந்துதான், இலங்கையில் உள்ள ஸ்ரீ கணேஷும் சென்னையில் உள்ள நானும் சில முறை நேரில் சந்தித்துப் பழகும் வாய்ப்பு உண்டாயிற்று.

என் நண்பர் ஸ்ரீ கணேஷ் சிறந்த ரசிகர். அடக்கம் நிறைந்தவர். ஏற்கனவே, முல்க்ராஜ் ஆனந்தின் நாவல் ஒன்றைத் தமிழாக்கி வெளியிட்டிருக்கிறார். அவர் தமிழாக்கிய முதல் சிறு கதைத் தொகுப்பான இதற்கு முன்னுரை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது பெருமகிழ்ச்சி அளிக்கிறது— இரண்டு மடங்கு பெரு மகிழ்ச்சி. ஏனென்றால், நண்பர்களுக்காகச் சில சமயம், பொருந்தாத காரியத்தைச் செய்ய நேர்வதுண்டு. இங்கே அப்படி எனக்கு நேரவில்லை. நண்பருடைய தமிழாக்கம்; கதைகளோ அரிய கதைகள்—இதுதான் என்னுடைய இரு மடங்கு மகிழ்ச்சிக்குக் காரணம்.

இந்தத் தொகுதியில் உள்ள பத்துக் கதைகளில் ஒவ்வொன்றும், வெவ்வேறு விதமானது. அத்தனையும் சிறப்பாய் அமைந்திருக்கின்றன. எந்தக் கதையும் பிரத்யட்ச வாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களைச் சித்தரிக்கவில்லை. இன்றைய பாரதத்தின் பல அம்சங்களைப் பிரதிபலிக்கும் மிக

நேர்த்தியான கதைகள். காஷ்மீர் சுதந்திரக் கிளர்ச்சி, ஜேபி யடித் திருட்டு, குருவிகளின் தீரம், சமயவெறியின் குருட்டுத் தனம், கடமை உணர்ச்சி, வறுமையின் கொடுமையறியாத தேசபக்தி, ஆசை காட்டும் காமுகர் இயல்பு, தாளாத தரித் திரத்திலும் தாய்மை அன்பு, உண்மைக் காதலை அறிய முடி யாது செய்த 'கலை'க் கொடுமை, பசித்தவனின் 'திருட்டு' — இந்த விஷயங்களை இவை முறையே உணர்ச்சிக் குழைவுடனும் இயல்பாகவும் சித்தரிக்கின்றன. ஒவ்வொரு கதையின் சிறப் புக்களைப் பற்றியும் எவ்வளவோ சொல்லலாம். ஆனால், இங்கே நான் விமர்சனம் செய்ய வரவில்லை. வாசகரே படித்து அநுபவிக்க வேண்டும்.

என் நண்பரின் தமிழாக்கம் மிக்க இயல்பான நடையில் அருவி ஓட்டம் போல் அமைந்திருக்கிறது. இங்கே உள்ள சில கதைகளின் ஆங்கில மூலத்தையும் நான் படித்திருக் கிறேன். உறவு கொண்ட இந்திய மொழிகளில் உள்ள கதை களைத் தமிழாக்குவது போல் அல்ல, ஆங்கிலத்திலிருந்து தமி ழாக்குவது. ஆங்கிலத்தின் மேதை தமிழின் மேதைக்கு எளி தில் ஒத்து வருவதில்லை. முதலில் ஆங்கிலத்தின் உணர்ச்சி யோடு ஊறிப் புரிந்து கொண்டதை, பிறகு தமிழின் உணர்ச் சியோடு ஊறி வெளியிட வேண்டும். அப்போதுதான் தமி ழாக்கம் வெற்றி பெறும். இந்த விஷயத்தில் நண்பர் ஸ்ரீ கணேஷ் பரிபூரண வெற்றி பெற்றிருக்கிறார். என்னவோ மொழி பெயர்ப்புக் கதைகள் போல, இவற்றைப் படிக்கும் போது தோன்றவில்லை. அசல் தமிழ்க் கதைகளாகவே தோன் றுகின்றன. தவிர, இந்த மாதிரி பலவிதப் பொருள்களையும், விதம் விதமான உயிருள்ள கதா பாத்திரங்களையும் கொண்ட கதைகள் அடங்கிய ஒரு தொகுதி, எங்கேயோ ஒன்றிரண்டு தான் இதற்கு முன் தமிழில் வெளி வந்திருக்கக் கூடும். ஆகவே, தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தில் இந்தத் தொகுப்புக்கு ஒரு விசேஷ ஸ்தானம் உண்டு. இதை வெளியிட்டது, தமிழுக்கே ஒரு பணியாகும்.

சென்னை-8,<br>
19—12'—55

—தி. ஜ. ர.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

# குவாஜா அகமது அப்பாஸ்

பத்திரிகை நிருபர், சிறு கதை எழுத்தாளர், நாவலாசிரியர், சினிமா விமர்சகர், பத்திரிகையாளர், சினிமாக் கதை ஆசிரியர், இந்தியாவின் தலைசிறந்த சினிமாப்பட டைரெக்டர், இத்தகைய பல துறைகளிலும் புகழ்பெற்ற குவாஜா அகமது அப்பாஸ் இந்தியாவின் தலைவிதியை மூன்றுமுறை நிர்ணயித்த பிரசித்திபெற்ற யுத்த பூமியாக விளங்கிய பஞ்சாபில் பானிபட்டில் பிறந்தார்.

வகுப்புவாதத்திற்குப் பிறப்பிடமாகவிருந்த அலிகார் பல்கலைக் கழகத்தில் கல்விபயின்ற அப்பாஸ், ஜின்னாவின் அரசியலையும் பாகிஸ்தானையும் வன்மையாக எதிர்த்தவர்.

நிருபராகவும், சினிமா விமர்சகராகவும் 'பம்பாய் கிராணிக்கல்' செய்தித்தாளில் பணியாற்றியபொழுதே, கிராணிக்கலின் வார வெளியீட்டில் 'கடைசிப்பக்கம்' (Last Page) என்ற பத்திப் பகுதியை எழுதி வந்தார். இப்பகுதியை விருப்புடன் போற்றிப் படித்தவர்களில் பண்டித நேருவும் ஒருவர்.

பத்திரிகைத் தொழில் பார்க்கும்போதே பம்பாய் டாக்கீஸாரின் படங்களுக்கு விளம்பரத் தொழிலும் செய்து வந்தார். அவர்களே அப்பாஸை முதலில் சினிமாத் துறையில் புகுத்தியவர்கள். இக் கம்பெனியாருக்காக "நயா சன்ஸார்" (புது சமுதாயம்) என்ற படத்தைத் தயாரித்தார். அது முதல் சாந்தாராம், கர்தார், ராஜ் கபூர் ஆகிய சிறந்த படாதிபதிகளுடன் பணியாற்றியுள்ளார்.

"டாக்டர் கோட்னீஸ்", "அவாரா", "ஆகாஷ்", "ஸ்ரீ 420" போன்ற இந்திப் படங்களுக்குக் கதை வசன கர்த்தா அப்பாஸே.

எனினும் அவருக்கு மிகவும் புகழளித்தது அவர் தயாரித்த "தர்தி-கி-லால்" என்ற படமேயாகும். சமீபத்தில் அவர் தயாரித்த "முன்ஞ" என்ற படம் ஐரோப்பாவின் பல சினிமா விழாக்களில் வெற்றியூட்டிப் புகழ்பெற்றதை அன்பர்கள் அறிவார்கள்.

உருது, இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதும் அவர் 'சர்கம்' என்ற இந்தி சஞ்சிகையையும் நடத்தி வந்தார். அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இந்திய மக்கள் கலாமன்றம் ஆகியவற்றின் ஸ்தாபகர்களில் அப்பாஸும் முக்கியமானவர்.

முன்னர் அமெரிக்கா முதலிய நாடுகட்குச் சென்று பிரயாண நூலும் எழுதிய அவர் சென்ற ஆண்டு சீனவிற்குச் சென்று சீன குறித்தும் இரு நூல்கள் எழுதியுள்ளார். சினிமாத் தொழிலாளர்களுடன் ரஷ்யா சென்று சில மாதங்கட்கு முன்னரே திரும்பி தற்போது மாஸ்கோவிலிருந்துகொண்டு இந்தியரும், ரஷ்யரும் சேர்ந்து தயாரிக்கும் 'அஃபனேஸி நிகேதன்' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்.

பம்பாய்க்குப் பன்னிரண்டு மைல்களுக்கப்பாலுள்ள பாலி ஹில்ஸில் வசிக்கும் அவருக்குப் பிடித்தது படிப்பு, எழுத்து, சினிமாக்கலை, அவரது பட்டதாரியான மனைவி. அவருக்குப் பிடிக்காதது வகுப்பு வாதம்.

# குங்குமப்பூ



**வா** தம்பி! இந்தச் சினார் மரத்தடியில் உட்கார்ந்து களைப்பாறு. கண நேரத்தில் தண்ணீர் கொண்டு வருகிறேன். அந்த நீல நிறக் கார் உன்னுடையதுதானே? டயரில் காற்றுப் போய்விட்டதாக்கும். அதைப் பற்றிக் கவலைப்படாதே; இருட்டுவதற்குள் நீ எப்படியும் ஸ்ரீநகர் போய்ச் சேரலாம். என்ன, இங்கேயிருந்து இருபது மைல் தூரம் தானே...? வேண்டாம் தம்பி, வேண்டாம். நான் கொடுத்த தண்ணீருக்காகப் பணம் வாங்க மாட்டேன். அல்லாவுடைய கிருபையால் நாங்கள் இன்னும் தண்ணீரையும் காற்றையும் விற்கத் தொடங்கவில்லை. காசுதான் எனக்கு என்ன பிரயோசனப்படப்போகிறது...ஒரு பைசா—ஓர் அணா—ஒரு ரூபாயாக இருந்தாலும் என்ன? இந்த உலகத்தில் என்னுடையவர்கள் என்று கூறுவதற்கு ஒருவரும் உயிருடனில்லை...ஆமாம்! மகன், மகள், புருஷன் எவருமில்லாமல் தனியாகத்தான் இருக்கிறேன்...தம்பி அதோ அந்த மிராசுதாரின் வயலில் வேலை செய்கிறேன்...அந்த ஊற்றிலிருந்து தண்ணீர் தூக்கி, நெல் குத்திப் பிழைக்கிறேன். எப்படியோ அல்லா என் சாப்பாட்டுக்கு ஒரு படி அரிசி அளக்கிறார். எனக்கு அறுபத்தைந்து வயதாகிறது. காடு வா, வா என்று அழைக்கிறது. எனக்கு என்ன வேண்டியிருக்கிறது? இன்றைக்குச் செத்தால், யார் நாளை

என்னை நினைத்துக்கொண்டிருக்கப் போகிறீர்கள்? நான் ஏன் இதையெல்லாம் கூறி உனக்குத் தொல்லை கொடுக்கிறேன்? நீ என்னை ஒரு தொண தொணத்த கிழவி என்று நினைக்கிறாயல்லவா? என்ன தம்பி சொன்னாய்? இந்த வயலில் பூத்திருப்பவை அபின் பூக்கள் அல்ல; அவை குங்குமப் பூக்கள். குங்குமப் பூக்கள் ஊதா நிறமாய் மஞ்சள் மகரந்தப் பொடியுடனிருக்குமே, என்கிறாயா? ஆமாம்; அது உண்மைதான். ஏன், இப்போது நீ போகும் வழியில் மற்ற வயல்களில் உள்ள குங்குமப் பூக்களும் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால், இந்த வயலில் மட்டும் குங்குமச் செடியின் பூக்கள் சிவப்பாக மாறியிருக்கின்றன; ரத்தச் சிவப்பாக. ஏன் அப்படி ஆயிற்றுத் தெரியுமா? இது கடவுளாகச் செய்த ஓர் அற்புதமாகும். ஆனால், பள்ளத்தாக்கில் வசிக்கிற இந்தக் கால வாலிபர்கள் நீங்கள்; கடவுள், அற்புதம் இவைகளை நீங்கள் நம்பமாட்டீர்கள். இந்த மாதிரி விஷயங்களை நம்பும் ஏழைக் காஷ்மீரிகளாகிய எங்களை, முட்டாள்கள் குருட்டு நம்பிக்கையுள்ளவர்கள் என்றுதான் எண்ணுவீர்கள்.

இந்தப் பூக்களைப் பற்றிய கதையைக் கேட்பதற்கு உனக்கு நேரமிருக்குமா? இன்னும் கொஞ்ச நேரத்தில் உன்னுடைய கார் சரிப்பட்டுவிட்டதும், கதை அரை குறையாக இருக்கும்போதே நீ போய் விடுவாய். இந்தப் பாதையில் ஒன்று, இரண்டு, பத்து, இருபது, நூறு என்று மோட்டார்க் கார்கள் பல போய்க்கொண்டுதான் இருக்கின்றன. ஏதோ கொஞ்ச நேரம் நின்றாலும், பின்னால் விரைவாய்ப் புழுதியைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டு விடுகின்றன. ஆனால், இந்த வயல்களில் உள்ள குங்குமப் பூக்களோ அவைகளை எவராவது பறிக்கும் வரையில் இங்கேயேதான் இருக்கப் போகின்றன. ரத்தத் துளிகளைப் போன்ற இந்தப் பூக்களை

வெயிலில் காய வைப்பார்கள். பின்பு உலகின் நாலா திசைகளுக்கும் இவைகளை அனுப்புவார்கள். எங்கெந்த ஊர்களிலே சேர்ந்து, இதன் நறுமணம் யாருடைய சாப்பாட்டில் கலக்கப் போகிறதோ? அங்கேயும் உன்னைப் போலவேதான் பலர் "ஏன் இந்தக் குங்குமப் பூக்கள் ரத்தத்தைப்போல் சிவப்பாக இருக்கின்றன?'' என்று கேட்பார்கள். ஒருவருக்கும் பதில் சொல்லத் தெரியாது. ஏதோ இந்தப் பித்துக்கொள்ளிக் கிழவி உளறுகிறாள் என்று நினைக்கிறாயா? இருந்தாலும் இந்தச் சிவப்புக் குங்குமப் பூக்களைப் பற்றிய மர்மத்தை அறிய விரும்புகிறாயல்லவா? ஆமாம். காரைச் செப்பனிட இன்னும் நேரமிருக்கிறது; அது வரையில் என்னுடைய உளறல்களைக் கேட்டுத்தான் பொழுதைப் போக்கலாமே என்று நினைக்கிறாயோ? எப்படி இருந்தாலும், சரி, இதோ அந்தக் கதையைக் கூறுகிறேன். உனக்கு இஷ்டமிருந்தால் கேள்.

இந்த வருஷத்தில் மட்டுந்தான் இந்த வயலில் இப்படிச் சிவப்பு நிறத்துடன் குங்குமப் பூக்கள் பூத்திருக்கின்றன. இதற்கு முன்னெல்லாம் மற்ற வயல்களைப் போலவே, ஊதா நிறமாய் மஞ்சள் மகரந்தப் பொடியுடனேயே இங்கேயும் அவை பூத்திருந்தன. சமவெளி எல்லாம் அந்தப் பூக்கள் மூடிக்கிடக்கும். நாணமுள்ள மணமகள் ஒருத்தி மஞ்சள் நிறப்போர்வை போர்த்துப் படுத்திருப்பதுபோல் அவை காட்சியளிக்கும். சுற்றுப்புறமெல்லாம் அவற்றின் தெய்வீக வாசனை மூக்கைத் துளைக்கும். சாலையில் கார்கள் செல்லும்போது கிளப்பும் புழுதிகூட வாசனையைக் கொண்டு வரும். பார்த்தால் ஆகாசத்திலிருந்து பூமி வரைக்கும் குங்கும வர்ண மயமாகத் தோன்றும்.

ரொம்ப ரொம்பக் காலத்துக்கு முன்னே, வேறொரு வழிப்போக்கன்கூட இந்த இடத்தில்

நின்று, பூக்கும் தறுவாயிலிருந்த இந்த வயலைப் பார்த்தான். அந்த வாலிபன் பார்வைக்கு எளிய சுபாவமுடையவன்போல் தோன்றினான். நேரே வயலுக்கு மத்தியில் போய் மூக்கினால் விசித்திர மான முறையில்—ஏதோ முகர்வது போலல்லாமல் அப்படியே அதன் வாசனையைப் பருகுவது போல்—அவன் முகர்ந்தான். பின்பு தனக்குத் தானே "இதென்ன ஆச்சரியம்! எனக்கு ஏன் வர வில்லை?" என்றான். "உனக்கு வரவில்லை என் கிறாயே! என்ன வரவில்லை?" என்று நான் கேட் டேன். அதற்கு அவன், "குங்குமப் புதருள்ள வயல்களுக்குச் சென்றால், சிரிப்பு வருமென்று பத்திரிகைகளில் தெளிவாக எழுதியிருக்கிறது. ஆனால், எனக்குச் சிரிப்பு வரவில்லையே. என்ன ஆச்சரியம்!" என்றான். அவன் மனத்தை இந்த விஷயம் உறுத்தியிருக்கிறது. அவன் முகத்திலே பிரமாதக் கவலை தென்பட்டது. இதைக் கண்டு எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அந்த நேரத்தில் அல்லாவின் திருவுள்ளப்படி விறகு பொறுக்கச் சென்ற ஷாப்ராணியும் அந்த வழியே விறகு சுமந்துகொண்டு வந்தாள். அவளிடம் இதைப் பற்றி நான் கூறவே, அவளும் சிரித்தாள். அவள் சிரிப்பதைக் கண்ட அந்த வாலிபனுக்கு ஆரம்பத் தில் சிறிது சங்கடமாகவும் எரிச்சலாகவும் இருந் தாலும், ஷாப்ராணி பைத்தியத்தைப்போல் குலுங்கக் குலுங்கச் சிரிப்பதைக் கண்டு, முன்னே இறுக மூடியிருந்த அவன் வாயும் புன்சிரிப்பால் திறந்தது. அந்தப் புன்சிரிப்பு வலுத்து, அவனும் வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்துவிட்டான். இவர் கள் இருவரும் இப்படி அர்த்தமில்லாமல் சிரிப்ப தைக் கண்ட எனக்கும் சிரிப்பை அடக்க முடிய வில்லை. பின்பு அந்த வழிப்போக்கன் ரொம்பத் தெரிந்தவன்போல் கர்வத்துடன், "பார்த்தாயா, புத்தகத்தில் கூறியது உண்மையாகிவிட்டது! நாம் மூன்று பேரும் மட்டுமே இந்த வயலில்

இருக்கிறோம். இருக்கிற நாம் மூவருமே சிரிக்கிறோம் அல்லவா?'' என்றான்.

பார்த்தாயா, தம்பி, நான் என்னென்னவோ சொல்லுகிறேனே! இந்த வயோதிகக் காலத்தில் எங்கெங்கேயோ மனது ஓடுகிறது. ஆம், அது தான் காரணம். மனது அப்படி ஓடுவதால் நான் என்ன பேசுகிறேன் என்பதை மறந்துவிடுகிறேன். ஆம், நான் ஷாப்ராணியைப் பற்றிச் சொன்ன போது, ''யார் அந்த ஷாப்ராணி?'' என்று கேட்டாய்? அவள் என் மகள் என்று நான் சொல்ல வில்லையா? சொல்ல மறந்துவிட்டேன் போலிருக்கிறது. இதிலிருந்து என் ஞாபக சக்தி எப்படி என்று தெரிந்துகொண்டாயல்லவா?'' அது போகட்டும், அவளுடைய உண்மைப் பெயர் நூரான் என்றிருந்தாலும், ஊரார் அவளை ஷாப்ராணி என்றுதான் அழைப்பார்கள். அதற்குக் காரணம் குழந்தைக்கால முதலே அவளது மேனி வெளுப்பாய் மஞ்சள்போல் இருந்தது. ஊரில் உள்ள போக்கிரிச் சிறுவர் சிறுமியர்களுடன் சுற்றித் திரியும் இவளை, 'ஷராப்ராணி' (மஞ்சள் மேனியாள்) என்று அவர்கள் கேலி செய்வார்கள். இவளுக்குக் கோபம் அதிகமாக ஆக, 'ஷாப்ராணி! ஷாப்ராணி!' என்று அவர்கள் பலமாகக் கத்துவார்கள். இந்தக் காலத்துக் குழந்தைகள் எமனைக் கூடப் பலகாரம் செய்துவிடும் என்றுதான் உனக்குத் தெரியுமே! இதேபோல என் ஷாப்ராணியும் மங்கைப் பருவம் அடைத்த பின்பும், ஊரிலுள்ள பிள்ளைகளெல்லாம், ''இந்த ஜில்லாவிலேயே ஷாப்ராணியின் அழகில் பாதியளவுகூட உள்ளவர்கள் வேறு எவரும் கிடையாது'' என்று புகழத் தொடங்கினார்கள். அவளது உடல் குங்குமப்பூப் போன்றதென்றும், அவளுடைய கண்களிரண்டும் தாமரை மலர்களென்றும், ஏதேதோ உளறினார்கள்.

எனக்கென்னவோ அவளிடம் அழகு இருப்பதாகத் தோன்றவில்லை. அதற்குப் பதிலாக, அவள், அதோ அந்தச் சிற்ருற்றின் கரையில் வளர்ந்திருக்கிறதே நாணல், அதைப்போலவே மெலிந்திருந்தாள் எனத் தோன்றியது. இப்படி மெலிந்த இந்தப் பெண் எப்படிக் குழந்தை பெறப் போகிருள் என்று அடிக்கடி நான் எண்ணுவதுண்டு. அப்போது அவளது உடல் மிகவும் வெளுத்திருந்ததால், அவளுக்கு மஞ்சள் காமாலை ஏதும் பிடித்திருக்கிறதோ என்று யாரும் சந்தேகப்படுவார்கள். அதோடு அவள் பெரியவர்களைக் கண்டால் கொஞ்சமும் மதிக்காமல் ஏதாவது குறும்பு செய்துகொண்டே இருப்பாள். நான் அவளுக்கு ஏதும் செல்லம் கொடுப்பதில்லை. ஆனல் தன் மூன்று சகோதரர்களுக்கும் அவள் ஒரே சகோதரியாதலால் அவர்கள் கொண்ட பிரியத்தாலும், தன் தந்தை காட்டிய அன்பினுலும், அவள் கெட்டு விட்டாள். நானே இப்படிப்பட்ட பெண்ணை எவன் கலியாணம் செய்துகொள்ளப்போகிருன் என்று எண்ணினேன். ஆனல் அதற்கு மாருக, அந்த ஊரில் அவளைக் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்படாத வாலிபப் பையன்களே கிடையாது என்று சொல்லலாம். நீங்களெல்லாம் விசித்திரமான பிள்ளைகளப்பா! உன்னையொத்த பையன்களுக்கெல்லாம் எது எது பிடிக்கும், எது எது பிடிக்காது என்றே புரியவில்லை.

எல்லாப் பக்கத்திலிருந்தும் வந்து அவளைக் கலியாணம் செய்துகொள்ளப் பெண் கேட்கத் தொடங்கினுர்கள். மிராசுதாரும் பட்டணத்தில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் தன் மகனுக்காகக் கேட்டார். ஒரு சாதாரண விவசாயிக்கு இந்தப் பெண் கிடைப்பதென்ருல் லேசா, என்ன? நீயே சொல்லு, தம்பி! ஷாப்ராணிக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறதென்று நினைத்தேன். ஆனல், அல்லாவின்

திருவுள்ளம் வேறு விதமாக இருந்தது. அந்த வருஷம் குளிர் காலத்தில் இந்தப் பக்கமெல்லாம் ஜன்னி தோன்றியது. அதற்கு ஷாப்ராணியின் தகப்பனும் இரையாகி அடுத்த உலகத்துக்குப் போய்விட்டார். ஆண்டவன் அவருக்குச் சொர்க்கத்தில் ஓர் இடமளிப்பாராக! எல்லாம் எழுதியபடி தானே நடக்கும்? விதியின் போக்கை யாராலும் மாற்ற முடியுமா? இறந்தவரைப் பூமியில் புதைத்தோமோ இல்லையோ, எல்லாப் பக்கத்திலிருந்தும் தொல்லைகள் தோன்றத் தொடங்கின. மார்வாரி கடனுக்காக நிலம் ஏலம் போயிற்று. அப்போது கூட நான் மனந்தளரவில்லை. அன்று எனக்கு மூன்று ஆண் மக்கள் இருந்தார்கள். அவர்களே பெரிய சொத்தும் சுகமும் அல்லவா? அல்லா அவர்களை உயிருடன் காப்பாற்றினால், எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுவிடலாம் என்றிருந்தேன். ஷாப்ராணியின் மேனி எவ்வளவுதான் குங்குமப்பூப் போலவும், கண்கள் தாமரை போலவும் இருந்தாலும், ஓர் ஏழை அனாதைப் பெண்ணை யார் கலியாணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்று எண்ணி வருத்தப்பட்டேன்.

நானூறு வருடங்களாக எங்கள் வம்சத்தார் இந்த ஊரிலே நிலத்தை உழுவதும் பயிரிடுவதுமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். சில சமயம் பயிர் நன்றாக வளரும். சில சமயம் மோசமாக இருக்கும். சில சமயம் மழை பெய்யும். மற்றும் சில சமயம் மழை பெய்யாமல் பூமி வறண்டு போகும். ஒரு வருஷம் நிலத்தில் அதிகமாக மழை பெய்தால் பயிர் பச்சை எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போய்விடும். மற்றொரு வருஷம் கடும் பனியால் பயிர் மடித்துப் பதராய்ப் போகும். சில சமயம் நாங்கள் எங்கள் சொந்த நிலத்தில் வேலை செய்வோம்; மற்றும் சில சமயம் வேறு யாருடைய நிலத்திலாவது போய்க் கூலிக்கு வேலை செய்வோம். சகடக்கால்போல் சுழலும்

விதியின் மேடு பள்ளத்திலிருந்து யாரப்பா தப்ப முடியும்? மகனே, சில சமயங்களில் ராஜாவின் உத்தியோகஸ்தர்கள் கொடுமையாக நடந்து கொண்டார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், ராஜாக்கள் ராஜாக்கள் தான்; பொதுஜனங்கள் பொதுஜனங்கள்தானே? நாம் மட்டும் பொறுமை யாக இருந்து நமது நிலைமையை எண்ணிப் பார்த்து நமக்கும் உயர்ந்தவர்களுக்கு மரியாதை கொடுத்து வந்தால், ஏதோ சந்தோஷமாக வாழா விட்டாலும் நிம்மதியாகவாவது வாழலாமே. இந்த மகாக் கொடிய கலியுகத்தில் தினமும் விசித் திரமான சம்பவங்கள் நடைபெறும் என்று அந்தக் காலத்தவர் கூறியது சரியாகத்தான் இருக் கிறது.

பல வருடங்களுக்கு முன்னே என் வீட்டுக் காரர் உயிரோடு இருந்தபோது, ஒரு நாள் என் வீட்டில் நான் நெல் குத்திக் கொண்டிருந்தேன். அப்போது என் இரண்டாவது மகன் நூரு ஓடி வந்து "அம்மா! **ஷெர்-இ-காஷ்மீர்** (காஷ்மீரச் சிங்கம்) வந்திருக்கிறது. ஷெர்-இ-காஷ்மீர் வந்தி ருக்கிறது" என்றான். காஷ்மீரச் சிங்கமா? இந்தப் பக்கத்தில் அப்போதுதான் முதல் முதலாகச் சிங்கமோ, புலியோ வந்ததை நான் கேள்விப் பட்டேன். "சிங்கம் வந்திருந்தால் அதைப்பற்றி என்னிடம் கூச்சல் போட்டுக் கொண்டிருப்பதற் குப் பதிலாக, மிராசுதாரிடம் ஓடிப் போய்த் துப்பாக்கியை எடுத்து வரும்படி சொல்லு" என்று நான் சொல்வதற்குள், நூரு ஓடிவிட்டான். ஆனால் கொஞ்ச நேரத்துக்குள் கிராமத்திலுள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் பரபரப்புடன் ஓடிக்கொண்டிருந்தார்கள். சிங்கத் தைப் பிடித்துவிட்டார்கள்போல் இருக்கிறது! இல்லாவிட்டால் இப்படி அலட்சியமாகப் பய மின்றி ஓடுவார்களா? நாமும்தான் போய்ப் பார்ப் போமே என்று எண்ணினேன்.

அந்தக் காட்சியை என்றும் என்னுல் மறக்க முடியாது. அதோ மரங்கள் தெரிகின்றன, பார்! அவைகளுக்குப் பின்னுல் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. இப்போது மத்திய வகுப்பு வரையில் அதில் போதிக்கிருர்களாம் அப்போதோ அது ஆரம்பப் பாடசாலையாகத்தான் இருந்தது. ஆனுல், நான் அங்கே போனபோது என்ன கண்டேன் என்று நினைக்கிருய்? ஒரு பெரிய கூட்டம் என் முன்னுல் தரையில் உட்கார்ந்து கொண்டும் பின்னுல் நின்று கொண்டும் இருந்தது. அந்த ஜனங்களுக்கு முன்னுல் சிங்கமோ, புலியோ இருப்பதற்குப் பதிலாக யாரோ சிவந்த உயரமான ஒரு வாலிபன் ஏதோ சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தான். "அட இதுதாஞ காஷ்மீரச் சிங்கம்!" என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். பார்த்தாயா, இந்தப் பிள்ளைகளின் குறும்பை! என்னை அனுவசியமாக அல்லவா பயமுறுத்திவிட்டார்கள். இந்த மனிதன் சிங்கமும் அல்ல, புலியுமல்ல; ஓர் உத்தியோகஸ்தன் கூட அல்ல. உத்தியோகஸ்தர்கள் இந்த விதமான முரட்டுச் சுதேசி உடை உடுத்தியிருக்க மாட்டார்கள். அவன் போடும் சத்தத்திலிருந்து அவன் ஒரு தேயிலை வியாபாரி என்று எண்ணினேன். கொஞ்ச நேரத்தில் அவனிடமுள்ள ஒரு குழாய்ப் பெட்டியிலிருந்து சங்கீதம் பொழிந்த பின்பு நமக்கு இனுமாகத் தேயிலைப் பொட்டணங்களை வினியோகிப்பான் என்று எண்ணி, அங்கே போய் நின்றேன். ஆனுல், அவன் காஷ்மீர பாஷையில் பேசுவதைக் கேட்டு ஆச்சரியப் பட்டேன்.

அவன் விற்பது தேயிலையாக இருந்தால், உண்மையாகவே அது காரசாரமுள்ள பயங்கரமான தேயிலைதான். நான் கேட்ட சில வார்த்தைகளே என்னைத் திடுக்கிடச் செய்தன. நம் ஊருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படப் போகிறது

எனத் தோன்றியது. அவன் பேசிய விதமும் சொன்ன வார்த்தைகளும் பயங்கரமாக இருந்தன. 'சமஸ்தானத்தின் உண்மையான சொந்தக்காரர்கள் ராஜாவும் அவருடைய உத்தியோகஸ்தர்களும் அல்ல, விவசாயிகளாகிய நாம்தான் சமஸ்தானத்தின் சொந்தக்காரர்கள்! நாம் நசுக்கப்பட்டுக் கேவலமாக நடத்தப்படுகிறோம்! நம்முடைய உழைப்பினாலும் வியர்வையாலும் ரத்தத்தாலுமே, மிராசுதார்களும் லேவாதேவிக்காரர்களும் கொழுத்துப் பணக்காரர்கள் ஆகிறார்கள்! நாம் எல்லோரும் இந்த முறையை ஒழிக்க ஒன்று சேரவேண்டும்! நமது விடுதலைக்காகப் போராட வேண்டும்! நம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும்! அவர்கள் எதிர்காலக் காஷ்மீரத்தின் தலைவர்களாதலால், அவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டும்!'' இப்படியெல்லாம் என்ன என்னவோ பயங்கரமான விஷயங்களை உரத்த குரலில் சொன்னான். அதன் முடிவைக் கேட்க நான் அங்கே இருக்கவில்லை. ஷாப்ராணி ஒரு மூலையில் ஆச்சரியத்துடன் பிரசங்கியின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் அப்படியே பருகுபவள் போல் வாயைப் பிளந்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள். இப்படிப்பட்ட ஆபத்தான இடங்களில் இனிமேல் கால் வைக்காமல் இருப்பதற்காக, அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு அவளுடைய தகப்பனாரிடம் கொண்டு போய் விட்டு உதைக்கச் சொல்ல எண்ணி அவரைத் தேடினால், அந்த மனுஷனும் கூட்டத்துக்கு முன்னால் தரையிலே வயதான பல மனிதர்களின் மத்தியிலே உட்கார்ந்திருக்கிறார்! எனக்கு வந்த கோபம் சொல்லவே முடியாது.

தம்பி, ஒரு குளத்தின் மத்தியில் ஒரு கல்லைப் போட்டால் அதிலிருந்து தோன்றும் அலைகள் சுற்றியுள்ள தண்ணீர் முழுவதையும் குழப்புவதை

நீ அறிந்திருப்பாய். அதைப்போலவே இந்த ஷெர்-இ-காஷ்மீர் என்ற ஒரு சிறு கல், இந்த அமைதியான கிராமக் குளத்தில் ஆத்திர அலைகளைக் கிளப்பி விட்டது. அன்று முதல் எங்களிடையே நிம்மதியும், அமைதியும் அடியோடு ஒழிந்துவிட்டன. எல்லோரும் நிம்மதியின்றியும் குறை கூறிக் கொண்டும், வாழ்க்கைமீது வெறுப்புக் கொண்டும், அதனை மாற்றுவதற்கு நிச்சயம் கொண்டார்கள். நான் அவர்களைப் பார்த்து அடிக்கடி "அடே, உங்கள் தகப்பன், பாட்டன்மார்கள் இதே ராஜாக்கள், இதே உத்தியோகஸ்தர்களின் கீழே இது போன்ற கொடுமைகளையும் பிடுங்கல்களையும சகித்துக் கொண்டு, அவைகளை எதிர்த்தோ ஆட்சேபித்தோ ஒரு வார்த்தையும் பேசாதிருக்கவில்லையா? நீங்கள் எல்லாம் இந்த உலகத்தை மாற்றுவதற்கு அவர்களைவிட, தலையிலே கொம்பு முளைத்தவர்களா, என்ன?" என்று கேட்பேன். ஆனால், என் பேச்சை யாரப்பா சட்டை செய்கிறார்கள்? அந்த ஷெர்-இ-காஷ்மீரின் மந்திரத்தில்தானே அத்தனை பேரும் கட்டுப்பட்டிருந்தார்கள்! என்னுடைய பிதற்றலைக் கேட்டு, உனக்குச் சலிப்பாக இருக்கிறதல்லவா? ஆம், இந்தச் சிவப்பு நிறக் குங்குமப் பூக்களைப் பற்றித்தான் சொல்லுகிறேன். நான் இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்று ஆச்சரியப்படுகிறாயோ? ஷெர்-இ-காஷ்மீரின் அந்தப் பேச்சுக் கிளம்பியிராவிட்டால், இந்தக் குங்குமப் பூக்கள் சிவப்பாக மாறி இருக்கமாட்டா. அது எப்படி என்று கேட்கிறாயா? சொல்லுகிறேன், கேள். ஆனால், நான் பேசும்போது குறுக்கே பேசாமல் பொறுமையுடன் நீ கேட்க வேண்டும். அப்போதுதான், நான் அவை அப்படி மாறியதன் காரணத்தைச் சொல்ல முடியும்.

நம் ஊரிலிருந்து அந்த மனிதன் போய் மூன்று நாலு மாதங்கள்கூட ஆகியிருக்காது.

அதற்குள் அந்த ஷெர்-இ-காஷ்மீரை ராஜா கைது செய்து சிறையில் அடைத்திருப்பதாகச் செய்தி கிடைத்தது. கிடைத்ததும் நான் எனக்குள்ளாகவே "அப்படியானுல் ரொம்ப நல்லதுதான். இனிமேல் அந்த மனிதன் உபதேசித்த பயங்கர விஷயங்களை இவர்கள் மறந்து விடுவார்கள். இந்தப் பிரதேசத்திலே மீண்டும் அமைதி தோன்றும்" என்று எண்ணினேன். ஆனுல் அதற்கு மாருக, கைதியானதற்குப் பின்பு அந்த மனிதனின் பெயர் முன்னைவிட அதிகப் பிரசித்தமாகிவிட்டது. அவனுடைய பெயர் எல்லோர் உதட்டிலும் தவழ்ந்தது. அவனைக் கைது செய்தவர்களை ஜனங்கள் ஆத்திரமாகவும் கோபமாவும் திட்டினுர்கள். 'இந்தச் சர்க்கார் சீக்கிரத்திலே தொலைந்து விடும்'' என்று அவர்கள் பயங்கரக் குரலில் கூறினுர்கள். இவ்விதம் பேசியவர்களிலே என் இரு மகன்களும் முன்னணியில் நின்ருர்கள். சில நாட்களுக்குப் பின்பு, ஷெர்-இ-காஷ்மீரை விடுதலை செய்து விட்டார்கள் என்பதைக் கேட்டதும் சந்தோஷப்பட்டேன். ஏனென்ருல், இன்னும் அவனை அடைத்து வைத்திருந்தால், இந்தப் பையன்கள் சர்க்காரைத் திட்டுவார்கள்; அதை மிராசுதாரோ அல்லது வேறு எந்த உத்தியோகஸ்தரோ கேள்விப் பட்டால், இவர்கள் சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்வார்கள்......

**பை**யன்களின் தகப்பனுர் உயிரோடு இருந்த வரையில், பையன்களை அவர் அடக்கி வைத்திருந்தார். அவரைப் புதைத்து முடிந்ததோ இல்லையோ, குடும்பம் சீர்குலையத் தொடங்கி விட்டது. எங்கள் நிலம் போய்விட்டது என்பதைத்தான் முன்னமே கூறினேனே. தான் பிறருடைய நிலத்தில் போய் ஒரு கூலியாளாக வேலை செய்ய முடியாது என்று பெரியவன் குலாம்நபி கூறிவிட்டான். "இதைவிட நான் ஸ்ரீநகருக்கோ குல்மார்க்கோ போகலாம்;

அங்கே கோடை காலத்தைக் கழிக்கக் காஷ்மீரத்துக்கு வரும் துரைமார்களுக்கு மூட்டை சுமந்து சம்பாதிக்கலாம். அந்த வழியில் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று ரூபாய் கிடைக்கும்'' என்ருன். நான் எவ்வளவோ தடுத்துப் பார்த்தேன். ஆனுல், என் பேச்சை அவன் கேட்பதாக இல்லை. அவன் போனபோது, கிராமத்திலிருந்த எல்லாப் பையன்களையும்விட அவன் தோள்கள் பருத்திருந்தன. ஆனுல், ஆறு மாதம் கழித்து, மூன்று நாள் வீட்டில் தங்குவதற்காக அவன் வந்திருந்தபோது, அவனை அடையாளமே கண்டுகொள்ள முடியவில்லை. அவன் உடம்பு ஷாப்ராணியின் உடம்பைவிட வெளுத்திருந்தது. அவனுடைய கண்கள் குழி விழுந்திருந்தன. தூக்கும் பாரத்தைத் தாங்குவதற்காக நெற்றியில் கயிறு கட்டியதால் ஏற்பட்ட ஆழ்ந்த வடு இருந்தது. இரவு முழுதும் இருமிக் கொண்டே இருந்தான். சில சமயத்தில் திடீரென்று மயக்கம் போட்டுவிடும். "உன் உடம்புக்கு என்ன? ஏதாவது அசௌக்கியமா?'' என்று கேட்டேன். "இல்லை, அம்மா! நீ என்னைப் பற்றிக் கவலைப்படாதே; சமீபத்தில் டாங்மார்க்கிலிருந்து குல்மார்க்குக்கு ஒரு துரையின் மூட்டையைத் தூக்கிச் சென்றபோது, மழையில் நனைந்துவிட்டேன். அதனுல் தடுமன் ஏற்பட்டுவிட்டது. அவ்வளவுதான்......'' டாங்மார்க்குக்கு அவன் திரும்பிப் போனபோது, அவனுடன் என்னுடைய இரண்டாவது மகன் நூரு, தானும் பட்டணத்தில் ஏதாவது வேலை தேடச் செல்வதாகக் கூறிப் போய் விட்டான். "உன் இஷ்டப்படி செய். வயதானவர்களை நீங்கள் மதிக்காத வரையில் நீங்கள் இங்கே இருந்துதான் என்ன பிரயோஜனம்?'' என்று நான் சொன்னேன். சில மாதங்களுக்குப் பின்பு பட்டணம் போய்த் திரும்பிய மிராசுதார் "தாயே! உன் இரண்டாது மகன் நூரு, ஷேக் அப்துல்லாவின் கட்சியில் சேர்ந்து விட்டான். ஜாக்கிரதையாக

இரு. பகலில் படகு ஓட்டிவிட்டு இரவில் பிற தோணிக்காரர்களிடம் அவன் பிரசங்கம் செய்கிறான்'' என்றார். தண்ணீரிலே கிடக்கிற தவளைக்குத் தடுமன் வந்து பிடிச்சுக்கிட்டதாம்' என்ற மாதிரி அல்லவா இருக்கிறது, இந்தப் பயலின் காரியம்! எப்படியிருந்தாலும், அந்த ஷெர்-இ-காஷ்மீர் ஒரு காலத்தில் வாத்தியாராக இருந்தவனும். இந்த விவசாயி பிள்ளையும் தலைவனாக நாடகம் நடிக்கலாமோ? இனி என் முன்னால் இவன் பெயரையே யாரும் உச்சரிக்க வேண்டாம் என்று எல்லோருக்கும் சொல்லி விட்டேன். அந்த நாள் முதல் இவன் எனக்கு மகனுமல்ல; நான் இவனுக்குத் தாயுமல்ல.

ஷாப்ராணியின் சங்கதி என்ன, அவள் என்ன ஆனாள் என்று கேட்கிறாயா? பார்த்தாயா, என் ஞாபகம் தடுமாறிவிட்டது! அவளைப்பற்றிச் சொல்லவே மறந்து விட்டேனே. என்னையும் ஷாப்ராணியையும் கடைசி மகன் காபூராவையும் தவிர, வேறு எவரும் வீட்டில் இல்லை. ஷாப்ராணிக்கு அப்போது வயது இருபதாகியும் கல்யாணமாகவில்லை. கையில் காசில்லாமல், அவளது கல்யாணத்தைப்பற்றி யாரிடம் பேச முடியும்? எப்படித்தான் பேசுவது? அப்போது வருமானமோ பூஜ்யம். அதோடு, எங்கேயோ கடலுக்கு அப்பால் உள்ள கண்காணாத நாட்டில் யுத்தம் மூண்டிருக்கிறதென்றும், சின்னச் சாமான்கள்கூட அபாரமாக விலையேறி விட்டதாகவும் அறிந்தோம். நானும் ஷாப்ராணியும் ஜீவனத்துக்காக வேலை செய்ய நேர்ந்தது. மற்றவர்களின் வயல்களிலே வேலை செய்தோம். விறக விறகு பொறுக்கினோம். ஆற்றிலிருந்து தண்ணீர் சுமந்தோம். சர்க்காவில் கம்பளி நூல் நூற்றோம். இப்படி மிகவும் சிரமப்பட்டு வாழ்க்கை நடத்தினோம். சின்னஞ்சிறிய காபூராவுக்கும் ஏறக்குறைய வயது பத்தாகி

விட்டது. அவனையும் வேலைக்கனுப்ப எண்ணினேன். ஆனால் ஷாப்ராணியோ அதைக்கேட்காமல் அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேண்டும் என்று சொன்னாள். "உனக்குப் பைத்தியமா?" என்று கேட்டேன். ஆனால், அவள் பிடிவாதமாக இருந்தாள். மறுநாள் என்னையும் கேட்காமல் காபூராவைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டாள். நான் என்ன செய்வது? அவ்வளவு பெரிய பெண்ணை எப்படி அடிப்பது? அதோடு அவளை இன்னும் கல்யாணம் செய்து கொடுக்க முடியவில்லையே என்று என் மனசும் உறுத்திக் கொண்டிருந்தது. ஆகவே, பேசாதிருந்தேன். ஆனால், மனசுக்குள் ஏதோ "இன்று முதன் முதலாக இந்தக் குடும்பத்தில் ஒரு பையன் பள்ளிக்கூடம் போயிருக்கிறான். இதிலிருந்து நமக்கு என்ன தீமைகள் வரக் காத்திருக்கின்றனவோ?" என்று சொல்லிக் கொண்டேன். ஆனாலும், ஷாப்ராணி தன் தம்பியின் கல்வியில் அபார அக்கறை காட்டினாள். இரவும் பகலும் அவனுடனேயே இருந்தாள். அவன் பள்ளிக்கூடம் போய்வந்த பின்னும், கொஞ்சம் கூட அவள் அவனை ஓய்ந்திருக்கவிடவில்லை. அவன் வீட்டுப் பாடங்களைச் செய்யவேண்டும்; எழுத்துக்களை அடிக்கடி எழுதி எழுதிக் கையெழுத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும்; ஏதாவது கணக்குகள் புரியாதிருந்தால், உடனே வாத்தியார் வீட்டுக்குப் போய் அவரிடம் அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும், இதைச் செய்ய வேண்டும்; அதைச் செய்ய வேண்டும்—இப்படி யெல்லாம் ஓயாமல் ஷாப்ராணி அலட்டுவாள். அவளால் முடிந்திருந்தால் புத்தகங்களை எல்லாம் கரைத்துக் காபூராவுக்கு ஒரே மூச்சாகக் குடிக்கக் கொடுத்திருப்பாள்.

**வீ**ட்டில் பழமரம் இருந்தால் கல்வந்து விழும் என்பது உனக்குத்தான் தெரியுமே. ஷாப்ராணி

இருபது இருபத்தொரு வயது நிறைந்த யுவதி யாக இருந்தாள். பார்வையில் அவள் ஓர் அப்சர ஸாக இல்லாவிட்டாலும், ஒன்றரைக் கண்ணும், அம்மை வடு முகமும் உடைய அகோர ரூபியல்ல. இந்தக் காலத்துப் பையன்களைப் பற்றி உனக்குத் தெரியாதா? டவுன்களில் போய், சினிமா, பயாஸ் கோப் என்ற இவற்றிலிருந்து என்னென்னவோ கெட்ட பழக்கங்களை எல்லாம் கற்றுக் கொண் டார்கள். ஒரு நாள் அவள் விறகு கொண்டு வரு வதற்காக வெளியில் போயிருக்கிருள் என்று எண்ணியிருந்தேன். அவள் வெறுங்கையுடன் அழுது கொண்டே திரும்பி வந்தாள். காரணம் என்ன என்று நான் கேட்டதற்கு, அவள் பதில் கூருமல் அழுது கொண்டே இருந்தாள். "அடி நாச மாய்ப் போனவளே! பதில் சொல்கிருயா இல்லையா? உன்னை யாராவது திட்டிஞர்களா? அல்லது கீழே விழுந்து ஏதும் காயம் பட்டுவிட் டதா? என்னதான் நடந்தது? சொல்லேன். உனக்குப் புண்ணியமாய்ப் போகும்" என்று கேட் டேன். அவள் கூறிய பதில் என்னைத் திடுக்கிடச் செய்தது. தன் மகளின் வாயிலிருந்து ஒரு தாய் கேட்க விரும்பாத செய்தியை நான் கேட்டேன். "அம்மா, எனக்குக் கல்யாணம் செய்து வை" என்று சொல்லி மீண்டும் தேம்பிஞள். பத்துத் தடவை நான் வற்புறுத்திக் கேட்ட பிறகுதான், நடந்த விஷயத்தை அவள் சொன்ஞள். அவள் விறகு பொறுக்கிக் கொண்டிருக்கையில், பட்ட ணத்திலிருந்து விடுமுறையில் வந்திருந்த மிராசு தாரின் மகன் எங்கிருந்தோ தோன்றி ஷாப்ராணி யைக் கேலி செய்து என்னென்னவோ தகாத முறையில் முட்டாள்தனமாகப் பேசத் தொடங்கி ஞனும். இதற்காக அவனை அவள் கண்டிக்கவே, கண்ணில் தூராகிருதம் ஜொலிக்க அவன் அவ ளுடைய கையைப் பிடித்துக் காட்டுக்கு இழுத்துக் கொண்டு போனுனும். மிகுந்த சிரமப்பட்டு

அவனிடமிருந்து அவள் விடுவித்துக் கொண்டு ஓடோடியும் ஊர் வந்து சேர்ந்தாளாம். வந்து சேர்ந்ததும், அவளுடைய இருதயத்திலிருந்த பீதியினால் கோடை காலத்துக் காற்றில் அசையும் இலையைப் போல் அவள் நடுங்கிக் கொண்டிருந் தாள். அவளது உடல் நடுங்கியதுடன், அவள் கண்களில் இருந்து ஊற்றைப் போல் கண்ணீர் வழிந்தது. அவள் தேம்பி நிறுத்தும் ஒவ்வொரு முறையும் "அம்மா! தயவுசெய்து என்னைக் கல்யாணம் செய்து கொடுத்து விடு; இல்லா விட்டால் என்றைக்காவது என் மானம் தரை மட்டமாகிவிடும்" என்று கெஞ்சிக் கேட்டாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஓர் ஏழைக் கிழவி என்ன செய்ய முடியும் என்று நீதான் சொல்லேன், தம்பி. கையிலே ஒரு காசுகூட இல்லாமல் தன் மகளை ஒருத்தி எப்படி மணம் செய்து கொடுக்க முடியும்? அப்படியிருந்தும், யோக்கியமான யாரா வது ஓர் ஏழைப் பையன் வந்து ஷாப்ராணியை மணக்க விரும்பினாலும் கொடுத்துவிடலாம் என்று எண்ணினேன். அப்படியும்கூட ஐம்பது அறுபது ரூபாயாவது வேண்டாமா? வீட்டிலேயோ விற்பதற்கோ, ஈடு வைப்பதற்கோ ஒரு செம் பாலடித்த காசுகூடக் கிடையாது. இதைப்பற்றி நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது, வெளியூர் மனிதன் ஒருவன் வந்தான். பார்வைக்கு அவன் ஒரு கூலி போல் தோன்றினான். அவன் நெற்றியில் மூட்டை தூக்கியதால் ஏற்பட்ட தழும்பு இருந்தது. அவனது தோற்றத்திலிருந்து அவன் வயது இன்னதுதான் என்று ஒருவராலும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. வயது நாற்பதி ருக்கலாம்; அறுபதுமிருக்கலாம். "குலாம்நபி இதை உங்களிடம் கொடுக்கச் சொல்லித் தந்தான்" என்று சொல்லி, சிறிது தடுமாற்றத்துடன், "நான் அவனுடைய நண்பன் மகமது" என்று முடித் தான். இப்படிச் சொல்லியபடி, கந்தையால் சுற்றிய

ஒரு பொட்டணத்தையும் அவன் என் கையில் தந்தான். அதைத் திறந்தபோது அதில் நோட்டு களாகவும், சில்லறைகளாகவும் கொஞ்சம் பணம் இருந்தது. அதை நான் எண்ணிப் பார்த்ததில், அறுபத்தேழு ரூபாயும் பத்தணுவும் இருந்தது. "குலாம்நபி இதை உங்களிடம் கொடுத்து இதை ஷாப்ராணியின் கல்யாணத்துக்கு வைத்துக்கொள் ளும்படி சொன்னுன்" என்று மகமது சொன்னுன். கடைசியாக, "இந்த ஓடுகாலி மகன், விட்டுப்போன தாயையும் தங்கையையும் இப்போதாவது ஞாப கப்படுத்திக் கொண்டானே!" என்று கடவுளுக்கு நான் நன்றி செலுத்தினேன். மகமதுவின் முகத் தில் ஒரு விசித்திரத் தோற்றம் ஏற்படுவதைக் கண்டு, "குலாம்நபி எங்கே? அவன் ஏன் வர வில்லே?" என்று கேட்டேன். மகமது அடைத்த குரலில் மெதுவாக, பேச விரும்பாதவன் போல் வேண்டா வெறுப்பாக "தாயே, குலாம்நபி இறந்து விட்டான். அவன் ரத்தம் ரத்தமாகக் கக்கிக் கொண்டிருந்தான்" என்ருன். அதற்குமேல் மக மது பேசவில்லே.

தன் மகன் இறந்ததும் ஒரு தாய் எப்படித் துக்கம் அடைவாள் என்பதை ஆண்களால் ஒரு நாளும் புரிந்துகொள்ள முடியாது, தம்பி......அந்த நிகழ்ச்சி ரத்தம் வடிக்கும் அவளுடைய இருத யத்தை வெட்டித் துண்டிட்டு அப்புறப்படுத்தி யது போல இருக்கும்...... பத்துமாத காலம் குழந் தையைத் தாய் கர்ப்பத்திலே சுமக்கிருள். இரண்டு வருஷங்கள் மார்பிலே பாலூட்டி வளர்க்கிருள். அந்தக் குழந்தை தாயின் உதிரத்தில், தசையில் எலும்பிலே உருவாகிறது. அவளுடைய பாலிலே வளர்கிறது. பின்பு குலாம்நபியைப்போல் பருத்த தோள்களுடைய ஆஜானுபாகுவாய்க் குழந்தை வளர்கிருன். பிறகு, துரைமார்களுக்குக் கழுதை போல் மூட்டை தூக்கி ரத்தம் கக்கிச் சாகிருன். அவனுடன் அவள் தாயும் சாகிருள். இந்தச்

சாவுதான் மகா மோசமானது. செத்தும் உயிருடனிருக்கும் இந்த நிலைதான் மிக்க கஷ்டமானது.

எனக்கு அப்போது தோன்றிய உணர்ச்சியை என்னால் வர்ணிக்க முடியாது. ஆனால், சகோதரனின் சாவு ஷாப்ராணிக்கு ஒரு விசித்திர நிலையை உண்டாக்கியது. அவளுடைய இளைய சகோதரனின் படிப்பிலே அவள் மேலும் அதிக அக்கறை செலுத்தத் தொடங்கினாள். ஒவ்வொரு க்ஷணமும் அவனுக்கு அருகிலே இருந்து அவனைப் படிக்கவும் எழுதவும், வீட்டுப் பாடங்களை முடிக்கவும் தூண்டுவாள். மற்றப் பையன்களுடன் ஒரு மணி நேரமாவது விளையாட அவனுக்கு அவள் இடங் கொடுக்கமாட்டாள். ஏதோ அவனுடைய ஒரு வருஷத்திய பாடத்தை ஒரு வாரத்திலே முடிக்க வேண்டும் என்று அவள் அவசரப்படுவது போல் தோன்றும். அப்படி அவள் ஏன் அவசரப்பட்டாள் என்பதே புரியவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை.

ஆமாம்; அதோடு இன்னொரு விஷயம். மகமதுவின் பக்கத்தில் அமர்ந்து தன் அண்ணாவின் கடைசி நாட்களைப்பற்றி அவள் கேள்வி கேட்பாள். "அவனுக்கு எப்போது என்ன வியாதி தோன்றியது? வைத்தியம் ஏதும் நடந்ததா? எல்லாக் கூலிகளுக்கும் மூட்டை தூக்கிகளுக்கும் இந்த மோசமான இருமல் வருமா?" இப்படிப்பலப் பல கேள்விகள் கேட்பாள். மகமதுவும் "பலருக்கு இந்த இருமல் வரத்தான் வருகிறது" என்று கூறவே, "அப்படியானால் நீ ஏன் அந்த வேலைக்குப் போகிறாய்! இங்கேயே இருப்பதற்கென்ன?" என்று இவள் கேட்டாள். எதற்காகத்தான் இப்படி அவனை இவள் கேட்டாளோ தெரியவில்லை.

என் பிடிவாதத்தின் பேரில் மகமது மேலும் மூன்று நாள் தங்கினான். அவன் எங்களை விட்டு நீங்கும்போது நான் அவனை நோக்கி, "தம்பி

மகமது, இந்த வேலை ஆபத்தானதாக இருப்பதால், ஏன் இதை நீ விட்டுவிடக் கூடாது?'' என்றேன். அவன் அதற்கு "எப்படி முடியும் அம்மா? மற்ற வேலைகள் எவையும் செய்து பழக்கமில்லையே! அதோடு எனக்கு என்ன நேர்ந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படத் தாயோ தகப்பனோ எவருமில்லை'' என்ருன். நான் உடனே "ஏன், பெண்ஜாதி? பெண்சாதி கூட இல்லையா?"என்று கேட்டேன். அவன் பெருமூச்சு விட்டுக்கொண்டே ''ரொம்ப நாளைக்கு முன்பே அவள் செத்துவிட்டாள்'' என்று முனங்கினுன். நான் அவனை நோக்கி '' நீ இன்னொரு முறை கல்யாணம் செய்து கொள்வதற்கென்ன?'' என்று கேட்டதன் அர்த்தம் அவனுக்குப் புரிந்ததோ இல்லையோ என்னவோ தெரியவில்லை. அவன் எங்களுடன் தங்கியிருந்த மூன்று நாளும் அவன் சிரித்தே நாங்கள் பார்க்கவில்லை. ஆனுல், நான் இந்தக் கேள்வியைக் கேட்டதும், அவன் கண்கள் பிரகாசமடைந்தன. வறண்ட முகத்திலே ஒரு புன்னகையுடன், '' என்னை யாரம்மா கல்யாணம் செய்து கொள்வார்கள்?'' என்ருன்...... இப்படியாக, ஷாப்ராணிக்கும் மகமதுவுக்கும் மணம் பேசி முடிந்தது.

என்னப்பா தம்பி, கேட்டாயோ? "ஷாப்ராணி என்ன சொன்னுள் என்ரு கேட்டாய்? வாலிபப் பையன்களையும் பெண்களையும் கேட்டுத்தான் கல்யாணம் ஏற்பாடு செய்யப்படுகிறது என்று நினைத்தாயா? இன்னும் பிறை தோன்றிய இருபது நாளையில் ஷாப்ராணியை மகமது அழைத்துச் சென்று விடுவான்'' என்று நான் சொல்லக் கேட்டதும், அவளுக்கு ஏதோ பெருஞ்சுமை நீங்கியதாக அவள் எண்ணுவதுபோல் தோன்றியது.

அவளுடைய கல்யாணத்துக்கான ஏற்பாடுகளில் சில நாட்கள் கழிந்தன. ஆமாம் தம்பி! நாங்கள் ஏழையாக இருந்தாலும் பெண் தன்

வீட்டை விட்டுப் புருஷன் வீட்டுக்குச் செல்லும் போது, துணிமணியும் ஒரு ஜதை வெள்ளியா லான காதணியுமாவது சீதனமாகக் கொடுக்கத் தானே வேண்டும்? மகமது வருவதாக இருந்த அன்று தினம் அதிகாலையில் ஷாப்ராணியை எழுப் பிக் குளிக்கச் செய்து, ஓர் ஊதா அங்கியையும் பச்சை அச்சிட்ட சீட்டி மேலங்கி ஒன்றையும் மணவுடையாக அணியுமபடி சொன்னேன். பழைய காலத்திலெல்லாம் காஷ்மீரப் பெண்கள் இந்த நீண்ட 'பரஹான்' என்ற அங்கியை மட்டும் தான் அணிவது வழக்கம். ஆனால் இந்த ஷெர்-இ-காஷ்மீர்தான் இந்தப் பெண்களை 'ஷால் வார்' என்ற மேலங்கியை அணியும்படி போதித்து விட் டான். அதனால் ஷாப்ராணி என்னையும் மேலங்கி அணியும்படியும் இல்லாவிட்டால் ஷெர்-இ-காஷ் மீர் கோபிப்பாரென்றும் சொல்லுவாள். நிஜமா கவே நான் எந்தப் புலி சிங்கத்துக்கும் பயப்பட வில்லை. ஆனால் எல்லாப் பெண்களும் 'ஷால்வார்' அணிந்திருக்கையில் நான் மட்டும் ஏன் தனித்துக் கர்நாடகமாகத் தோன்ற வேண்டும்? இதை எண் ணித்தான் நானும் மேலங்கி அணியத் தொடங் கினேன்.

அன்று தினம் ஷெர்-இ-காஷ்மீர் கைதியான செய்தியைக் கேட்டதும், அந்த மனிதன் மேல் எனக்கு அசாத்தியமான கோபம் உண்டாயிற்று. என் மகளின் கல்யாண நாளாகப் பார்த்துத்தானா அவன் கைதியாக வேண்டும்? ஊர் முழுதுமே அல்லோல கல்லோலப்பட்டது. 'ஷெர்-இ-காஷ் மீர் கைது செய்யப்பட்டார்! ஷெர்-இ-காஷ்மீர் கைது செய்யப்பட்டார்!!' ஏன் கைது செய்யப்பட் டார் என்று எனக்கெப்படித் தெரியும்? எனக் கென்னவோ அந்த மனிதனை எப்படியும் சிறை யில் வைத்திருந்தால் தேவலை என்று தோன்றி யது. ஆனால், இந்தச் சமயமோ அந்த மனிதன் ராஜாவையே சமஸ்தானத்தை விட்டுத் துரத்த

வேண்டும் என்று பேசத் தொடங்கி விட்டானுமே? "ஆமாம். இந்தக் குட்டிச் சிங்கம் பெரிய ராஜ சிங்கத்தின் வாயில் காலை நுழைத்து மாட்டிக் கொண்டது. இந்த முறை தப்பிக்க முடியாது" என்று எனக்குள்ளாகவே நான் சொல்லிக் கொண்டேன்.

வெளியே தெருவில் ஏகச் சத்தமாகக் கேட்கவும், மகமதுதான் கல்யாண ஊர்வலத்துடன் வருகிறானுக்கும் என்றிருந்தேன். ஆனால் அதற்குப் பதிலாகச் சில பிள்ளைகள் குழப்பம் செய்து கொண்டிருப்பதைக் கண்டேன். அவர்கள் கையில், வெள்ளைக் கலப்பை போட்ட சிகப்புக் கொடியைப் பிடித்துக்கொண்டு, அங்குமிங்கும் ஓடிக்கொண்டு "ஷெர்-இ-காஷ்மீர் சிங்கத்துக்கு ஜே!" என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். என்னுடைய சின்னப்பயல் காபூரா ஒரு செங்கல் திட்டின் மேல் நின்று கொண்டு கையிலுள்ள வெள்ளைச் சுண்ணும்புக் கட்டியால் சுவரில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். அதை எழுதிக் கொண்டே "காஷ்மீரத்திலிருந்து வெளியேறு" என்று அவன் உரக்கப் படித்தான். ஷாப்ராணி கதவோரத்திலிருந்தபடி ஏதோ பெரிய வெற்றி கொண்டவள் போல் சந்தோஷத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

திரும்பி வீட்டுக்குள் போனேனோ இல்லையோ. குழந்தைகளின் பெரும் கூச்சலும் அழுகையும் காதில் விழுந்தது. வெளியே வந்து நான் கண்ட காட்சி என்னைக் கல்லாய்ச் சமைத்து விட்டது. சாலையில் ஒரு காக்கி நிற லாரி நின்று கொண்டிருந்தது. அதிலிருந்து குதித்த சிப்பாய்கள் குழந்தைகளை லத்தியால் தாக்கிக் கொண்டிருந்தார்கள். சில நிமிஷங்களுக்கு முன்னால் காபூரா எழுதிக் கொண்டிருந்த சுவரை நோக்கி ஓடினேன். காபூராவை அங்கே காணோம். ஆனால் அங்கே தரையில் ரத்தம் சிந்திக் கிடந்தது. நான் அந்தத்

திசையை நோக்குகையில், என் கண்மணி காபூரா தூரத்திலே பிரக்ஞையில்லாமல் நெற்றியில் ரத்தம் பெருகும் ஒரு காயத்துடன் விழுந்து கிடந்ததைக் கண்டேன். இன்னமும் தன் வலது கையிலே அந்தச் சீமைச் சுண்ணும்புக் கட்டியை மட்டும் விடாமல் இறுகப் பிடித்திருந்ததையும் நான் கண் டேன்.

நான் போய் என் மகனைத் தூக்கி வீட்டுக்குள் கொண்டு வந்தேன். அவன் தன் அக்காளின் மடியில் படுத்தபடியே உயிரை விட்டான். பிரக்ஞையற்ற நிலையிலும் சுவரில் தான் எழுத முயன்ற ‘காஷ்மீரத்திலிருந்து வெளியேறு’ என்ற வார்த்தைகளை அவன் முணுமுணுத்துக்கொண்டே இருந்தான். கடைசியாக ‘வெளியேறு’ என்று முடித்தானே இல்லையோ, மூச்சு அவன் தொண் டையை அடைத்துக் கொண்டது; சப்தம் வருவ தற்குப் பதிலாக, திறந்த அவனது வாயிலிருந்து ரத்தப்பிரவாகம் வெளியேறியது. ஒரே மாதத்தில் இரண்டாவது தடவையாக நான் மாண்டேன்...... ஆனால், உயிர் போகவில்லை!

அதற்குப் பிறகு என்ன நடந்தது? ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லாத தனித்தனி கோர உரு வங்கள் பல ஒன்று சேர்ந்து பெரிய மகா கோர மான பிண்டமாகும் ஒரு பயங்கர சொப்பனத்தைப் போல்தான் எனக்கு அது ஞாபகம் இருக்கிறது. ஒரு காலத்தில் தாமரை மலர்களைப் போலிருந்த ஷாப்ராணியின் கண்கள் இரண்டும், இரண்டு நெருப்புக் கங்குகள் போல் மாறின. ஒரு சொட் டுத் தண்ணீரும் அவற்றிலே தோன்றவில்லை. அப்படித் தோன்றியிருந்தாலாவது அது அந்தக் கண்களில் எழுந்த கனலை அவித்திருக்கும். ஒரு பெரிய ஊர்வலத்தை—ஊரிலுள்ள ஆண்கள் பெண்களெல்லாம் திரண்ட ஒரு மௌன ஊர் வலத்தை—என் ஷாப்ராணி தலைமை தாங்கி

நடத்திச் சென்றாள். அவள் அப்போது தன் மண வுடையையே அணிந்திருந்தாள். அவளுடைய கண்களிலே கனல் ஜொலித்துக் கொண்டுதான் இருந்தது. அந்தப் பெரிய ஊர்வலம், உழுத வயல்களைக் கடந்து, இதோ உன் நீலநிறக் கார் நிற் கிறதே, இதன் அருகில் நின்று கொண்டிருந்த சிப்பாய்களின் காக்கிநிற லாரியை நோக்கி வந்தது.

காக்கியுடை அணிந்து பயங்கர மீசை உள்ள கன்னங்கரிய சிப்பாய்களின் துப்பாக்கிகள் ஊர் வலத்தை நோக்கிக் குறிவைத்தன. அதிலுள்ள பெண்களையும், ஷாப்ராணியையும் மற்றும் அனை வரையும் நோக்கிக் குறிபார்த்தன.

ஆனால் அவளைக் குறிபார்த்த குருடர்களின் துப்பாக்கி நெருப்பைவிட, ஷாப்ராணியின் அனல் கக்கும் கண்கள் மிகவும் அபாயகரமாகவும் ஆபத் தாகவும் இருந்தன. அதனால்தான், அவள் ஒன் றுக்கும் அஞ்சாது அவர்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தாள்.

ஒன்று, பத்து, பன்னிரண்டு, பதினைந்து தடவைக்கும் மேல் துப்பாக்கிகள் வெடித்தன. எல்லோரும் தட்டுத்தடுமாறி ஓடத் தலைப்பட்டார் கள். இதோ இந்த வயலிலேயே மென்மையான பூமியிலே, தாயின் மடியில் விழுகிற குழந்தை யைப்போல், என் ஷாப்ராணி வீழ்ந்து விட்டாள். நான் அவளை நோக்கி ஓடினேன். ஆனால், நான் போவதற்கு முன்பே அவளுடைய மார்பிலிருந்து ரத்தம் ஆறுகப் பெருக, வறண்டு வேட்கை கொண்ட பூமி அந்த ரத்தத்தைப் பருகிக் கொண் டிருந்தது. பெண்ணின் மார்பிலே பால் சுரப்பதற் குப் பதிலாக, ரத்தப்பிரவாகம் சுரந்தது. அந்த ரத்தமே இந்த நிலத்துக்கு எருவாயிற்று. என் மகள் என் மடியிலே மடிந்தாள். ஆனால், கடைசி வரைக்கும் அவளது உதட்டிலே புன்னகை பூத்

திருந்தது. என்னைப் பார்த்து, "இன்றுதான் அம்மா, என் கல்யாண தினம்" என்று முணு முணுத்தபடியே அவள் உயிர் விட்டாள். அது ஏனோ நான் அறியேன். ஆம், இதோ குங்குமப் பூக்கள் செம்மையாக மலர்ந்திருப்பதைப் பார்க் கிருயே, இதே வயலிலேதான் என் ஷாப்ராணி மாண்டாள்.

இதுதான் அப்பா, என் கதை. ஆனால், நீ எங்கே போய் விட்டாய் ? சொன்னபடியே கதை யின் முடிவைக் கேட்காமலே போய்விட்டா யாக் கும். "இன்னும் கொஞ்ச நேரத்தில் கார் சீர்பட்டு விடும். நீயும் போய் விடுவாய்; கதையும் அரை குறையாய் நின்று விடும்" என்று அப்போதே சொன்னேனே. இந்தச் சாலையில் ஒன்று, இரண்டு, பத்து, இருபது, நூறு என்று மோட்டார்க் கார்கள் பல போய்க்கொண்டுதானிருக்கின்றன. ஏதோ கொஞ்ச நேரம் நிறுத்தினாலும், பின்பு விரைவிலே புழுதியைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டு விடு கிறார்கள். ஆனால், இந்த வயல்களில் உள்ள குங் குமப் பூக்களோ அவற்றை எவரேனும் பறிக்கிற வரையிலும் இங்கேயேதான் இருக்கப் போகின் றன. ரத்தத் துளிகளைப் போன்ற இந்தப் பூக்களை வெயிலில் காய வைத்து உலகத்தின் நாலா திசைக் கும் அனுப்பப் போகிறார்கள். எந்த எந்த ஊர் களிலே சேர்ந்து இதன் நறுமணம் யாருடைய சாப் பாட்டில் கலக்கப் போகிறதோ ? அங்கேயும் உன் னைப் போலவே பலர் "ஏன் இந்த குங்குமப் பூக்கள் ரத்தத்தைப் போல் சிவப்பாக இருக்கின்றன ?" என்று கேட்பார்கள். ஒருவருக்கும் பதில் சொல்லத் தெரியாது. காரணம் என்னைத் தவிர வேறு ஒருவ ருக்கும் தெரியாது.

# என் குடை



மழை தற்காலிகமாக நின்றிருந்தது. ஆயினும் தெருவிலே ஒரு அங்குல உயரத்துக்குத் தண்ணீர் தேங்கியிருந்தது. அடிக்கடி ஓட்டையாகிப் பழுது பார்க்கப்பட்ட எனது கால் 'பூட்ஸ்'களின் சந்து வழியாக மழை ஜலம் புகத் தொடங்கியது. வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து, சிற்சில சமயங்களில் மின்னல்கள் தோன்றி மறைந்தன என்றாலும், மழை மட்டும் பெய்யவில்லை. எனது பகல் சாப்பாடு, பேப்பர்கள், புத்தகங்கள், காய்கறிகள, சில்லறைச் சாமான்கள் ஆகியவற்றைப் பையில் போட்டு, ஒரு கையிலே பிடித்துக்கொண்டு, மறு கையிலே குடையை எடுத்துக் கொண்டு பஸ்கள் நிற்கும் ஸ்டாண்டை நோக்கி விரைவாகப் போய்க்கொண்டிருந்தேன்.

என் குடை! நான் குடை என்றழைக்கும் அந்தப் பொருள் ஒரு காலத்தில் அதன் பெயருக்கேற்ப நன்றாகத்தான் இருந்தது. போர்த்திருக்கும் கறுப்புத் துணியையும், வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் கைப்பிடியையும் தூரத்திலிருந்து பார்ப்பவர்கள் இன்றும் அதைக் குடை என்றே கருதுவார்கள். ஆனால் அதைத் திறந்து விரித்தால்தான்—துருப்பிடித்த கம்பிகளெல்லாம் விரிக்கப்பட்டுக் குடை என்ற முழு உருவத்தைப் பெறும் பொழுதுதான்—அது ஒரு வடிகட்டும் சல்லடையாகக் காட்சியளிக்கும். அதன் ஓட்டைகள் வழியாக மழைத் தண்ணீர் புகுந்து சொட்டுச் சொட்டாக விழும். விழுந்தாலென்ன? தண்ணீர்தானே? அதுவும் எனது குடையால் வடி கட்டப்பட்ட

பரிசுத்தமான தெள்ளிய நீர்தானே? குடை பழசாக இருந்தாலும் நல்ல வடிகட்டியாக உபயோகமாகிற தல்லவா? வீதியில் செல்லும்போது மேல்மாடி ஜன்னல் வழியாகச் சில அம்மணிகள் வீசுகின்ற காய்கறித் தோல்கள், வாழைப் பழத் தோல்கள், முட்டைத் தோல்கள், குப்பைகள், மரத்திலிருந்து விழக்கூடிய பறவை எச்சங்கள் ஆகியவை இக்குடையின் துவாரங்களின் வழியாக ஊடுருவி வர முடியாது. மழைத் தண்ணீர் நுழைவதைப்பற்றி நாம் அக்கறை கொள்ளத் தேவையில்லை. ஒரு பொருள் எல்லா வகையிலும் உபயோகப்பட்டு விடுமா? குப்பை செத்தைகளைத் தலைமேல் விழா மல் தடுப்பதற்கெனத் தயாரிக்கப்பட்ட ஒரு குடை-மழைத்துளி விழாது காக்க வேண்டுமென்று என்ன அவசியமிருக்கிறது? சில சமயங்களில் கடலிலிருந்து நீராவி மேலே செல்லும் பொழுது சிறு மீன்களும் மேலே இழுக்கப்பட்டுச் செல்வ தால் மழை பெய்யும் பொழுது, மீன் மழையாகப் பொழியும் என எங்கோ படித்த ஞாபகம். அங் ஙனம் ஏதாவது நடந்து விட்டால் என் குடை நன்றாகப் பிரயோசனப்படும்! ஏனெனில் அதன் மிகப் பெரிய துவாரத்தின் வழியாகக்கூட மிகச் சிறிய மீனும் நுழைய முடியாது!

நான் இவ்வளவு தூரம் எனது உடைந்த கிழட்டுக் குடையைப்பற்றி பிரஸ்தாபிக்கக் காரண மென்னவாக இருக்குமென நீங்கள் சந்தேகிக்க லாம். காரணம் இக் கதையின் கதாநாயகியே இந்தக் குடைதான். இல்லை, கதாநாயகனென்று நீங்கள் நினைத்துக் கொண்டாலும் சரி. ஏனென் றால் இக்கதையில் மற்றொரு கதாநாயகியும் வரு கிறாள். அல்லது ஒரு கதாநாயகனுக்கும் ஒரு கதா நாயகிக்கும் பதிலாகக் கதையில் இரு கதாநாயகி கள் உள்ளனர் என்றும் நீங்கள் கொள்ளலாம்—குடை ஒரு கதாநாயகி. மற்றொரு கதாநாயகி ஒரு பெண். என்னுடைய நிலையோ இரு பெண்மணி

களுக்கு மத்தியில் அகப்பட்ட கனவானின் சங்கடமான நிலைதான்

கனவான் என்று என்னைக் கூறிக்கொண்டது என் அகம்பாவத்தால் என்று எண்ணிவிடாதீர்கள். எனது துரதிர்ஷ்டத்தால் என்று நினைத்துக் கொள்ளுங்கள். கனவானுய், கனவானின் மகனுய், கனவானின் பேரனுய் இருப்பதெல்லாம் என் துரதிர்ஷ்டத்தால்தான். இதன் காரணமாகத்தான் நான் ஐந்து முறை படையெடுத்தும் பி. ஏ. பரீட்சையில் 'பாஸ்' செய்ய முடியவில்லை. நாலு வருஷமாக நான் ஒரு பத்திரிகாலயத்தில் 'புரூப்' கள் திருத்துபவனுக வேலை பார்த்து வந்தும், ஒரு நாளாவது முதலாளியிடம் சம்பளம் கூட்டித் தருமாறு வாய் திறந்து கேட்டதே இல்லை. பிரஸ் மானேஜர், போர்மென், தலைமைப் புரூப் ரீடர், மற்ற சாதாரண புரூப் ரீடர்கள், காப்பி ஹோல்டர்கள் கூட என்னைத் திட்டினுல் நான் பதில் பேசுவதேயில்லை. காரணம் என் சுய கௌரவமேயாகும்.

ஹார்ன்பிரோடு வழியாக ஒருநாள் நான் நடந்து சென்று கொண்டிருந்த பொழுது, ஒரு குடிகார வெள்ளை சோல்ஜர் தமாஷாகவோ என்னவோ என்னை அறைந்து விட்டான். நானும் தமாஷாக அவனை அறைந்து விடலாமென எண்ணினேன். ஆனுல் எனது பெரிய மனுஷத்தன்மை, அப்படியெல்லாம் செய்து ஒரு காவாலியின் நிலைக்கு என்னைத் தாழ்த்திக் கொள்ளக் கூடாது எனக் கூறித் தடுத்து விட்டது.

எனது போலிக் கௌவரவத்தைப் பற்றி இன்னும் அறிய விரும்புகிறீர்களா? எனக்கு முப்பத்தைந்து வயதாகிறது. எனினும் நான் பிரம்மசாரி. மாதா மாதம் கிடைக்கும் நாற்பது ரூபாயில் மனைவியைச் சம்ரட்சிக்க முடியுமா? வேறு மூன்று கல்யாணமாகாதவர்களுடன் நானும் சேர்ந்து ஒரு அறையை வாடகைக்கு அமர்த்தியுள்ளேன்.

மனைவி யிருந்தாலும் அவளை எங்கே இருக்கச் செய்வது சொல்லுங்கள்? என்னுடைய மூன்று சகாக்களோ சம்பளங் கிடைத்த முதல்நாளே பாரன்ரோடிலுள்ள விபசார விடுதிகளுக்குச் சென்று செலவு செய்துவிட்டு, அடுத்த சம்பள நாளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அன்றும் சம்பள நாளாதலால் 'இன்று அவர்கள் நள்ளிரவுக்குப் பின்னரே வருவார்கள்' என எண்ணினேன். எனது ஜேபியில் பர்ஸ் இருந்தது. அதில் எனது மாதச் சம்பளமான புத்தம் புதிய நான்கு பத்து ரூபாய் நோட்டுகளும், சில சில்லறைக் காசுகளும் இருந்தன. இதில் நானும் ஒன்றோ இரண்டோ அல்லது ஐந்து ரூபாயோ சிற்றின்ப விளையாட்டுக்காகச் செலவழிக்க இயலும். எனினும் அவர்களுடன் நான் என்றும் சென்றதே இல்லை. நான் ஒரு கௌரவமான கனவான் என்று முன்னரே கூறவில்லையா? எனது குடையில் ஓட்டைகள் இருக்கலாம். ஆனால் எனது ஒழுக்கத்தில் ஓட்டைகள் எதுவும் கிடையாது.

இதற்குள் நீங்கள் பொறுமையிழந்து "நீயும், உன் மரியாதைகளும், உன் குடையும் நாசமாய்ப் போக! அந்த 'அவள்' அதாவது கதாநாயகி எங்கே?" என்று நிச்சயமாய்க் கேட்டிருப்பீர்கள். இவ்வளவு நேரம் உங்களை அவளுக்காகக் காத்திருக்க வைத்ததற்கு மன்னிக்கவும். நீங்களோ சில விநாடிகள்தான் காத்திருந்தீர்கள். நானோ மாரிக்கால மாலை நேரத்தில் ஏறக்குறைய ஒரு மணி நேரம் காத்திருக்க நேர்ந்தது. அப்படிக் காத்திருந்தும் பஸ்ஸோ அன்றி அவளோ வந்து சேரவில்லை. தெரு விளக்கொளி இருளைக் கிழித்துக்கொண்டு பாதைகளில் தளும்பிய நீரில் பிரதிபலிக்கும்வரை காத்திருந்தேன். 'கியூ'வில் காத்திருந்த மற்றவர்கள் சலிப்படைந்து டிராம் வண்டி ஒன்றைப் பிடிக்க ஓடினார்கள். நான் மட்டும் எஞ்சி, வருகின்ற பஸ்ஸின் நிழலுக்காக எட்டிப்

பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது அவளுடைய வருகையை என் மூக்குக் கண்டுபிடித்து எனக்கு அறிவித்தது. அவள் வருகையை என் கண்கள் காணவில்லை. அவளது காலடி ஓசையை எனது காதுகள் கேட்கவில்லை. ஆனால், செண்ட், பவுடர் வியர்வை, மழைத்துளி, இளமை ஆகியவை கலந்த லேசான ஒரு வாசனை எனது மூக்கில் தாக்கியது. அவள் நிற்பதை உணர்ந்தேன். எனது தலையைத் திருப்பிப் பார்க்கும்பொழுது என்னருகிலே ஏறக்குறைய என்னைத் தொடுவதைப் போல் அவள் நின்றுகொண்டிருந்தாள். அவளது தோளின்மேல் ஒரு பச்சைப்பை தொங்கிக்கொண்டிருந்தது. அவ்வளவுதான். அவளிடம் குடையோ மழைக்கோட்டோ ஏதுமில்லை. அந்தச் சமயத்தில் மேலே திறப்புள்ள இரட்டை அடுக்கு பஸ் ஒன்று வந்து சேர்ந்தது. கீழ்த் தட்டு நிறைய ஆட்கள் இருந்தனர். அவள் என் பின்னே நின்றிருந்தாலும் ஒருக்கால் ஒரே ஆசனம் இருக்கலாமென நினைத்து, அவள் முதலில் செல்லும்படியாக வழி விட்டேன். மற்றொரு பஸ்ஸிற்காக நான் காத்திருக்கலாமே...நான் ஒரு கனவானல்லவா!

எனது தியாகம் பிரயோசன மற்றதாகி விட்டது. மேல் தட்டுக் காலியாக இருப்பதால் புதிதாக ஏறிய பிரயாணிகள் அங்கு செல்லவேண்டுமெனச் சத்தம் போட்டான் பஸ் கண்டக்டர். மேடையிலும் படிக்கட்டின் அடியிலும் ஜனங்கள் நெருங்கி நின்றுகொண்டிருந்ததுதான் காரணம். அவள் இதை யொன்றையும் லட்சியம் செய்யாது குதிகாலுயர்ந்த பூட்ஸ்களினால் 'டக் டக்' கென்று நான் பின்தொடர மாடிப்படிமேல் ஏறிச் சென்றாள். கண்டக்டர் கூறினது நிஜந்தான். மேல் தட்டில் வேறு ஒருவரும் இல்லை. நானும் அவளுந்தான் இருந்தோம். அவள் இடப்புறமிருந்த பெஞ்சிலே அமர்ந்தாள். நான் அதற்குப் பின்புறத்தில் வலப் பக்கமாக இருந்த ஆசனத்திலே

அமர்ந்தேன். நான் சிவாஜி பார்க்கிற்கு டிக்கட் வாங்கினேன்; அவள் மாஹிமிற்கு வாங்கினுள். அவ்வளவு தூரமும் நாங்கள் இருவர் மட்டுமே தனியாகப் பிரயாணம் செய்யவேண்டி யிருக்கு மென்பதை நினைத்தபோது, என்னையுமறியாது ஒரு குதூகல உணர்ச்சி தோன்றியது. அதற்குப் பின்னர் அந்தக் கண்டக்டர் கீழே போனுளே அல்லது பின்னுலுள்ள ஆசனத்தில் அமர்ந்திருந் தானே மாயமாய் மறைந்து விட்டானே தெரி யாது. அவனை, சிவாஜி பார்க் போய்ச் சேரும் வரை காணவில்லை.

போர்பந்தருக்கு அருகில் பஸ் போய்ச் சேர்ந் ததும் எனது சொட்டைத் தலையின் மத்தியில் ஒரு ஒற்றை மழைத் துளி விழுந்தது. மேலே பார்த் தேன்; மின்னுகின்ற மின்சார கம்பிகளுக்கு மேல் ஆகாயம் கன்னங்கரேலென்று காட்சி யளித்தது. ஆனுல், ஒரே ஒரு துளி மட்டுமே விழுந்தது. அதற்குப் பின் காணேம். சிவாஜி பார்க் போய்ச் சேரும்வரை நாங்கள் நனைய வேண்டியிருக்காது என நினைத்தேன்.

'கேப்பிட்டல் சினிமா'வின் அருகில் லேட்கம் பத்தினடியில் பஸ் நின்ற பொழுது அவளது முகத்தை முதன் முறையாகப் பார்த்தேன். சிவந்த கன்னங்களும், ரத்தம்போல் சிவந்த அதரங்களும், தங்கம்போன்ற தலைமுடியும் பெற்ற சிவந்த நிறத் தினளாக இருந்தாள் அவள். 'இந்த ஐரோப்பியப் பெண்கள்தான் எவ்வளவு அழகாக இருக்கின் றனர்!' என நினைத்து வியந்தேன். அவ்வெளிச் சம் என் முகத்திலும் விழுந்திருக்கவேண்டும். ஏனெனில் அவள் என் பக்கம் திரும்பி 'சீ! இந்த இந்தியர்களின் லட்சணத்தைப் பார், ஆபாசம்' என்று எண்ணியது போல் என்னைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அந்த நேரத் தில் என் உள்ளம் வெம்பியது. எனது பழைய பூட்ஸ்கள், கிழிசல் தைக்கப்பட்ட கோட்டு,

கிழிந்த கமிசு, அவலட்சணமான கால்சட்டை, க்ஷவரம் செய்யப்படாத முகம், வழுக்கைத் தலை, எல்லாவற்றிற்கும் மேலாக எனது கறுத்த முகம், அனைத்தும் என் நெஞ்சை உறுத்தி வாட்டின. அதனால் அவளை மீண்டும் திரும்பிப் பார்க்கத் துணியவில்லை. விரைவில் இவ் வெண்ணங்கள் எனது மனதிலிருந்து மறைந்து கொண்டிருந்தன. அந்நேரத்தில் என் தலையிலே இரண்டு முரட்டுத் துளிகள் விழுந்தன. என் மண்டை மீதுள்ள அந்த வழுக்கல் பிரதேசத்தில் அவற்றிற்குப் பிரியம் தோன்றியதோ, என்னவோ! அவை தங்கள் அண்ணன், தம்பி, தங்கை, மைத்துனன்மார்களை யெல்லாம் அழைத்து வந்து குதித்துக் கூத்தாடத் தொடங்கின. 'கிராபோட்' மார்க்கெட்டிற்குப் போய்ச் சேரும் தருணத்தில் நல்ல மழையே பெய்யத் தொடங்கியது.

என்னைவிட, அவள் நனைவதுதான் எனக்குச் சங்கடமாக யிருந்தது. அவள் என்னை வெறுப்புடன் நோக்கியிருந்தாலும்கூட அவள் ஒருபெண்; அதுவும் அழகிய பெண்ணல்லவா! நான் மீண்டும் அவளைப் பார்த்தபொழுது அவள் என்னைப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். இம்முறை அவள் கண்களிலே வெறுப்புணர்ச்சி இருக்கவில்லை. நான் கற்பனை செய்தேனோ அல்லது அவள் உண்மையாகவே சிரிக்கத்தான் செய்தாளோ தெரியாது.

"உங்கள் குடையைத் திறப்பதற்கென்ன?" என்று இனிய நெகிழ்ந்த குரலிலே யோசனை கூறினாள். குடையென்று அவள் கருதிய பொருள் உண்மையில் ஒரு வடிகட்டிதான் என்று அவளிடம் எப்படிக் கூறுவது...?

"குடை? ஆமாம்; குடைதான்!" என்று கூறிச் சங்கடத்துடன் உடைந்த துருப்பிடித்த சட்டத்தை விரித்தேன். வாழ்க்கையின் விசித்திரங்களை ஆராய்ந்து கொண்டிருந்ததால் தம்

கையிலுள்ள குடையை மறந்த, ஞாபக மறதியுள்ள தத்துவப் பேராசிரியர் தோரணையில், "ஞாபகப் படுத்தியதற்காக மிக்க வந்தனம்" என்றேன்.

மழை பெய்துகொண்டிருந்தது. அவள் தெப்பமாக நனைந்துகொண்டிருக்க நான் மட்டும் கொஞ்சங்கூட வெட்கமின்றி அந்தக் குடையின் கீழ் அல்லது வடிகட்டியின் கீழ்—நீங்கள் எப்படி அழைத்தாலும் சரி—அப்பொருளின் கீழே அமர்ந் திருந்தேன். 'ஒன்றுமில்லாததற்கு இது ஒரு வகையில் பாதுகாப்புத்தானே, ஏன் நீங்களும் இந்தக் குடையின்கீழே வந்து அமர்ந்துகொள்ளுங் களேன், என்ற வார்த்தைகள் பலமுறை எனது நாக்கு நுனிவரையில் தோன்றி அப்படியே தடை பட்டு நின்றுவிட்டன. ஒருவேளை மழை வார்த் தைகளை அடித்துக்கொண்டு போய்விட்டது போலும். எனது வெட்கம் அழகிலே சொக்கிப் போனது. அவள் ஏதாகிலும் பதில் சொல்லிவிடு வாளோ என்ற பயம் என்னைப் பேசவிடாமல் செய்துவந்தது. என்ன இருந்தாலும் அவள் ஒரு துரைசானி......நானோ வேற்றுப் பெண்களை ஏறிட்டுப் பார்க்காத கௌரவமுள்ளவன். அவள் அங்கிருப்பதையும், அவள் நிலைமையையும் உண ராதவன்போல், மழைத்திரை ஊடே லேசாகத் தென்பட்ட மகமதலி ரோடிலுள்ள உயர்ந்த புதுக் கட்டிடங்களையே கவனித்துக் கொண்டிருந் தேன்.

அப்பொழுது அவள் என்னருகே வந்து நெருங்கி உட்கார்ந்த வாசனை என் மூக்குக்குப் பட்டது. மெல்லிய உடல் எனது இடது தொடை மேல் லேசாக உராய்ந்து அவளிருப்பதை மேலும் வலியுறுத்தியது.

"வாருங்கள், வாருங்கள்! நன்றாக அமர்ந்து கொள்ளுங்கள்" என்றேன். பக்கத்தில் சாய முயன்றுகொண்டே குடையில் நல்ல பகுதியை அவள் பக்கம் நீட்டி என் பக்கம் பொத்தல் பகுதி

யைப் பிடித்துக்கொண்டேன்; அதனால் அவள் மீது மழைத் துளி அவ்வளவாக விழவில்லை.

"உங்களுக்கு நான் என்ன சொல்லி வந்தனம் செலுத்துவது?" என்று உண்மையிலேயே நன்றி யறிதலுடன் கூறினாள். "நீங்கள் உதவியிரா விட்டால் என் எலும்புகூடத் தெப்பமாக நனைந் திருக்கும்" என்றாள் தொடர்ந்து.

பேச்சு இப்பொழுது ஆரம்பமாகி விட்டதால் நாணத்தை விடுத்து மிகவும் சகஜமாகப் பேசத் தொடங்கி விட்டோம்.

"நீங்கள் எங்கு வேலை செய்கிறீர்கள்?"

"நான் பத்திரிகை ஆபீசில் வேலை செய்கி றேன்" என்றேன்.

ஆசிரியரா அல்லது 'புரூப் ரீடரா' என்பதை விரித்துக்கூறாமல் பொதுவாகக் கூறிவைத்தேன். "நீங்களும் வேலை செய்கிறீர்களா?" என்று நான் கேட்டேன்.

அதற்கு அவள் "ஆமாம்; நானும் ஏதோ செய்கிறேன், அதையும் ஒரு வேலை என்று கூடச் சொல்லலாம்!" என்றாள் ஒருமாதிரி அலுத்துக் கொண்டு.

நான் பின்கண்டவாறு யோசிக்கலானேன். 'இவள் சுருக்கெழுத்து எழுதுபவளாக இருக்க வேண்டும். அல்லது நாள் முழுதும் ஒரு 'டைப் படிக்கும் மிஷின் முன் அமர்ந்து டைப் அடித்து விட்டுச் செல்லும் காரியாலயக் காரியதரிசியாக இருக்க வேண்டும். இந்த ஐரோப்பியப் பெண் களைப்பற்றி நம்மவர்கள் வீண் அவதூறுதானே கூறுகிறார்கள்? இவள் எவ்வளவு அன்புடன் என்னுடன் பழகுகிறாள்?'

அந்தச் சமயத்தில் மழை பலக்க ஆரம்பித்து விட்டது. "உங்கள் உடை வீணாகப் போய் விடுமே. பஸ் கம்பெனி கொடுத்துள்ள கான்வாஸ் துணியால் உங்கள் முழங்கால்களை மூடிக் கொள்ளுங்களேன்?" என்றேன் நான். ஒரே

மறைப்பின்கீழ் இருவர் கால்கள் புகுந்துகொண்டு உராய்தல் சிறிது இருக்கத்தானே செய்யும். அவளது பட்டுப் போன்ற மெல்லிய தொடைகள் என்மேல் படவும் எனது உடலிலே மின்சாரத் தாக்குதல் ஏற்பட்டதுபோல் இருந்தது.

அப்பொழுது கடலிலிருந்து ஒரு பெருங் காற்று வந்து கொண்டிருந்தது. அந்தக் குடை எந்த நிமிஷத்திலும் 'பாரச்சூட்'டாக மாறி என்னை யும் சேர்த்துத் தூக்கிக் கொண்டு பறந்து ஓடும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. எனது வலது கையால் உடைந்த கைப்பிடியை இறுகப் பிடித்துக் கொண்டு இடது கையால் சட் டத்தைத் தாங்கி, காற்று, குடையின் உள்ளே புகாமல் பாதுகாத்துக் கொண்டேன. அப்போது எனது வலது கையின் அருகிலே மெல்லிய கை யொன்று பட்டது. குடையைச் சரிசெய்ய அவ ளும் உதவினுள். அவளது இடதுகை எனது கை யுடன் குடையின் பிடியைச் சேர்த்துப் பிடித்தது. வலது கையோ சட்டத்தைத் தாங்குவதற்காக என் தோள்களைத் தழுவும் முறையில் வளைந்திருந் தது. ஆஹா! அதுதான் என் வாழ்க்கையிலேயே இன்பகரமான நேரமாகும்.

நான் ஒரு கனவான் என்பது உண்மைதான். எனினும் காதல் உணர்ச்சி இல்லாத மரக் கட்டை யல்லவே நான்? அந்தச் சந்தர்ப்பம் வருணிக்க முடியாத அளவு இன்பகரமானது என்று என் மனதில் பட்டது. ஒரு ஆடவனும் பெண்ணும்—அதுவும் ஒரு அழகிய பெண்—இருவரும் ஒரே குடையின் கீழ் உடல் உராயும்படி உட்கார்ந்திருந் ததை வர்ணித்து முடியுமா?

தினசரிப் பத்திரிகையில் 'புரூப்ரீடரா'க இருந் ததால் எனக்கு அரசியலிலும் அக்கறை யுண்டு. சுதந்திரம், சர்வதேசீயம், அட்லாண்டிக் சாஸனம், சான்பிரான்சிஸ்கோ, அணுகுண்டு இவ்வார்த்தை களை நன்கு அறிவேன். ஆயிரக்கணக்கான அர

சியல் கட்டுரைகள், அறிக்கைகள் ஆகியவற்றின் புரூப்களைப் பார்த்திருக்கிறேன். பயிற்சி பெற்ற விசேஷ நிருபர்களைப் போல் எல்லா சீதோஷ்ணங்களிலும் அரசியல் முக்கியத்துவம் ஏதாவதொன்று தோன்றுவதைக் காணமுடியும். உதாரணமாக வானம் மேகங்களினுல் சூழ்ந்திருந்தால், சிம்லா முக்கூட்டு மகாநாடு தோல்வியடையக்கூடும் என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன என்றும், ஆனுல் சிம்லாக் குன்றுகளின் உச்சியில் சூரியன் நன்கு பிரகாசித்தாலோ அரசியல் அரங்கத்திலே வெற்றியின் சின்னங்கள் தோன்றும்...என்றும் நிருபர்கள் எழுதுவது போல, அவ்வழகிய அணங்கினை நான் சந்தித்தது ஏதாவது அரசியல் முக்கியத்வம் உள்ளதாக இருக்குமோ என எண்ணினேன். உடனே என் உள்ளத்தே மின்னலைப் போன்ற எண்ணம் தோன்றி மெல்லிய குரலில் முணுமுணுத்தது. "எல்லாம் நன்ருக விளங்கி விட்டது. பூட்ஸ்களிலும் தலைவிதியிலும் ஓட்டைகள் நிறைந்த நீதான் ஏழை இந்தியா. இவ்வலங்காரியோ இந்தியர்களின் இதயத்தை ஆட்சி செய்யும் பிரிட்டானிய ராணி; இம்மழையும் காற்றும் பாசிஸ யுத்தப் புயல்கள். இக்கொடிய புயலினின்று காப்பாற்றும் இந்த உடைந்த குடைதான் இந்தியாவையும் பிரிட்டனையும் காப்பாற்றுகின்ற எளிய யுத்த உதவி நிதி......" என்று ஏதேதோ சிந்தித்துக் கொண்டு வந்தேன்.

பஸ் அப்பொழுது பேண்டி பஜார் வழியாகச் சென்று கொண்டிருந்தது. வீதியின் குறுக்கே 'பாகிஸ்தான் இன்றேல் சாவு' என்று பொறிக்கப்பட்ட நீண்ட பதாகை கட்டப் பட்டிருந்தது. மழையினுல் மை கலந்து வார்த்தைகள் அழிந்திருந்தன. பாகிஸ்தானுக்குத் தாடி வளர்ந்தது. 'சாவு' என்ற வார்த்தை மிகவும் பயங்கரமாகத் தோன்றியது. நான் எனக்குள்ளாகவே 'எனக்குச் சாவு என்ருல் பயம். ஆகையால் அதற்குப் பதில்

பாகிஸ்தான் கொடுங்கள்' என்று கூறிக் கொண்டேன். எனது செய்திப் பத்திரிகை உள்ளம் 'நீ ஹிந்துஸ்தான், இந்தப் பெண்தான் பாகிஸ்தான். இக்குடைதான் இருவரையும் காக்கும் இமாலயம்...' என்றது.

புயல் ஓய்ந்ததையும் அவள் தனது முகத்தை எனது தோளில் சாய்த்து மெல்லிய பூனைபோல் தூக்கம் போடுவதையும் உணர்ந்தேன். இவ்வின்ப உணர்ச்சியில் அரசியல் கற்பனைகளெல்லாம் மறைந்தன. அரசியல் அர்த்தங்கள் கண்டுகொண்டிருந்ததற்காக என் மனதை நானே திட்டிக் கொண்டேன். நாங்கள் இருவரும் இந்தியா இங்கிலாந்தின் சின்னங்களோ அன்றி ஹிந்துஸ்தான் பாகிஸ்தான் சின்னங்களோ, அல்ல. சிரஞ்சீவிக் காதலின் சின்னங்களேயாம். நாங்களிருவரும் ரோமியோவும் ஜூலியட்டும் போல். லைலாவும் மஜ்னுவும் போல். ஹரினும் பர்ஹாதும் போல்......

பைக்கல்லா, லால்பாம், பரேல் தாதர் ஆகிய இடங்களின் வழியாக பஸ் ஓடிக்கொண்டிருக்கையில் மேற்கண்ட இன்ப உணர்ச்சி ஏற்பட்டது. மழையும் நின்றிருந்தால் அவளை அசைக்காது குடையை மூடினேன்' 'கிரீச்'சென்று கியர் போட்டுக்கொண்டு பஸ் திலகர் பாலத்தில் ஏறும்பொழுது, அவள் கண்களை மெதுவாகத் திறந்து, சோர்வுடன் கொட்டாவி விட்டுக் கொண்டே "உங்கள், உதவிகளுக்கெல்லாம் என் நன்றி..." என்றாள். 'உதவிகளுக்கெல்லாம்' என்பதை அழுத்திக் கூறினாள். 'என் வாழ்க்கையிலேயே கிடைக்காத இன்பப் பொழுதிற்காக நானல்லவா நன்றி செலுத்த வேண்டும்?' என்று பதில் கூறலாமா என எண்ணினேன். அது அதிகப் பிரசங்கித்தனமாக இருக்குமென நினைத்து, "அதைப்பற்றிப் பரவாயில்லை. நீங்கள் ஒன்றும் நன்றி செலுத்தவேண்டாம்" என்று கூறினேன். சிவாஜி பார்க்கின் முனையில் பஸ் வந்து கொண்டிருந்தது. அடுத்தாற்

போல நிற்கும் இடத்தில் நான் இறங்க வேண்டியதை எண்ணியதும் என் மனம் சோர்வடைந்தது. எனக்கென்னவோ அவளது பெயர், விலாசம், அடுத்த முறை எங்கு சந்திக்கலாம் என்றெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைதான். ஆனல் முப்பத்தைந்து ஆண்டுகளாகக் கனவாளுக வளர்க்கப்பட்ட எனக்கு அவையெல்லாம் கேட்க வாயே வரவில்லை.

"ஹரி வாஸ்!" என்று கீழே இருந்து பஸ் கண்டக்டர் கத்தினுன். பஸ்ஸும் நின்றது.

அவளது அழகிய முகத்தைக் கடைசியாக நோக்கி "வந்தனம்" என்று கூறிவிட்டுக் கீழே இறங்கினேன்.

ஏனே எனக்கு அப்பொழுது வீட்டுக்குப் போகத் தோன்றவில்லை. தெரு முனையிலே அந்த நேரத்திலும் திறந்திருந்த ஈரான் ஹோட்டல் என் கண்ணிற்பட்டது. மழையில் நனைந்ததற்குப் பின் ஒரு கப் தேநீர் அருந்தினுல் நன்ருக இருக்குமென எண்ணினேன். அத்துடன் இன்னெரு நாளைக்குக் கிடைக்க முடியாத அந்த இன்பகரமான நேரத்தைப் பற்றிச் சிறிது நேரம் சிந்தித்துக் கொண்டு இருக்கலாம் என்றும் எண்ணினேன்.

தேநீரும் லேசான சூடாக இருந்ததால் ஒரே நிமிஷத்தில் குடித்து விட்டேன். பிறகு குடையைக் கையில் பிடித்துக்கொண்டு வெளியே கிளம்பினேன்.

"என்ன ஐயா, தேநீருக்குக் காசு எங்கே?" என்று ஹோட்டல் பையன் கத்தினுன்.

வெட்கமாகப் போய்விட்டது. எனது ஞாபக மறதியை நொந்து கொண்டேன். என்னைக் கேவலமாக அல்லவா இந்தப் பையன் நினைப்பான்? எனது உயர்வைக் காண்பிக்க அவனுக்கு ஒரு அணு இனுமாகக் கொடுத்து விட்டால் போகிறது என நினைத்தேன். அதுவும் இன்று விசேஷ நாளா

தலால் சிறிது அதிகமாகக் கொடுத்து விட்டால் தான் போகிறது......!

என் கோட்டின் உட்புற ஜேபியில் கை சென்றது. ஆனால் அங்கு என் பர்ஸ் இருக்கவில்லை. வேறு எந்த ஜேபியிலும் காணோம்.

'உதவிகளுக்கெல்லாம் என் நன்றி' என்று 'உதவி' என்பதை அழுத்திக்கூறிய இனிய குரல் காதிலே தொனித்தது. அதே குரல் 'ஆமாம், அதையும் ஒரு வேலை என்று சொல்லலாம்' என்று கூறியது என் காதில் மறுபடியும் கேட்டது.

அடுத்த மேஜையில் ஒரு வாடகை மோட்டார் ஓட்டி தேநீர் அருந்திக் கொண்டிருந்தான். வெளியே அவனது கார் எஞ்சின் வேலை செய்தபடியே நிறுத்தப்பட்டிருந்தது. நான் நினைத்திருந்தால் அந்த டாக்ஸியில் குதித்து மஹிமிற்குப் பஸ் போய்ச் சேருவதற்கு முன்னரே அந்தப் பெண்ணைக் கைதுசெய்து, என் ஆஸ்தி முழுதும் கொண்ட பர்ஸை மீட்டியிருக்கலாம். ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. பின்னால் செய்யவும் முடியவில்லை. ஏன்? அவள் துரைசானி; நானோ ஒரு கனவான். இத்தகைய வீண் கௌரவந்தானே என்னையும், என் தேசத்தையும் நாசமாக்குகிறது என்று முன்னரே நான் உங்களுக்குக் கூறவில்லையா?

# சிட்டுக்குருவிகள்



ஊருக்கு மேற்கே இருக்கும் மாந்தோப்பின் பின்னே சூரியன் மறைந்து கொண்டிருந்தான். ரகீம்கான் வயலிலிருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். ஐம்பது வயதாகியும் பலங் குன்றாத தன் தோளில் கலப்பையைச் சுமந்துகொண்டு, இரண்டு எருதுகளையும் ஓட்டிக் கொண்டு அகங்காரமும் சிடுசிடுப்பும் முகத்திலே விளங்க, கிராமத்தின் முக்கிய வீதி வழியாக அவன் நடந்து கொண்டிருந்தான். மாலை நேரத்தில் ஹுக்கா குடிப்பதற்காகச் சாவடித் திண்ணையில் உட்கார்ந்திருந்த சில விவசாயிகளின் குதூகலப் பேச்சு, இவனைக் கண்டதும் ஒடுங்கிக் கிசுகிசுப்பாக மாறியது.

இவனுடைய உருவமும் காலடி ஓசையும் மறைந்ததும், கல்லூ என்பவன் தான் பிடித்திருந்த ஹுக்காவை அடுத்தவனுக்குக் கொடுத்துக் கொண்டே, "அதோ போய்விட்டான் கிராதகன்!" என்றான்.

அவன் கூறியதைத் தொடர்ந்து மிட்டாய் வியாபாரி நன்ஹா என்ற பொதுக்கையன், "ஆள் நாளுக்கு நாள் வரவர மோசமாகி வருகிறான். நேற்று இவனுடைய மாட்டின் மேல் ஏதோ ஒரு சின்னக் கூழாங்கல்லை வீசி விட்டதாம், அந்த அப்பாவி ராமுவின் குழந்தை. அதற்காக அந்தக் குழந்தையை இவன் அடித்து நொறுக்கி விட்டான்!" என்றான்.

ராம்நாத் என்ற கிராமாதிகாரியும் ரகீம்கானின் இன்னும் சில கொடுமைகளைத் தானாக வலிய

விரித்துரைக்கலானான்: "ஆமாம், அன்று ஒரு நாள் என் குதிரை என்னவோ தவறுதலாக அவன் வயலில் நுழைந்து விட்டது. அதற்காக அதை இவன் கிட்டத்தட்டக் கொன்றே போட்டான்" என்றான் ராம்நாத். ராம்நாத்தின் குறும்புக் காரப் பையன்கள் வேண்டுமென்றே இந்தக் குதிரையை அப்படி ரகீம்கானின் வயலிலே நுழைய விட்டார்கள். இதை மட்டும் ராம்நாத் அந்த இடத்தில் குறிப்பிடவில்லை. நியாயந் தானே!

கடைசியில், நரைபழுத்த புரோகிதன் தன் பொக்கை வாயைத் திறந்து வழக்கம்போல் "ஹரி ராம்! ஹரிராம்!" என்று கடவுள் நாமத்தை உச்சரித்துவிட்டு, "இவனைப் போன்ற கொடியோனை என் ஆயுளில் நான் பார்த்ததே இல்லை. சின்னஞ் சிறு குந்தையாக இருந்தாலும் சரி; வாயில்லாப் பிராணியாக இருந்தாலும் சரி; இவன் கொஞ்சங் கூட ஈவு இரக்கம் காட்டுவதே இல்லை. இவனுடைய பிள்ளைகள் வீட்டை விட்டே ஓடியதில் என்ன ஆச்சரியம்?" என்றான்.

இந்தப் பேச்சுக்கெல்லாம் பாத்திரமாக இருந்த ரகீம்கான், வீதியிலே வரிசையாக நின்ற வீடுகளையெல்லாம் கடந்து, தூரத்தில் தன்னந்தனியே இருந்த தன் குடிசைக்குப் போய்ச் சேர்ந்தான். தாழ்ந்திருந்த அந்தக் குடிசையின் சுவர்மேல் கலப்பையைச் சாத்தி வைத்துவிட்டுக் குடிசையின் முன்னிருந்த முளைகளில் மாடுகளைக் கட்டிவிட்டுத் திரும்பினான்.

வீட்டுக்குள் நுழைய அவன் ஓர் அடியெடுத்து வைத்தபோது, "தம்பீ ரகீம்கான்!" என்று யாரோ மெல்லிய குரலில் கூப்பிட்ட சப்தம் அவன் காதில் விழுந்தது.

அண்டை வீட்டிலிருந்து வெளியே வந்த கிழவியின் குரல்தான் அது. ரகீம்கான் அவளை நோக்கி, "ஏன்? என்ன?" என்று முரட்டுக் குரலில்

கேட்டான். அவள் பதில் சொல்லத் தயங்குவதைக் கண்ட ரகீம், "என்ன விஷயம்? நான் உன்னைத் தின்றுவிடமாட்டேன். பயமில்லாமல் சொல். வாய்தாப் பாக்கிக்காக உன் மகனை மறுபடியும் கைது செய்து விட்டார்களா? அல்லது உன் மருமகள் இன்னுமொரு குழந்தையைப் பெற்றுவிட்டாளா?" என்று கேட்டான்.

அவன் பேசி ஓய்ந்ததும் கிழவி தன் முழுத்தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டு, "உன் சம்சாரம்ம்ம்..." என்று என்னவோ இழுத்தாள்.

"...ஓடிப் போய் விட்டாள்" என்று ரகீமே சட்டென்று அந்த வாக்கியத்தைப் பூர்த்தி செய்தான். 'என் ஹேஷ்யம் சரிதானே!' என்று கேட்பது போல் புன்னகையும் பூத்தான்.

அவன் மனைவி ஓடியதற்குத் தானே காரணம் என்று நினைத்து விடுகிறானோ என்னவோ என்ற பயத்துடன் சமாதானம் கூறுபவள் போல், "இல்லை, இல்லை. துர்ப்பூரிலுள்ள அண்ணன் வீட்டுக்குத்தான் போயிருக்கிறாள். சில நாட்களில் வந்து விடுவாள்" என்றாள் கிழவி.

அவள் கூறியதை அலட்சியம் செய்பவன் போல் "பூ!" என்று சொல்லிக் கொண்டே ரகீம் வீட்டுக் கதவைத் திறந்தான். தன் மனைவி திரும்பியே வரமாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும்.

இருளடைந்த குடிசைக்குள் கோபம் பொங்க நுழைந்து, கட்டிலின்மேல் அமர்ந்தான். மூலையில் ஒரு பூனை 'மியா மியா' என்று கத்தியது. தன் கோபத்தை யார்மேலடா காட்டுவது என்று காத்துக் கொண்டிருந்த அவன் அந்தப் பூனையைத் தூக்கி வாசலிலே வீசி எறிந்துவிட்டுக் கதவைப் படார் என்று ஓங்கிச் சாத்தினான்.

புழுதி படிந்த அவன் கை கால்களைக் கழுவிக் கொள்ளத் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கவும், அவன் பசி தீர உணவு படைக்கவும், அவன்

வையும் வசவுகளை வாங்கிக் கட்டிக் கொள்ளவும் இருந்து வந்த ஒருத்தி, இப்போது அங்கே இல்லா மற் போனது ரகீம்கானுக்குச் சங்கடமாக இருந் தது. அவனுடைய மனைவி அங்கே இருந்த காலத் தில் அவனுக்கு எப்போதும் கோபந்தான்; அவள் இல்லாத இப்போது அவன் கோபம் இன்னும் அதிகமாயிற்று.

சாப்பிடாமல் தூங்குவது என்ற உறுதியுடன் கட்டிலில் சாய்ந்த அவன் தனக்குத்தானே, ''கடைசியில் அவளும் போய்விட்டாளாக்கும்!'' என்று கூறிக் கொண்டான். தனது முப்பது வரு ஷக் குடும்ப வாழ்க்கையில், என்றைக்காவது ஒரு நாள் அவள் தன்னைவிட்டுப் போய்விடுவாள் என்றே அவன் எப்போதும் சந்தேகப்பட்டு வந் தான். ஆறு வருஷங்களுக்கு முன் ஒரு நாள் அவ னுடைய மூத்த மகன் பூந்து, என்றைக்கும் இல் லாத அவ்வளவு அதிக அடி வாங்கினான். உடனே அவன் வீட்டை விட்டே வெளியேறி எங்கேயோ ஓடிவிட்டான். அதற்கு மூன்று வருஷங்களுக்குப் பின்பு இளையவனான நூருவும் அண்ணன் போன வழியே போய்விட்டான். அது முதலே தன் மனைவியும் அவளுடைய அண்ணன் வீட்டுக்குப் போய்விடுவாள் என்று ரகீம்கான் சந்தேகித்து வந்தான். இன்று அவள் அப்படியே போய்விட்ட தால், அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. அவன் தன் மனைவியிடம் ஒரு நாளும் அன்பு செலுத்திய தில்லை. எனவே அவள் போனதற்காக ரகீம் துக்கப்படவில்லை. என்றாலும், வீட்டிலுள்ள ஏதோ ஓர் உபயோகமான தளவாடம் காணமற் போனதுபோல் அவனுக்குச் சங்கடமாக இருந்தது; அவ்வளவுதான். அவளும் போனபின்பு, புண்பட்ட தன் மனவேதனையை அவன் இனி யாரிடம் காட்டு வது? குடும்பம், சமூகம், வாழ்க்கை ஆகிய எல்லா வற்றின்மீதும் தான் கொண்டிருந்த ஆத்திரம் முழு வதையும் அவன் தன் மனைவிமீதே காட்டி வந்தான்.

அவள், அவை அனைத்துக்கும் பொதுவான ஒரு சின்னமாகவே அவனுக்குத் தோன்றினாள்.

அவன் வாலிபனாக இருந்தபோது குஸ்தி, கவாத்து, நீச்சு முதலிய தேகாப்பியாச விளையாட்டுக்களில் வல்லவனாக இருந்தான். இவற்றில் ஊரிலேயே அவனை மிஞ்சியவர் எவருமில்லை. அந்தக் காலத்தில் ஒரு சர்க்கஸ் கம்பெனி ரகீமின் கிராமத்துக்கு வந்து சிறிது காலம் தங்கியது. அதில் சேரவேண்டும் என்று ரகீமுக்கு ஆசை தோன்றியது. சர்க்கஸில் சேர்ந்தால் தனக்கு இஷ்டமானபடி பிரயாணம் செய்யலாம், புகழ் கிட்டும் என்று அவன் எண்ணினான். தவிர, உள்ளூர் மார்வாடி ராம்சரணின் மகளான ராதாவிடம் அவனுக்கு ஆத்மார்த்தமான காதல் பிறந்துவிட்டது. ஒருநாள் தான் புரிந்த ஒரு குஸ்திப் பந்தயத்தை ராதா கவனித்துக் கொண்டிருந்ததை ரகீம் கண்டான். எதிரியைப் புறமுதுகு காட்டச் செய்து வெற்றி வீரனாக ரகீம் நின்ற போது, ராதா காதல் பொழியும் கண்களால் அவனையே கூர்ந்து நோக்கினாள். ரகீமின் வாழ்க்கையில் அதுதான் இன்பமான நாளாகும். அதற்குப் பின்பு சில சமயங்களில் இருவரும் சிறிது சிறிது நேரம் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததுண்டு. அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம். இந்த எழுத்து வாசனையற்ற வாலிபன் தன் காதலைத் தட்டுத் தடுமாறிக்கொண்டு உணர்ச்சி பெருக அவளிடம் கூறியிருக்கிறான். ரகீமின் இந்த இரண்டு ஆசைகளையும் அவனுடைய பெற்றோர் கொன்று விட்டார்கள். கௌரவமான விவசாயிக்குச் சர்க்கஸ் தொழில் மிகவும் கீழ்த்தரமானது என்று அவர்கள் கூறினார்கள். ரகீமின் தகப்பன் பாட்டன் பூட்டன் எல்லோரும் நிலத்தில் உழுதே பிழைத்தார்களாகையால், ரகீமும் அதே தொழிலைச் செய்ய வேண்டும் என்றார்கள். ராதாவை மணப்பதற்கு என்ன ஆட்சேபம்? ஒரு ஹிந்துப் பெண்ணை—ஒரு காபிரை—ஒரு முஸ்லிம் வாலிபன்

மணப்பது மதத்துக்கு விரோதமான கேவலச் செய்கை என்று சொல்லி அவர்கள் தடுத்து விட்டார்கள்.

தனது வாலிப மிடுக்கால் சில காலம் வரைக்கும் ரகீம்கான் சமூகக் கட்டையெல்லாம் உடைத்தெறிந்து வெளியேறுவது என்று எண்ணியதுண்டு. தந்தையின் கண்டிப்பை அவன் வெறுத்துங்கூட, பல நூற்றுண்டுகளாக அவனது உதிரத்தில் ஊறியிருந்த அடிமைத்தனத்தால் தந்தையின் அதிகாரத்துக்கும், சமூகக் கட்டுப்பாடுகளுக்கும் அவன் கடைசியில் அடிபணிந்து விட்டான். சில தினங்களுக்குப் பின் சர்க்கஸ் கம்பெனி ரகீம்கான் இல்லாமலே ஊரைவிட்டுச் சென்றுவிட்டது. ரகீமுக்கு ராதாவின் மீதுள்ள காதலுக்கும் முற்றுப் புள்ளி விழுந்தது. ராம்சரணிடம் சென்ருன் ரகீம்கானின் தகப்பன். "உங்கள் மகளுக்குப் பதினைந்து வயதாகி விட்டதால் அவளுக்குக் கல்யாணம் செய்துவிடுவதுதான் நல்லது" என்று சொன்ஞன். தாமதித்துக் கல்யாணம் செய்வதனுல் பல விபரீதங்கள் ஏற்படும் என்றும் தந்திரமாக எடுத்துக் கூறிஞன். சில வாரங்களில் பக்கத்து ஊரிலுள்ள ராம்லால் என்ற நடுத்தர வயதுள்ள தொந்தி பருத்த மார்வாடியை ராதா மணந்தாள். ரகீம்கான்மீது தான் கொண்ட காதலை எண்ணி, இரவிலே ராதா தனித்திருக்கும் போது சிறிது சோகக் கண்ணீர் வடித்தாள். பிறகு, தன் விதியை எண்ணி ஆறுதலடைந்து புதிய கணவனிடம் வாழ்ந்து அரை டஜன் குழந்தைகளுக்குத் தாயாகி விட்டாள்.

ரகீம்கானும் வேருெரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான். பெண்ணை அவன் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. அவனுடைய பெற்ருேரே பெண்ணைத் தேர்ந்தெடுத்து, கல்யாண நாளையும் நிச்சயித்தார்கள். அவனுக்குப் பகட்டான உடைகளையும் மணப்பெண்ணுக்கு

வெள்ளி ஆபரணங்களேயும் அணிவித்தார்கள். அவனைக் குதிரையிலேற்றிப் பித்தளேப் பாண்டு வாத்தியங்கள் முழங்க, பெண் வீட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்ருர்கள். அங்கே நிக்காவும் பூர்த்தியாயிற்று. காஜியாரின் கேள்விகளுக்கெல்லாம் ஏதோ ஒரு யந்திரம் போல் ரகீம் தலேயை ஆட்டினுன். அவனுக்குத் தப்ப வழி இல்லே.

இருண்ட அறையிலே நாணத்துடன் தன் எதிர்கால வாழ்க்கையைப்பற்றி ஏதும் தெரியாமல் அரண்டு உட்கார்ந்திருந்த அந்தச் சிறுமியை, எவரும் எதுவும் கேட்கவில்லே. கல்யாணச் சடங்குகளெல்லாம் முடிந்ததும், "பயல் எப்படிப் பணிந்து விட்டான்; பார்த்தாயா? இந்த ஏற்பாட்டுக்கு அவன் சம்மதிக்கவே மாட்டானே என்னவோ என்று பயந்தாயே! இந்தப் பயல்கள் விஷயமெல்லாம் எனக்குத் தெரியாதா? கல்யாணம் தள்ளிப் போனுல் சும்மா இருக்க மாட்டார்கள். ஏதாவது முரண்டு பண்ணிக்கொண்டே இருப்பார்கள். அதனுல்தான் நம் பெரியவர்கள் குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே கல்யாணம் செய்து வைக்கிருர்கள். ரகீம் இனிமேல் எல்லாம் சரியாய்ப் போய்விடுவான்" என்று ரகீமின் தகப்பன் தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக் கொண்டான்.

அதே சமயத்தில் கொலேயாளியை எதிர் நோக்கி நிற்கும் ஆட்டைப்போல் காத்திருந்த தன் மனேவியின் அறைக்குள் ரகீம் நுழைந்தான். தன் பெற்ருேர்கள், குடும்பம், சமூகம் அனேவர் மீதும் வஞ்சம் தீர்த்துக் கொள்வது என்று அந்நேரத்திலே அவன் உறுதி செய்து கொண்டான். தன் வாழ்க்கைக் கனவைக் குலேத்தவர்கள் இவர்களே என்று ஆத்திரப்பட்டான். நியாயத்தை ஆராய்ந்து பார்க்கும் சக்தியற்று அவனுள்ளம் குழம்பிப் போயிருந்ததால், தான் பட்ட சகல கஷ்டங்களுக்கும் தன் மனேவியையே அவன் சின்னமாக மதித்து விட்டான். ஆகவே அவள் மீதே

வஞ்சம் தீர்த்துக்கொள்ளவும் தீர்மானித்தான். கனிந்த அவன் உள்ளம் இரும்புபோல் கடினமாயிற்று. கதவைப் படீரென்று கோபத்துடன் திறந்தான்.

இருண்ட குடிசைக்குள் கட்டிலின் மீது படுத்தவாறே முப்பது வருடங்களுக்கு முன் நடந்த இந்தச் சம்பவங்களையெல்லாம் ரகீம்கான் ஞாபகப் படுத்திக் கொண்டான். இது வரைக்கும் பழி வாங்கியது போதாதா? முப்பது வருடகாலம் தன் மனைவி, குழந்தைகள், மாடுகள், மற்றும் ஊரிலுள்ள அனைவரையும் ரகீம் கேவலமாக நடத்தி விட்டான். ஊரிலுள்ள எல்லோரிடமும் சண்டை பிடித்துக்கொண்டு, சமூகமே வெறுக்கும் கிராதகனாகிவிட்டான். அனைவரும் தன்னை வெறுப்பது அவனுக்கு சந்தோஷத்தையே அளித்தது.

உற்சாகமும் அன்பும் நிறைந்த இந்த வாலிபன் திடீரென்று இப்படி மிருகத்தனம் படைத்தவனான காரணத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை; புரிந்துகொள்ள முயலவும் இல்லை. அவனை அவர்கள் ஆரம்பத்திலே லேசாக வெறுத்தார்கள். பின்பு பயங்கலந்த அலட்சியத்தோடு பார்த்தார்கள். அவனுடைய சங்கடத்தை அறிந்து அவனிடம் அநுதாபப்படுபவர் எவரும் இல்லை. அனைவரும் புறக்கணித்த அவனோ, சமூகம் தனக்கு அளித்த மனைவிமீது உள்ளத்தை உறுத்தும் எரிச்சலுடன், தன் அதிகாரத்தைப் பிரயோகித்துத் திருப்தியடைந்தான்.

அவளும் முப்பது வருடங்களாக அவன் இழைத்த கொடுமைகளையெல்லாம், அடிமையைப் போல் தன் சமூக வழக்கப்படி சகித்துக் கொண்டாள். சமீபத்தில் சிறிது காலமாக நாள் தவறினாலும் அவளுக்கு அடி கிடைக்கத் தவறுவதில்லை. ரகீம்கானைப் பொறுத்த வரைக்கும் மனைவியை அடிப்பது என்ற வேலை அவனுடைய தினசரிக் கடமைகளில் ஒன்றாகிவிட்டது. அவனுக்குத்

தூக்கம் வந்தது. அப்போது அவன் தன்னிடம் ஒட்டிவிட்ட இந்த வழக்கத்தை ஒழித்துவிட்டுஇனி எப்படி வாழ்வதென்று எண்ணமிட்டுக் கொண்டே படுத்தான். அவனுடைய வாழ்க்கையில் அன்று தான் அவனுக்கு மனைவிமீது சிறிது பச்சாதாபம் ஏற்பட்டது. ஆனால் அவள்மீது அவனுக்கு அன்பு தோன்றிவிடவில்லை. அவள் இல்லாத தனிமை ஏதோ வெறிச்சென்று இருப்பதுபோல் அவனுக் குத் தோன்றியது.

காலையில் தூக்கம் கலைந்து அவன் எழுந்த பொழுது சுள்ளென்று வெய்யில் காய்ந்தது. அதி காலையில் தினமும் தன்னை எழுப்பும் மனைவி இல் லாது போகவே, அவளைத் திட்டிக் கொண்டே ரகீம் படுக்கையை விட்டு எழுந்தான். என்றும் போல் அன்று அவன் அவசரப் படவில்லை. சோம்ப லுடன் எழுந்து கை கால் முகம் கழுவி, ஆட்டுப் பாலைக் கறந்து, முதல் நாள் எஞ்சியிருந்த சப் பாத்தியை அதில் தொட்டுத் தின்று, சாப்பாட்டை ஒருவாறு முடித்துக் கொண்டான். பின்பு தன் அருமை ஹுக்காவை அருகில் யெடுத்து வைத்துக் கொண்டு புகை குடிக்கத் தொடங்கினான். திறந்த ஜன்னலின் வழியாகச் சூரிய கிரணங்கள் உள்ளே நுழைந்து அதற்கு ஒளியும் சூடும் தந்தன அறை யின் ஒரு மூலையில் ஒட்டடை படிந்திருப்பது அவன் கண்ணில் தென்பட்டது. அன்று வயலுக் குப் போவதில்லை என்று அவன் ஏற்கெனவே தீர் மானித்துவிட்டான். ஆகையால், தன் குடிசை யைச் சுத்தம் செய்ய முடிவு செய்தான். ஒரு நீண்ட கழியில் கந்தைகளைக் கட்டி ஒட்டடை அடிக்க ஆரம்பித்தான். அப்போது அவன் வீட்டு ஒட்டைக் கூரையிலே பறவைக் கூடு தொங்கு வதைக் கண்டான். கீச்சுக் கீச்சென்று கத்திக் கொண்டு, அந்தக் கூட்டின் உள்ளும் புறமுமாக இரு சிட்டுக்கள் பறந்து கொண்டிருந்தன.

ஒரே அடியில் கூட்டை அழித்துவிட வேண்டுமென்று முதலில் அவனுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. ஆனால் உள்ளத்தினுள்ளே இருந்த ஏதோ ஒரு சக்தி அவனை அப்படிச் செய்ய வொட்டாமல் தடுத்தது. கம்பை விட்டெறிந்து விட்டு, ஒரு முக்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அதன்மீது ஏறிச் சிட்டுகளின் கூட்டை நன்றாகக் கவனித்தான். இன்னும் சிறகு முளைக்காத இரண்டு சிட்டுக் குருவிக் குஞ்சுகள், மாமிசத் துண்டுகள்போல், கூட்டுக்கள் இருந்தன. அவை பிறந்து ஒரு நாள்தான் ஆகியிருக்கும். அவற்றின் தாய் தந்தைகளான இரண்டு சிட்டுக்களும் கீச்சிட்டுப் பயமுறுத்திக் கொண்டு ரகீம்கானின் முகத்தைச் சுற்றி வட்டமிட்டன. கூட்டின் உட்புறத்தை ரகீம் பார்த்து முடிக்கு முன்னே தாய்ச் சிட்டு அவனைத் தாக்கிக் கொத்திவிட்டது.

"அட மூதேவி, என் கண்ணையே பிடுங்கிவிடுவாய் போலிருக்கே!" என்று ரகீம் தனக்கு வழக்கமான அசட்டுப் புன்சிரிப்புடன் கூறி, கீழே இறங்கினான். தன் வீட்டையும் குழந்தைகளையும் காப்பதற்காக, அந்தச் சிறு குருவி புரிந்த வீரப் போராட்டம் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அன்று சிட்டுக் குருவிகளின் கூடு தப்பியது. ரகீம்கானின் குடிசையிலும் அமைதி நிலவியது.

மறுநாள் முதல் ரகீம் மீண்டும் வயலில் வேலை செய்யச் சென்றான். என்றாலும், கிராமத்திலுள்ள எவரும் அவனுடன் பேசவில்லை. ஒவ்வொரு நாளும் காலை முதல் அந்திப் பொழுது வரைக்கும் வயலில் உழுது, தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்துவிட்டுச் சூரியன் மறைவதற்கு முன் வீடு திரும்புவான். அதன்பின், கட்டிலில் சாய்ந்து கொண்டு ஹுக்காவைப் பிடித்தபடியே சிட்டுக்களின் குடும்ப வாழ்க்கையை ஆசையாய்ப் பார்த்துக் கொண்டிருப்பான். சின்னஞ் சிறிய குருவிக் குஞ்சுகள்

இரண்டும் பெரியவையாகி அழகிய குருவிகளாக வளர்ந்துவிட்டன. பல வருஷங்களுக்கு முன்னே ஓடிப்போன தன் பிள்ளைகள் இருவருக்கும் வைத்திருந்த பூந்து, நூரு என்ற இரண்டு பெயர்களையுமே அந்தக் குருவிக் குஞ்சுகள் இரண்டுக்கும் ரகீம் சூட்டினான். இந்தப் பரந்த உலகத்தில் இந்தச் சிட்டுக்கள் நான்குமே அவனுடைய ஆப்தநண்பர்களாக இருந்தன. அவனுடைய அண்டை அயல் வீட்டுக்காரர்கள் அவனைக் கண்டு இன்னமுந்தான் பயந்தார்கள். அவனுடைய தற்போதைய மௌனத்தைக் கண்டு அவர்கள் சந்தேகித்தார்கள். சில காலமாக அவன் தன் மாடுகளை அடிப்பதை யாரும் பார்த்ததில்லை. இது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. நாது, சித்து என்ற இரண்டு எருதுகளுமே இப்போது சந்தோஷமடைந்தன. அவற்றின் உடலில் பட்ட காயங்களும் ஆறிவிட்டன.

மழைக்காலத்தில் ஒரு நாள் மாலை. அன்று ரகீம்கான் தன் வழக்கத்தைவிடச் சீக்கிரமாக வீடு திரும்பினான். வீதியில் சில குழந்தைகள் கூட்டமாக விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் இவனைக் கண்டதும் பயந்து ஓடினார்கள். சில குழந்தைகள் அந்த அவசரத்தில் தங்கள் கால் செருப்புகளையும் விட்டுவிட்டு ஓடினார்கள். "ஏன் ஓடுகிறீர்கள்? நான் உங்களை அடிக்க மாட்டேன்" என்று ரகீம்கான் அன்போடு கூறியும் அவர்கள் அதைக் கேட்கவில்லை. இதற்குள் மழைத் துளிகளும் லேசாக விழவே பெரிய மழை பெய்வதற்கு முன்பு, வீடுபோய்ச் சேர்ந்து மாடுகளைக் கட்ட எண்ணி ரகீம் அவசரமாக நடந்தான்.

குடிசைக்குள் நுழைந்து, காடா விளக்கை ரகீம் பற்றவைத்தான். ரொட்டித் துண்டுகள் சிலவற்றைச் சிட்டுக்களுக்கு வைத்து, "ஓ நூரு!

ஓ பூந்து!" என்று அவற்றைக்கூவி அழைத்தான். ஆனால் அன்று என்னவோ சிட்டுக்கள் வெளி வரவே இல்லை. தன் நண்பர்களுக்கு என்ன நேர்ந்தது என்று பார்க்க ஆவல் கொண்டு, சிட்டுக்களின் கூட்டுக்குள்ளே, ரகீம் உற்றுப் பார்த்தான். நான்கு குருவிகளும் பயந்து முடங்கி ஒன்றோடு ஒன்று நெறித்துக் கொண்டு கூட்டுக்குள்ளே கிடந்தன. கூடு இருந்த இடத்துக்கு நேரே கூரை ஒழுகியது. ரகீம்கான் கொட்டுகிற மழையில் கூரைமீது ஏறி ஒழுக்கை அடைத்தான்.

அந்த வேலை முடிவடைவதற்குள் அவன் உடல் முழுதும் சொட்டச் சொட்ட நன்றாய் நனைந்து விட்டது. அவன் கட்டிலில் உட்கார்ந்த போது, அவனுக்குத் தும்மல் வந்தது. இயற்கையின் அந்த எச்சரிக்கையைக் கவனியாமல் ரகீம் தூங்கச் சென்றான். மறு நாள் எழுந்திருந்த போது அவனுக்குப் பலத்த காய்ச்சல் அடித்துக் கொண்டிருந்தது.

ரகீம்கான் பல நாட்களாக வயல் வேலைக்குப் போகாதிருப்பதைக் கண்ட கிராமவாசிகள், அவனுக்கு என்னவோ ஏதோ என்று சந்தேகப்பட்டார்கள். காரணம் என்ன என்று அறிய விரும்பிய சிலர், அவனுடைய குடிசை வாசலுக்கு வந்து கதவிடுக்கு வழியாக உள்ளே பார்த்தார்கள். கட்டிலில் படுத்தபடியே, "ஓ பூந்து! ஓ நூறு! நான் போனபின்பு யார் உங்களைக் காப்பாற்றப் போகிறார்கள்?" என்று ரகீம் தனக்குத்தானே பேசிக் கொள்வதை அவர்கள் கேட்டார்கள்.

கிராமவாசிகளுக்குப் பரிதாபமாக இருந்தது. "பாவம்! இவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. இவன் சம்சாரத்துக்குச் சொல்லி அனுப்புவோம். அவள் வந்து கவனிக்கட்டும்" என்று சொல்லிக் கொண்டார்கள். அப்படியே சிலர் ரகீமின் மனைவிக்குச் சொல்லியும் அனுப்பினார்கள்.

28790
MADURAI UNIVERSITY LIB

மறுநாள் ரகீமின் மனேவி தன் இரண்டு பிள்ளே களேயும் அழைத்துக் கொண்டு, கவலேயோடு கதறிக்கொண்டே ஓடி வந்தாள். அண்டை அயலா ரெல்லோரும் அநுதாபத்துடன் வந்து கூடிவிட் டார்கள். கதவின் உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. இவர்கள் எவ்வளவு பலமாகத் தட்டியும் கதவு திறக்கவில்லே. கதவை உடைத்துக் கொண்டு, எல்லோரும் உள்ளே நுழைந்தார்கள். அறையின் நடுவே ரகீமின் பருத்த சடலம் மெலிந்து எலும்புக் கூடாகிப் படுத்துக் கிடந்தது. அறையிலே சிந் தனே தேங்கிய ஒரு மௌனம் நிலவியது. அதைக் கலேத்துச் சிறகடித்துக் கொண்டிருந்தன அந்த நான்கு சிட்டுக்களும்.

# அநாமதேய அகதி



நான் ஏன் சிரிக்கிறேன் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா? உயிர் போகும் பொழுது ஒரு மனிதனுக்கு எப்படிச் சிரிப்பு வரும் என்று நீங்கள் அறிய விரும்புகிறீர்கள் அல்லவா?

டாக்டர், அதைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்? பேசாது உங்கள் வைத்திய சாலைக்குப் போய், கொய்னாத் தண்ணீரையும், ஆஸ்பிரின் மாத்திரையையும் விற்பதில் கவனம் செலுத்துங்கள். என்னைச் சாவின் பிடியிலிருந்து உங்களால் காப்பாற்ற முடியாது. ஏன், என்னை இப்பொழுது ஒருவருமே காப்பாற்ற முடியாது. காரணம், ஆழப் பதிந்த இரு வெட்டுக் காயங்கள்தான். முதுகுப் புறத்திலிருந்து கல்லீரல் வரை ஒரு காயமும், வயிற்றில் இரண்டாவது காயமும் ஏற்பட்டுள்ளது. குடல் பிதுங்கிக்கொண்டு வந்துள்ளது; அது உங்கள் கண்ணில் படவில்லையா?

நான் ஏன் சிரிக்கிறேன் என்று அறியத்தானே கூடியிருக்கிறீர்கள்?... இந்தக் கடைசி நேரத்தில், சாகப் போகும் ஒரு மனிதனைச் சிரிக்க வைக்கும் விஷயம் என்னவாக இருக்கலாம் என்று யோசிக்கிறீர்களா? அதற்குக் காரணம் நான் யார் என்பதை இப்பொழுதுதான் கண்டு கொண்டேன். அதனால்தான் எனக்குச் சிரிப்பு வருகிறது.

என்ன சொன்னாய் தம்பி? 'அதற்காகவா சிரிப்பு?' என்றா சொன்னாய்? என் கதை முழுவதையும் பொறுமையாகக் கேள். கேட்ட பிறகு நான் சாகப் போகும் பொழுது ஏன் சிரிக்கிறேன் என்பது புரியும்.

கடந்த இரண்டு மாதங்களாக நான் யார் என்பதைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்தேன். பலாத்காரமாகத் தாடி வெட்டப்பட்டுச் சுன்னத்துச் செய்யப்பட்ட ஒரு முஸ்லிமாக இருப்பேனோ? அன்றி ஒரு ஹிந்துவாகவோ சீக்கியனுகவோ இருப்பேனே? பிராமணனுகவோ, பஞ்சமனுகவோ இருந்திருப்பேனே? கிழக்குப் பஞ்சாபில் இருந்தேனு? அல்லது மேற்குப் பஞ்சாபில் இருந்தேனு? நான் வசித்தது லாகூரிலா? அமிருதசரஸிலா? இல்லை, ராவல்பிண்டி அல்லது ஜலந்தர் ஆகிய ஏதாவது ஒன்ருக இருக்குமோ? இவ்வாறெல்லாம் எண்ணி யெண்ணி ஏங்கினேன். நான் மட்டுமல்ல; இன்னும் எத்தனை யெத்தனையோ பேர் நான் யார் என்பதையும் என் சாதி, சமயம், பெயர் எல்லாவற்றையும் அறிய முயன்ருர்கள்! ஆனுல் ஒருவராலும் இந்த மர்மத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் முயன்றும் எனக்கே ஞாபகம் வரவில்லை. ஆனுல் இப்பொழுது, சாகப் போகிற இந் நேரத்தில் திடீரென ஞாபக சக்தி வந்துவிட்டது.

டாக்டர்! வருத்தத்துடன் என்னை விசித்திரமாகப் பார்க்காதீர்கள்! உங்களைப் பார்க்க எனக்குச் சிரிப்பு வருகிறது. உங்கள் வருத்தம் என்னை நிச்சயமாகக் காப்பாற்ருது என்பதைச் சொல்லிவிடுகிறேன். என்னை இப்பொழுது உலகத்திலுள்ள எந்த டாக்டராலும் காப்பாற்ற முடியாது... நீங்கள் ஏன் இப்படிச் சங்கடத்துடன் பார்க்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. ரண மருத்துவத்தைப்பற்றி உங்களுக்கு எழுந்துள்ள பிரச்னையும் எனக்கு விளங்காமலில்லை. இரண்டு காயங்களும் விபரீத இடங்களில் இருப்பதால் முதலில் எதைக் கவனிப்பது என்று யோசிக்கிறீர்கள். என்னை முதுகுப்புறம் மல்லாந்து படுக்கவைத்துக் குடலை வயிற்றிற்குள் திணித்து, வயிற்றைத் தைத்து விடுவோம் யென்று நினைத்தால், மறு

புறமுள்ள காயத்தின் வழியாக என்னுடைய ரத்த மெல்லாம் வெளியே வந்து, ஒரு தையல் போடு வதற்கு முன்பே இறந்து விடுவேன். பின்புறமுள்ள காயத்தை ஆற்றுவோம் என்று குப்புறப் படுக்க வைத்தாலோ குடல்கள், கல்லீரல் மூத்திரப் பை அனைத்துமே வயிற்றுக்கு வெளியே வந்துவிடும். ஆகவே கவலைப்படாதீர்கள். அதைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டு, என் கதையைக் கேளுங்கள்.

இரண்டு மாதங்களுக்கு முன்புதான், பல நாட்கள் நினைவு இல்லாதிருந்து எனக்குப் பிரக்ஞை வந்தது. அப்பொழுது நான் புதுடில்லி அரசாங்க ஆஸ்பத்திரியில் இருப்பதாக உணர்ந்தேன்.

"உன் பெயரென்ன ?" என்று டாக்டா கேட்டார்.

ஏற்கெனவே குழப்பமடைந்த மனதைச் சிரமப் பட்டு ஞாபகப்படுத்திப் பார்த்தேன். "மன்னியுங்கள், எனக்கு ஞாபகமில்லை" என்று சொன்னேன்.

"ஹிந்துவா ? முஸ்லிமா ?"

டாக்டர் இந்த முக்கியமான இரண்டாவது கேள்வியைக் கேட்டார். நான் அதுவும் ஞாபக மில்லை யென்றே சொனனேன்.

எனது பூர்வ வரலாறு, எனது சாதி, மதம், வீடு குடும்பம் ஒன்றுமே ஞாபகத்திற்கு வரவில்லை. நான் குடும்பஸ்தனா அல்லது பிரம்மச்சாரியா என்பதும் ஞாபகமில்லை. என் வயதுகூட ஞாபகத் திற்கு'வரவில்லை. நான் இளைஞனாக இருக்கக்கூடு மென லேசாக ஞாபகம் வந்தது. ஆனால் கண் ணாடியில் பார்த்தால் சுருக்கம் விழுந்து, மீசை தாடி நிறைந்து எனக்கு அறிமுகமில்லாத முகம் தோன் றியது. இந்த முகத்தைக்கூட நான் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை.

புது டில்லியில் உள்ள டாக்டர்கள் எனக்கு ஞாபக சக்தியை அளிக்க எவ்வளவோ முயன்றார்

கள். முடியாமற் போகவே நான் யார் என்று அறிந்துகொள்ள உதவினுர்கள். என் பெயரே தெரியாததால், நான் வாழ்ந்துதான் என்ன பயன் ? செத்த சடலத்துக்குச் சமானந்தானே !

விசாரித்ததில், பஞ்சாபிலிருந்து காயமுற்ற பல அகதிகளுடன் நான் அழைத்துவரப்பட்டதாக அறிய முடிந்தது. மற்ற அகதிகளை இந்துக்களா, சீக்கியர்களா, முஸ்லிம்களா என விசாரித்தபோது அவர்கள் இந்த மூன்று சமூகத்தையும் சேர்ந்தவர்களாக இருந்தனர். அமிருதசரஸிற்கும் லாகூருக்கும் மத்தியில் ஒன்றுக்குப்பின் ஒன்ருக, அகதிகளைச் சுமந்து சென்ற இரு விசேஷ ரயில்கள் தாக்கப்பட்டுத் தடம்புரண்டு கவிழ்ந்தன. அவற்றில் ஒன்றில் மேற்குப் பஞ்சாபிலிருந்த இந்துக்கள் அமிருதசரஸிற்கு வந்து கொண்டிருந்தனர். மற்ருென்றில் கிழக்குப் பஞ்சாபிலிருந்த முஸ்லிம்கள் லாகூருககுப் போய்க்கொண்டிருந்தனர். இரவு பதினெரு மணிக்கு ரயில் வண்டி பாலத்தின் மீது போய்க்கொண்டிருந்தபோது, தண்டவாளத்திற்குக் கீழே வெடிகுண்டு வெடித்தது. என்ஜின் தண்டவாளத்தைவிட்டு நீங்கிப் பல வண்டிகளை இழுத்துக் கொண்டே ஏரிக்கரையோரம் சென்று கவிழ்ந்தது. பலருக்குக் காயம் ஏற்பட்டது. பலர் இறந்தனர். கடைக்கோடிப் பெட்டிகளில் காயம் படாமல் இருந்தவர்கள்மீது, காட்டில் ஒளிந்து கொண்டிருந்த கொள்ளைக் கோஷ்டியினர் துப்பாக்கிக் குண்டுமாரி பொழிந்தனர். காயம பட்டவர்கள் இருட்டிலே தப்பித்துக் கொண்டு ஓடினர். சுமார் ஒரு மணிக்குப் பிறகு எதிர்ப்புறத்திலிருந்து வந்த ரயிலுக்கும், ஒரு மைலுக்கு அப்பால் இதே கதி ஏற்பட்டது. இந்த ரயில் வண்டியில் இருந்தவர்களும் அதே காட்டுக்குள் ஓடினுர்கள். உழுது கிடந்த வயல் வழியாக ஓடியபொழுது, பலர் தவறி விழுந்து களைப்படைந்து மூர்ச்சையாகி விட்டார்கள்.

மறுநாள் காலையில் இந்திய யூனியன் துருப்புகளும், பாகிஸ்தான் துருப்புகளும் எல்லைப்புறத்தைப் பார்வையிடச் சென்றபொழுது, இரண்டு ரயில் வண்டிகளிலும் இருந்துவிழுந்து காயம்பட்டவர்களும் உயிரிழந்தவர்களும் புதிதாக நிர்ணயிக்கப்பட்ட எல்லைக் கோட்டின் மேலேயே விழுந்து கிடப்பதைக் கண்டனர். கூட்டத்தில் யார் இந்து? யார் முஸ்லிம்? என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அதில் நானும் ஒருவன். என்னை டோலியில் தூக்கிச் சிகிச்சை லாரிக்கு எடுத்துச் சென்றவன், நான் பிரக்ஞையற்று இருந்ததாகவும், நெடு அங்கி உடுத்தி, ரத்தம் தோய்ந்த சட்டை போட்டிருந்ததாகவும், இரு நாடுகளின் எல்லையிலும், அதாவது பாகிஸ்தான் பிரதேசத்தில் எனது கால்களும், இந்திய யூனியன் பிரதேசத்தில் எனது தலையும் இருந்ததாகவும், புதிதாக வயல்கள்மீது இடப்பட்டிருந்த எல்லைக் கோடுகள் ரத்தத்தால் பூசப்பட்டிருந்ததாகவும் சொன்னான்.

வெள்ளைத்தாடி வைத்திருக்கும் மதிப்பிற்குரிய மௌலானாவே! என்னை வெறித்துப் பார்க்காதீர்கள்! உங்கள் மனதில் என்ன நினைக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் சாகப் போகிறேன் என்பதையும், சாகும் சமயத்தில் சாகப்போகிறவனுக்கு எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் சக்தி உண்டு என்பதையும் மறந்து விடாதீர்கள். நான் முஸ்லிம் என்று கூறிவிடுவேன் என்று எதிர்பார்க்கிறீர்கள் அல்லவா? அப்படிக் கூறிவிட்டால் நான் சாவதற்கு முன்னரே, என்னைப் புதைப்பதற்குத் தங்கள் அஞ்சுமான் குதாம்-உல்-முஸ்லிமின் சார்பாக ஏற்பாடு செய்து விடலாமென்று எண்ணுகிறீர்கள். உச்சிக் குடுமி வைத்திருக்கும் சாஸ்திரிகளே! உங்கள் மனதில் என்ன எண்ணம் ஓடிக்கொண்டிருக்கிறதென்பதும் எனக்குப் புரிகிறது. என் வாயைத் திறந்து

நான் ஒரு இந்து என்று சொல்லிவிட்டால், தங்கள் தர்ம சேவா சங்கத்தின் ஆதரவில் தகனம் செய்து விடலாமென்று நினைக்கிறீர்கள். இங்கே பம்பாயில் பார்சி ஜாதியினர் தங்கள் பிணத்தை மௌனக் கோபுரத்தில் போட்டுப் பிணத்திற்காக வட்டமிட்டுக் காத்திருக்கும் கழுகுகள் தின்னும்படி விட்டுவிடுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் மனிதன் சாவதற்கு முன்னால் அவனை மனிதக் கழுகுகள் வட்டமிட்டுக்கொண்டிருக்கும் என்று நான் எண்ணினதே இல்லை.

எனினும் எனது கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அதிகம் பேச எனக்கு நேரம் இராது. எனவே விரைவில் விட்ட இடத்திலிருந்து தொடங்குகிறேன். அப்போது ஏற்பட்டிருந்த என் காயங்கள் அவ்வளவு பலமானதல்லவாகையால் சில வாரங்களில் ஆறிவிட்டன. ஆனால் டாக்டர்கள் எனது மூளையில் லேசான தாக்குதல் ஏற்பட்டிருப்பதால் எனது ஞாபக சக்தி மறைந்து விட்டதாகக் கூறினர். அதுமுதல், நான் பெயரில்லா விசித்திர மனிதனாகிவிட்டேன். என் படங்கள் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள பல பத்திரிகைகளில் வெளிவந்தன. ஆனால் எந்த உறவினனோ, நண்பனோ, அண்டை வீட்டுக்காரனோ அடையாளங் கண்டு என்னைத் தேடவில்லை. ஒருவேளை அவர்கள் மாண்டிருக்கக் கூடும். அதனால் நான் இந்த உலகத்திலேயே தனி மனிதனாகிவிட்டேனோ என்னவோ? இதற்கிடையில் நோயாலும், காயம்பட்டும் பல அகதிக் கூட்டங்கள் வந்து சேர்ந்தன. ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர்கள், மேலும் நான் அங்கு இருக்கக்கூடாது என்று கூறிவிட்டார்கள். வேறு எங்காவது இடம் கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டு அதைவிட்டு வெளியே வந்தேன் நகரமெல்லாம் அலைந்துவிட்டு ஜும்மா மசூதிக்கு வந்தேன்.

அதற்கு எதிரே இருந்த மைதானத்தில் ஒரு அகதி முகாம் இருந்தது.

முகாமின் நிர்வாகியிடம் "ஐயா, நான் ஒரு அகதி; தயவுசெய்து எனக்கு இடம் தாருங்கள்" என்றேன்.

"நீ ஹிந்துவா, முஸ்லிமா?" என்று அவர் என்னைக் கேட்டார்.

"எனக்கு ஞாபகமில்லை" என்று உண்மையைக் கூறினேன். எனக்குப் பொய் சொல்ல விருப்பமில்லை.

முகாமின் நிர்வாகி "இந்த முகாம் முஸ்லிம்களுக்கு மட்டுமே!" என்று கூறி அனுப்பி விட்டார்.

நான் மெள்ள மெள்ள நடந்துசென்று, புது டில்லியை அடைந்தேன். அங்கு முன்னதைவிடப் பெரிய ஒரு முகாமைக் கண்டேன். அங்கு சென்று அங்குள்ள தொண்டர் ஒருவரிடம் தங்க இடம் வேண்டுமெனக் கெஞ்சிக் கேட்டேன். மூன்று நாட்களாக நான் சாப்பிடாததால் எனக்குப் பேசவே முடியவில்லை.

"நீ ஒரு ஹிந்துவா அல்லது முஸ்லிமா?" என்று அவரும் கேட்டார். நான் முன்போலவே இங்கேயும் பதில் கூறினேன்.

"பெயர்?"

"அதுவும் எனக்கு ஞாபகமில்லை."

"அப்படியானால் வேறு எங்காவது போ, இம்முகாம் ஹிந்துக்களுக்கு மட்டுந்தான்" என்று என்னை வெளியே அனுப்பிவிட்டார்.

எனவே ஒவ்வொரு முகாமாக நடந்தேன். இந்துக்களுக்கு, முஸ்லிம்களுக்கு என முகாம்கள் இருந்தன. ஆனால் மனித ஜன்மங்களுக்கு மட்டும் முகாம்களிருந்ததாகத் தெரியவில்லை!

அன்று இரவு, அரசாங்கக் காரியாலயத்தில் உத்தியோகம் பார்க்கும் ஒரு சீக்கியர்

பங்களாவிற்கு முன்னுல் வீதியில் மயக்கம்போட்டு விழுந்து விட்டேன். என்னைக் கண்ணுற்ற அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்று குடிப்பதற்குப்பால் கொடுத்தார். எனக்குப் பிரக்ஞை வந்ததும் அவர் ஹிந்துவா, முஸ்லிமா, சீக்கியனு என்று ஒன்றும் கேட்கவில்லை. "உமக்கு இப்பொழுது உடம்பு தேவலையா ஐயா?" என்று மட்டுந்தான் கேட்டார்.

நான் அங்கு பல நாட்கள் இருந்தேன். சர்தார், அவர் மனைவி, குழந்தைகள் அனைவருமே என்மீது மிகவும் அன்பு செலுத்தினர். எனது கதையெல்லா வற்றையும் உள்ளது உள்ளபடி அவர்களுக்குக் கூறினேன். நான் யாரென்பதே எனக்குத் தெரிய வில்லை என்பதையும் கூறினேன். இருப்பினும் அவர்கள் என்மீது அன்பு காட்டினுர்கள். சில நாட்களுக்குப் பின்னர் ராவல்பிண்டி ஜில்லாவி லிருந்து அவர்களின் உறவினர்கள் சிலர், அகதி களைக் கொண்டு வந்த விசேஷ ரயிலில் வந்து சேர்ந்தனர். முஸ்லிம் பாதகர்களின் செயலால் அவர்களில் சிலர் கஷ்டப்பட்டிருந்தனர். அவர்கள் பலாத்காரமாக மதம் மாற்றப்பட்டு, மொட்டை யடிக்கப்பட்டு, சுன்னத்தும் செய்யப்பட்டிருந்தார் கள். அவர்களின் பெண்கள் மானபங்கப்படுத்தப் பட்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் கண் முன்பா கவே தங்களுடைய உறவினர்களும் அண்டைவீட் டுக்காரர்களும், குரூரமாகக் கொலை செய்யப்படுவ தைக் கண்ணுற்றிருந்தார்கள். எனவே அவர்கள் உள்ளத்தில் ஆத்திரமும் வெறுப்பும் நிறைந்திருந் தது. அவர்கள் கதையைக் கேட்டபின்னர் நானும் முஸ்லிம்களை வெறுக்கத் தொடங்கினேன்.

சுய ஞாபகமில்லாத மனிதன் என்பதையும், என்னுடைய விசித்திரக் கதையையும், அவர்க ளிடம் சர்தார் சாகிப் கூறியிருந்தார். அதில் வயது முதிர்ந்த சிலர் எனக்கு அனுதாப வார்த்தைகள் கூறியதுடன் எனது ஞாபகத்தை வருவிக்க முயற்சி செய்தார்கள். ஆனுல் அவர்களில்

இளைஞர்கள் என்னைச் சந்தேகப் பார்வையுடன் நோக்கத் தொடங்கினார்கள். ஒரு நாள் இரவு அவர்களில் ஒருவன், "அவன் ஒருக்கால் பொய்யனாக இருக்கலாமல்லவா? உண்மையிலேயே அவன் ஞாபகசக்தியை இழந்தவனாக இருந்தாலும்கூட அவன் ஒரு முஸ்லிமாக இருந்தால்?" என்று பேசிக் கொண்டிருந்தது என் காதில்பட்டது. அவர்கள் கண்களிலே ஒரு பயங்கர ஒளி தோன்றுவதைக் கண்டேன்.

'ஆம், நானும் காயப்பட்டு ஞாபக சக்தியை இழப்பதற்கு முன்னர் முஸ்லிமாகவே இருந்திருந்தால்...! ஒருக்கால் நானும் கொடுஞ்செயல்கள் செய்திருக்கக் கூடுமல்லவா? நான் செய்த கொடுமைகளுக்குத்தான் கடவுள் இப்படித்தண்டித்திருக்கிறாரோ!' என்ற ஒரு எண்ணம் என் மனதில் அடிக்கடி தோன்றியது. அன்று இரவே சர்தார் சாகிப் வீட்டிலிருந்து கம்பி நீட்டிவிட்டேன்.

மீண்டும் வறுமைப் பாதையில் போகவேண்டியதைத் தவிர வேறு வழி இல்லை.

"இந்த முகாம் முஸ்லிம்களுக்கு!"

"இந்த முகாம் இந்துக்களுக்கு!"

"நீ யாரப்பா?"

"உன் பெயரென்ன?"

"உன் மதமென்ன?"

"எங்கிருந்து வந்தாய்?"

கேள்விகள்! கேள்விகள்!! கேள்விகள்!!! அப்பப்பா, திணறிப் போய்விட்டேன்! ஒன்றுக்குக் கூட என்னால் பதில்கூற முடியவில்லை. எனக்குத் தான் ஞாபக சக்தி இல்லையே!

தஞ்சமடைய எனக்கு இடம் எங்கும் கிடைக்காததாலும், நடப்பதற்குச் சக்தியில்லாததாலும், ஜும்மா மசூதியின் படிக்கட்டின் அடியிலேகிடந்து சாவதென்று தீர்மானித்துச் சாய்ந்துவிட்டேன்.

உடனே எனக்கு நினைவு நீங்கிவிட்டது. நான் எவ்வளவு நேரம் அங்கிருந்தேனோ எனக்குத் தெரியாது ஆனால் கண்ணை விழித்துப் பார்த்தபோது சுமார் எட்டு வயதுள்ள சிறுவன் ஒருவன் என் முன்னே நிற்கக் கண்டேன். ''ஐயா! எழுந்திருங்கள் எழுந்திருங்கள்! அம்மா உங்களுக்கனுப்பிய இந்த ரொட்டியைச் சாப்பிடுங்கள்'' என்றான். அந்த வார்த்தைகளை எனது உள்ளுணர்ச்சி புரிந்து கொண்டதாலோ என்னவோ என் மயக்கம் தீர்ந்தது. எனக்கு உடலிலே பலமில்லாததால் எழுந்து உட்கார முடியவில்லை. என்னை உட்கார வைப்பதற்கும் அந்தப் பையனே உதவி செய்ய வேண்டியதாகிவிட்டது. ஆகா! அந்த எளிய, ருசியான உணவு எவ்வளவு ஆனந்தமாக இருந்தது, தெரியுமா? பேராவலுடன் அதனைத் தின்றேன். பருப்பு வைத்திருந்த பித்தளைப் பாத்திரத்தைக் காலி செய்து கழுவியபின், அவனை நோக்கி ''தம்பி, நீ சிரஞ்சீவியாக இருக்கவேண்டும்!'' என்றேன். எனது நன்றியறிதலைத் தெரிவிப்பதற்காகச் சிறுவனின் சின்னக் கரங்களை நான் தொட்டதும் ''ஐயோ, உங்கள் உடல் நெருப்பாய்க் காய்கிறதே! அப்பாவிடம் வாருங்கள், அவர் ஒரு ஹக்கீம். உங்களுக்கு மருந்து கொடுத்துக் குணப்படுத்துவார்'' என்றான்.

சிறுவன் தன் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றான். ஹக்கீம் ஒரு நாளைக்கு ஐந்து தரம் பிரார்த்தனை செய்பவர். வைத்தியம் செய்து கொள்ள வரும் வியாதியஸ்தர்கள் அனைவருக்கும் இந்துக்கள், முஸ்லிம்கள் யாராக இருந்தாலும் வேற்றுமை பாராது இனமாக மருத்துவம் செய்து வந்தார் ஹக்கீம். அவர் எனக்கு யூனானி மருந்து கொடுத்து ஒரு நாளைக்கு மூன்றுதரம் பால் அளித்து, உறங்கப் படுக்கையும் கொடுத்தார். ஹக்கீம் அவர்களின் வைத்தியம் எனது உடல் உஷ்ணத்தைத் தணித்துவிட்டது. ஆயினும்

பெரிய வைத்தியராகிய அவரால்கூட எனது ஞாபகசக்தியை வரவழைக்க முடியவில்லை. என் நிலைமையைப்பற்றி அவரிடம் கூறினேன். நான் ஒரு ஹிந்துவாகவே இருக்கக்கூடும். ஆகையால் உங்கள் இடத்தைவிட்டு வேறிடத்திற்குப் போக வேண்டியிருக்கும்'' என்றேன். ஆனால் அன்பே உருவான அந்தக் கிழவர் என்னை அங்கேயே இருக்கும்படி வற்புறுத்தி ''நீ ஹிந்துவாக இருந்தால்தான் என்ன? ஹிந்துக்கள் மட்டும் கடவுளின் குழந்தைகள் இல்லையா? நீ இங்கேயே தங்கலாம்'' என்றார். எனவே நான் அங்கு தங்கினேன்.

ஹக்கீம் வீட்டில் அதிக நாள் சௌகரியமாகத் தங்கியிருக்க முடியாதபடி ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஹக்கீம் அவர்களின் பையன் என்னைப் போன்ற வேறொரு அகதிக்கு உணவளிக்கச் சென்றிருந்தான். அவன் வெகு நேரமாகியும் திரும்பி வரவில்லை. நானும் ஹக்கீம் அவர்களும் அவனைத் தேடிச் சென்றோம். சிறுவனைப்பற்றி ஒரு செய்தியுமே தெரியவில்லை. சிறுவன் ஜும்மா மசூதியிலிருந்து தரியா வழியாகப் போய்க் கொண்டிருக்கும்பொழுது சில இந்துக்களால் அவன் கொல்லப்பட்டதாக அன்று இரவு எங்களுக்குச் செய்தி கிடைத்தது. அன்பும் இரக்கமும் கொண்ட சிறுவனின் உருவம் என் முன் தோன்றி, ''சாகப் போகும் பொழுது உனக்கு உணவளித்து உதவினேன். இருந்தும் நீ என்னைக் கொன்றாயல்லவா?'' என்று அவனுடைய இனிமையான குரலில் கேட்பதுபோல் இருந்தது. ஆம், நான் அவனைக் கொல்லவில்லை என்பது உண்மைதான். ஆயினும் எனது மூளையில் 'ஒரு வேளை நான் இந்துவாக இருந்தால்! எனது ஞாபக சக்தியை இழப்பதற்கு முன்னர் நானும் ஹக்கீம் சாகிப்பின் குழந்தையைப் போன்ற முஸ்லிம் குழந்தைகளைக் கொலை செய்திருப்பேனே, என்னவோ!'' என்று உறுத்திக் கொண்டிருந்தது. எனக்கு அது பெரும்

வேதனையை அளித்தது. ஆகையால் ஒரு நாள் விடியற்காலையில் வீட்டில் மற்றவர்கள் எல்லோரும் எழுந்திருப்பதற்கு முன்னுல் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டைவிட்டு நழுவினேன்.

அந்த நாட்களில் டில்லியில் எங்கும் பயங்கரம் நிலவியது. பட்டப் பகலிலே மக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். பிரதான வீதிகளில் கூடத் துப்பாக்கிக் குண்டுகள் பறந்து கொண்டிருந்தன. அப்படியும் இப்படியுமாகத் தப்பித்துக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தேன். பம்பாயில் நிலைமை சற்று சீர்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்ததால், புறப்படத் தயாராக இருந்த எல்லைப்புற மெயிலில் ஏறினேன். நெருக்கமுள்ள அந்த ரயில் வண்டியில் என் பக்கத்தில் பஞ்சாபி வாலிபர் ஒருவர் துக்கமே உருவாக அமர்ந்திருந்தார்.

வண்டி புறப்பட்டதும், "ஐயா! நீர் யார்!" என்று கேட்டார்.

"எனக்குத் தெரியவில்லை, ஒரு வேளை ஹிந்துவாக இருக்கலாம், அல்லது முஸ்லிமாக இருக்கலாம்" என்றேன்.

"இந்த வழியில் முஸ்லிம்களுக்கு ஆபத்து ஏற்படும் எனக் கேள்வி. உம் முகத்தில் தாடி இருப்பதால் நீர் முஸ்லிமாக இருப்பீரோ என்று சந்தேகப்பட்டு, அப்படிக் கேட்டேன்" என்ருர்.

நான் என்கதை முழுவதையும் கூறினேன். பல வாரங்களாக க்ஷவரம் செய்து கொள்ளாததால் வளர்ந்திருந்த தாடியை அவர் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் என் பேச்சை நம்பவில்லை என்பதை உணர்ந்தேன். பின்னர் அவரைப்பற்றிய விஷயங்களைப் பேசத் தொடங்கினேம். லாகூரில் அவருடைய வீடும், கடையும் சூறையாடப்பட்டதாம். அவரது உறவினர்களில் சிலர் கொல்லப்பட்டனராம். மற்றும் சிலரைக்

காணவே காணேமாம். ஆகவே அவர் பம்பாய்க்குச் சென்று புதிய வியாபார முயற்சிகளில் ஈடுபட உத்தேசித்திருக்கிருராம்.

பரத்பூர் அருகில் ஒரு இடத்தில் ரயில் வண்டி நிறுத்தப்பட்டது. முஸ்லிம்கள் என்று சந்தேகிக்கப்பட்ட பிரயாணிகள் அனைவரும் வெளியில் இழுத்து, ஈவிரக்கமில்லாமல் சுட்டுத் தள்ளப்பட்டனர்.

அதைப்பற்றி இப்போது நினைக்கையில் சிரிப்புத்தான் வருகிறது. ஆ! என்ன கேட்கிறீர்கள்? குரூரக் கொலை முயற்சியில் வேடிக்கை என்ன இருக்க முடியும் என்ரு கேட்கிறீர்கள்? முஸ்லிம்களைச் சுட்டுத் தள்ளும் வேளையிலும், கத்தியினுல் குத்திக் கொலை செய்யும் பொழுதும் 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று கொலைகாரர்கள் கோஷமிட்டார்கள். இந்தச் சம்பவம் சாகப் போகிற மனிதனைக்கூடச் சிரிக்க வைக்கக் கூடியது தானே?

கொலைகாரர்கள் நான் ஏறியிருந்த பெட்டிக்கு வரும்பொழுது நான் சாவதற்குத் தயாராகவே இருந்தேன். நான் முஸ்லிமா என்பது எனக்குத் தெரியாது. ஆனுல் எனக்குத் தாடி இருந்தது மட்டும் புரிந்தது. என்னைக் கொலை செய்ய அது ஒன்றே போதுமே. ஆனுல் கொலைகாரர்கள் என்னைப் பார்ப்பதற்குள் எனது சக பிரயாணியான அந்த வாலிபர் என்மீது போர்வையைப் போர்த்தி மூடினுர். அவர்கள் என்னைப்பற்றி விசாரித்த பொழுது அவர் கொஞ்சங்கூடத் தயங்காது, "அவர் என் அண்ணு; லாகூரில் அவருக்குக் காயமேற்பட்டது. அவரை ஒன்றும் தொந்தரவு செய்யாதீர்கள். அவர் உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் நிலையில் இல்லை" என்று கூறி அனுப்பி விட்டார். அவர்களும் அவர் பதிலில் திருப்தியடைந்து போய்விட்டனர். குண்டுகள்

பொழிந்தன. இடையே குண்டுக்கு இரையானவர்களின் சோகக் குரல்களும் கேட்டன. ரயில் வண்டியும் நகர்ந்தது.

கடைசியில் பம்பாயை அடைந்தேன். ஆனால், இங்கே, உங்கள் பாழாய்ப்போன பம்பாய்ப் பட்டணத்திலுங்கூட அந்தத் தொல்லை பிடித்த கேள்வியைத்தான் யாவரும் கேட்கத் தொடங்கினார்கள்.

"நீ ஒரு ஹிந்துவா?"

"நீ ஒரு முஸ்லிமா?"

எனக்கும் ஒரு ஐயம் தோன்றியது. ஹிந்து யார்? முஸ்லிம் யார்? தோற்றத்தில் முஸ்லிம் போலிருந்த என்னைக் கொலைகாரர்களிடமிருந்து காப்பாற்றிய அந்த ரயில் வண்டிப் பிரயாணி, அவர் ஹிந்துவா? அல்லது கள்ளங்கபடமற்ற ஹக்கீம் சாகிபின் குழந்தையைத் தரியாவில் வெட்டிக் கொன்றார்களே அந்தக் கொடும் பாதகர்களாகிய அவர்கள் ஹிந்துக்களா? முஸ்லிம்கள் யார்? ஹக்கீம் சாகிப்பும் அவர் குடும்பத்தினருமா? அல்லது ராவல்பிண்டியில் சீக்கிய ஆண்களையும் பெண்களையும் துன்புறுத்தி மானபங்கப்படுத்திய, வெறி பிடித்த காட்டுமிராண்டிகளா? சீக்கியர் தாம் யார்? அன்புருவான சர்தார் சாகிப்பும் அவர் குடும்பத்தினருமா? அல்லது டில்லியில் அழிவு வேலையில் ஈடுபட்டுள்ள ஆசாமிகளா?

யார் முஸ்லிம்? யார் இந்து? யார் சீக்கியர்?

ஆயினும் இந்தக் கேள்வியை எங்கு போயினும் கேட்காதவர்களே கிடையாது. இது என் மனத்திற்குள் நன்றாகப் பதிந்துவிட்டது. நானே என்னைக் கேட்டுக் கொள்ளத் தொடங்கினேன். "நீ யார்? யாரப்பா நீ? ஹிந்துவா, முஸ்லிமா? முஸ்லிமா, ஹிந்துவா?"

"நான் யார்? ஹிந்துவா, முஸ்லிமா?"

இரவும் பகலும் இந்த ஒரே கேள்வி என்னை வாட்டத் தொடங்கியது. நான் தூங்க முயலும்

பொழுதுகூட என்னைச் சுற்றிப் பயங்கர ராக்ஷஸர்கள் கூடி நின்று பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஈட்டியினுல் குத்தி, 'நீ யார்? ஹிந்துவா, முஸ்லிமா? முஸ்லிமா, ஹிந்துவா?' என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லும்படி வற்புறுத்துவதுபோல் இருந்தது. நான் கனவிலும் 'என்னைச் சும்மா விட்டு விடுங்கள். நான் யார் என்று எனக்குத் தெரியாது. நான் ஹிந்துவுமல்ல, முஸ்லிமுமல்ல, சீக்கியனுமல்ல. நான் ஒரு மனித ஜன்மந்தான்?' என்று கூச்சலிடுவேன்.

பம்பாயிலும் அகதிகளுக்கு முகாம்கள் இருந்தன. "நீ ஒரு சீக்கியனுக இருந்தால் நேரே கால்சா கல்லூரிக்குப் போ. ஒரு ஹிந்துவாக இருந்தால் ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் போய்ச் சேர். ஒரு முஸ்லிமாக இருந்தால் வழி தேடிக் கொண்டு அன்ஜுமான் இஸ்லாம் ஹைஸ்கூலுக்குப் போ" என்ருர்கள். ஆனுல் நான் எங்கு போவது? நான் யாரென்றே எனக்குப் புரியவில்லையே? நான் ஒருவர் பக்கத்திலும் இருப்பதாகத் தெரியவில்லையே!

எனக்குத் தானங் கொடுப்பதுகூட மறுக்கப்பட்டது. பிச்சை கொடுப்பதற்கு முன் தங்கள் மதத்தவன்தானு என்று, தானங் கொடுப்பவர் நிச்சயம் செய்து கொள்கிருர்கள். நான்தான் ஒரு இனத்தையும் சேர்ந்தவனுக இல்லையே!

அப்படியானுல் நான் பட்டினியால் சாகவேண்டியதுதானு? எப்படியாவது நான் யாரென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொள்ளாவிட்டால் வாழ வழியில்லை!

யாரோ ஒருவர் "டாக்டர் சமானியிடம் போ. அவர் ஒருவரால்தான் உனக்கு ஞாபகசக்தியை உண்டாக்க முடியும்?" என்று யோசனை கூறினுர்.

டாக்டர் சமானியின் பெயரைத்தான் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களே! அவர் ஒரு மனேதத்

துவ வைத்தியர். அவர் ரண வைத்தியத்தால் வியாதியஸ்தர்களைக் குணப்படுத்த மாட்டார். பிணியாளர்களைப் பேசச் சொல்லித் தானும் பேசிக் குணப்படுத்துவார். அங்கு நான் சென்றேன்.

அறையைச் சுற்றிலும் குளிர்ச்சியான விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. சுவரெல்லாம் வெண்மையாக இருந்தது. டாக்டரின் கோட்டும், நர்ஸின் உடையும்கூட வெண்மையாகவே இருந்தன. எல்லாவற்றையும்விட டாக்டரின் குரல் இங்கிதமாக இருந்தது.

மெதுவாக அன்புடன் என்னிடம், "உனது மனதிற்குச் சிறிது ஓய்வு கொடு. சிரமம் ஒன்றுங் கொடுக்காதே. பிறகு உன் மனதில் என்ன தோன்றுகிறதோ அதையெல்லாம், அது எதாக இருந்தாலும் பரவாயில்லை, கூறு" என்றார். பின்னர் கையில் காகிதத்தையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு நான் பேசுவதை எழுத அமர்ந்தார். நான் கண்ணை மூடிக்கொண்டு மனதை உலவும் படி செய்தேன்.

ஏதோ பரந்த இடத்தைப் பற்றிய பழைய ஞாபகம் வந்ததுபோல் தோன்றவும், "நீல நிற வானம்" என்றேன். பின்னர் "நீல நிற வானின் அடிவிழிம்பு வரை பரந்து கிடக்கும் பசிய வயல்கள்......"

"ரொம்ப நல்லது" என்று உற்சாகமூட்டினார் டாக்டர். அவர் காகிதத்தில் பென்சிலால் குறிக்கும் சப்தம் என் காதில் பட்டது. "நிறுத்தாமல் சொல்லிக் கொண்டிரு" என்றார்.

நான் மனதில் தோன்றியவற்றை எல்லாம் கூறினேன். "பசும் வயல்கள். மாரிக் காலத்தில் வளைந்தோடும் ஆறு. வாய்க்காலில் தண்ணீரை இறைத்தும், முங்கியும் எழும்பியும் விளையாடும் குழந்தைகள். அக்குழந்தைக் கூட்டத்தில் நானும் ஒரு குழந்தையாய்த் தண்ணீரில் குதித்து விளையாடுகிறேன்......"

தூரத்திலிருந்து வரும் குரல்போல் "இக் குழந்தைகள் யார்? ஹிந்துக் குழந்தைகளா? முஸ் லிம் குழந்தைகளா? சீக்கியக் குழந்தைகளா? என்று டாக்டர் கேட்பது லேசாகக் காதில் விழுந்தது.

"வெறும் குழந்தைகள்தான்" என்று நான் பதில் கூறியதாகப் பட்டது.

"அறுவடைக்குப் பின்னர் காட்சியளிக்கும் வயல்கள். ஆகாயத்தை முட்டுவதைப்போல் குவிக் கப்பட்டுள்ள தானியப் போர்கள். அறுவடைத் திருவிழா, அதோ, அதோ அந்த அற்புத டோலக் வாத்திய ஒலியையும் பாட்டையும் கேளுங்கள்!"

"அந்தப் பாட்டைப் பாடுபவர் யார்?"

"பெண்கள்"

"அது சரி, ஹிந்துப் பெண்களா, முஸ்லிம் பெண்களா, சீக்கியப் பெண்களா?"

"அவர்கள் பஞ்சாபிப் பெண்கள்; ஹிந்து, முஸ்லிம், சீக்கியர் ஆகிய அனைவரும் இருக் கின்றனர்."

டாக்டர் ஏமாற்றத்துடன் பெருமூச்சு விட் டது காதில் பட்டது. "சரி, சரி, மேலே கூறு" என்றார்.

"எனக்கு இப்பொழுது ஒன்றும் கேட்க வில்லை; ஒன்றும் தென்படவில்லை" என்பதையும் கூறினேன்.

"ஏன்? என்ன காரணம்?"

"எனக்குப் பலத்த தலைவலி ஏற்பட்டிருக் கிறது. எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஒரு விசித்திரமான பயங்கர ஓசை கேட்கிறது..."

"நன்றாக முயற்சி செய்து பார். உனக்கு ஒன் றும் காண முடியவில்லையா?"

"ஆம்; இதோ என்னால் பார்க்க முடிகின்றது. வானை நோக்கிச் செல்லும் தீ ஜ்வாலை! ஊர்

முழுதும் நெருப்புப் பற்றி எரிகிறது. அரவம் பெருகிக் கொண்டே வருகிறது. கூச்சல்களும், பெண்களின் ஓலமும்......"

"அது சரி; இதுதான் கலகக்காரர்கள் வேலை. இவர்கள்தான் உன் குடும்பத்தினரைக் கொன்றவர்கள். உன் வீட்டைக் கொளுத்தி, உன் மன அமைதியைக் குலைத்தவர்கள்...... அவர்கள் பேசுவதை நன்றாகக் காது கொடுத்துக் கேள்..."

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே, சத்தம் பலமாகக் கேட்கிறது. 'கொல்லு! கொல்லு!' என்ற ஒரே வார்த்தை மட்டுந்தான் காதில் படுகிறது. டாக்டர், என்னைக் காப்பாற்றுங்கள்."

"நன்றாகக் கவனமாய்க் கேள். உற்றுப் பார், ஞாபகப்படுத்திப் பார். உன் வீட்டைக் கொளுத்தி உன் குடும்பத்தார்களைக் கொல்லும் கும்பல் யார் என்று நன்றாகக் கவனி? அவர்கள் மீது நீ பழி வாங்க வேண்டாமா ? பழிக்குப் பழி......"

ஐயையோ! நான் ஹிந்துவா, முஸ்லிமா, சீக்கியனா என்று டாக்டர் கண்டு கொள்ள முயற்சிக்கிறார் என்பதை என் மூளையில் ஒரு அலாரம் போல் எச்சரிக்கும் உணர்ச்சி ஒன்று தோன்றியது.

"நான் ஒரு முஸ்லிம். சர்தார் சாகிப்பின் உறவினர்களைக் கொன்றவன், ரயில் வண்டியில் என்னைக் காப்பாற்றிய பஞ்சாபி ஹிந்து வாலிபரின் சொத்துக்களைச் சூறையாடியவன். ஆயிரக்கணக்கான ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் கொன்று குவித்திருக்கிறேன்......"

"நான் ஒரு ஹிந்து. நான் ஹக்கீம் சாகிப்பின் மகனையும், மற்றும் ஆயிரக்கணக்கான முஸ்லிம் ஆண், பெண், குழந்தைகளையும் கொன்றிருக்கிறேன்......!"

"முடியாது, முடியவே முடியாது! நான் யார்? நான் யாரென்று, அறியவே விரும்பவில்லை. நான் ஹிந்துவாகவோ, முஸ்லிமாகவோ, சீக்கியனாகவோ இருக்க விரும்பவில்லை. நான் ஒரு சாதாரண

மனிதப் பிறவியாகவே இருக்க விரும்புகிறேன்'' என்றேன். கண்ணைத் திறந்தேன், டாக்டரைத் திக் பிரமையுடன் உட்கார வைத்துவிட்டு, அந்த அறையிலிருந்து வெளியே ஓடி வந்துவிட்டேன்.

''நான் ஒரு ஹிந்துவா? நான் ஒரு முஸ்லிமா?''

''நான் யார்? நான் என்ன பொருளால் ஆனவன்?''

இந்தக் கேள்விகள் எழுந்து கொண்டே இருந்தன.

பிளேக் கொள்ளை நோயிலிருந்து தப்பிப் பிழைத்து ஓடுபவன் போல் அங்கிருந்து ஓடினேன். ஆயினும் அக்குரல்கள் நான் எங்கே சென்றாலும், என்னைத் துரத்திப் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

நான் எந்தப் பக்கம் போனேனே தெரியாது. என்னை ஒரு முரட்டுப் பயல் நிறுத்தி, ''டேய், அயோக்கியப் பயலே! எங்கே போகிறாய்? நீ யார்?'' என்றான்.

அவன் ஒரு முஸ்லிம் காலி. அவன் கண்களிலே கொலைத் தீ ஜ்வலித்தது. அவன் கையிலிருந்த கொலைக் கருவியும், என் கண்ணில் பட்டது. ஆனால் என் மனது, முன் ஈடுபட்ட பிரச்னையில் மூழ்கியிருந்தது. ''நான் ஒரு ஹிந்து. நான் ஒரு முஸ்......''

''நான் முஸ்லிம்'' என்று கூறி முடிப்பதற்குள், அவனது கத்தி எனது முதுகுக்குள் நுழைந்துவிட்டது. நீங்கள் இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே அதே காயந்தான் அது.

நான் தட்டுத் தடுமாறிக் கீழே விழும் நிலையில் இருக்கையில் ''காபிர் பயல்'' என்று அவன் கூறியது காதில் விழுந்தது. ரத்தம் ஒழுகிக் கொண்டேயிருக்க அங்கிருந்து நடந்தேன்.

தட்டுத் தடுமாறி நடந்து வேறொரு பகுதிக்குப் போய்ச் சேர்ந்தேன். இம்முறை என்னை ஒரு ஹிந்துக் குண்டன் மறித்துக் கொண்டான். "ஏய் நீ யார்? ஹிந்துவா முஸ்லிமா?" என்று கேட்டுக் கொண்டே வேஷ்டியில் ஒளித்து வைத்திருந்த கத்தியை எடுத்தான்.

நான் எனது வாய்ப்பாட்டை விடாது கூறிக் கொண்டே இருந்தேன். "நான் ஒரு முஸ்லிம்; நான் ஒரு ஹிந்......" இந்த முறை "நான் ஹிந்து" என்று முடிப்பதற்குள் அவனது கத்தியின் கூரிய அலகு என் வயிற்றுக்குள் பாய்ந்துவிட்டது...

எனக்கு எப்படி இரண்டு வெட்டுக் காயங்கள் ஏற்பட்டன என்பது இப்போது உங்களுக்குப் புரிந்து விட்டதா? நான் முஸ்லிமாலும், ஹிந்துவாலும் குத்தப்பட்டேன். அதனால்தான் டாக்டர் ஸார்! நீங்கள் என்னைக் காப்பாற்ற முடியாது என்று சொல்லுகிறேன். நான் சாவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னைச் சுற்றி நிற்கும் உங்களில் ஒருவர் கூட என்னைக் காப்பாற்ற முடியாது. உண்மையில் நீங்கள் என்னைக் காப்பாற்ற விரும்பவில்லை. உங்களில் ஒருவர்கூட விரும்பவில்லை என்பது எனக்குத் தெரியும். அது மட்டுமல்ல, என் சாவுக்குப் பழி வாங்கத் தயாராக இருக்கிறீர்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரிகிறது. உயிர் போகும் இந்த நேரத்திலே 'நான் ஹிந்து! என்று கூறி விட்டால் இங்கு நிற்கும் இந்த வீர ஹிந்து, குற்றமற்ற நான்கு முஸ்லிம்களைப் பழி வாங்கி விடுவார். 'நான் முஸ்லிம்' என்று கூறிவிட்டாலோ இந்த முஸ்லிம் தீரர்கள் ஹிந்து சமூகத்தையே பழி வாங்கக் கிளம்பி விடுவார்கள்.

இப்பொழுது நான் யார் என்று எனக்குப் புரிந்து விட்டதால்தான் நான் சிரிக்கிறேன். பழைய ஞாபகங்கள் இப்பொழுது தோன்றி

விட்டன. என் முன்னுலேயே கொலே செய்யப்பட்ட எனது மனேவியின் அழகிய கண்கள், கள்ளங் கபடமற்ற எனது குழந்தையின் பார்வை, என் மனக்கண் முன்னே நிற்கின்றன. இக்காட்சியைக் கண்டதால்தான் என் ஞாபக சக்தியை நான் இழக்க நேர்ந்தது. ஆம்; இதோ எனது வயல்கள், கிராமம், எனது நண்பர்கள் அண்டை வீட்டுக்காரர்கள் ஆகிய அனேவரின் தோற்றமும் சாகப் போகும் இந்த நேரத்திலே தோன்றுகின்றன. உயிர் போகும்பொழுது எல்லாம் ஞாபகத்திற்கு வருகின்றன.

ஆனுல் நண்பர்களே! நீங்கள் வீணுகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள். நான் ஹிந்துவோ முஸ்லிமோ என்று கூறப்போவதில்லே. என்னேக் குத்திய ஹிந்து கொலேகாரனே, முஸ்லிம் கொலேகாரனே தவறுதலாகத் தன் இனத்தவனேயே குத்திய செய்தியை நான் கூறப்போவதில்லே. ஆயிரமாயிரம் மக்களேக் கொலே செய்து, என் அருமைப் பஞ்சாபின் புனிதப் பெயரைக் களங்கப் படுத்தி, தாழ்மைப்படுத்திய ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் ஆகிய அனேவர்மீதும் பழி வாங்குவதற்கு இந்த இருவர் பெயரையும் கூருமலிருத்தலே நல்ல வழி.

நான் ஒரு ஹிந்துவா, முஸ்லிமா ?

இந்தக் கேள்வி அவர்கள் மனதை வாட்டிக் கொண்டே இருக்கும். நகர்களிலும், கிராமப்புறங்களிலும், தொழிற்சாலேயின் யந்திர ஓசையிலும், டிராம்களின் ஒலியிலும், பஸ்களின் சத்தத்திலும், ரயில் வண்டி கிளப்பும் இடி ஓசையிலும், வாணியனின் செக்கு எழுப்பும் கிரீச்சிடும் நாதத்திலும் ஒரே ஒரு கேள்வி கேட்கப்படுவதை அறிவார்கள். அவன் ஒரு ஹிந்துவா, முஸ்லிமா ? அவர்களோ,

அவர்கள் குழந்தைகளோ, அல்லது அவர்களின் பரம்பரையினரோ ஒருக்காலும் நிம்மதியாக இருக்கப் போவதில்லை. எனது பழி மகா பயங்கரமாக இருக்கும்.

நான் ஏன் சிரிக்கின்றேன் என்பதை அறிய நீங்கள் இன்னும் விரும்புகிறீர்களா ?

# சில்வியா



சில்வியா !

புதுடில்லி இர்வின் ஆஸ்பத்திரியில் அவள் ஒரு நர்ஸ். மாதக் கடைசியில் அறுபத்தைந்து ரூபாய் சம்பளம் பெறுவதற்காக, தினமும் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்தாள். ஒவ்வொரு மூன்றாவது மாதமும் இரவு வேலை பார்க்க நேர்ந்தது. முப்பது அல்லது முப்பத்தோரு நாட்கள் கண் விழிப்பதால் (பிப்ரவரி மாதங்களில் இரவு வேலை பார்க்கும் அதிர்ஷ்டம் அவளுக்குக் கிட்டவில்லை.) கண்களைச் சுற்றிச் சோர்வின் வட்டம் தோன்றியது. இரவு நர்சுகள் பகல் நேரத்தில் தூங்கலாம். ஆயினும் வெளிச்சம், சப்தம் ஆகியவற்றின் காரணமாக இரவில் தூங்குவது போல் அமைதியாகத் தூங்க முடிவதில்லை. தொடர்ந்தாற்போல் கண்விழித்து வரும்போது மாதக் கடைசியில் மிகவும் கஷ்டமாக இருக்கும்; அப்பொழுது சிலமணி நேரத்திற்கொரு முறை தூங்காமலிருப்பதற்காக முகத்தில் தண்ணீர் அடித்துக் கொள்வாள்.

அவளுக்கு ஒதுக்கப்பட்ட பொது வார்டானது சுமார் நூறடி நீளமிருக்கும். இருபுறமும் பக்கத்திற்கு இருபது கட்டில்கள் இருந்தன. காட்டிற்குள் செல்லும் ஒற்றையடிப் பாதைபோல் நடுவிலே ஒரு வழியுண்டு. பன்னிரண்டு மணி நேரத்தில் அதில் அவள் குறைந்தது ஐம்பது தடவையாவது நடக்க வேண்டியிருக்கும். ஸ்பெஷல் வார்டிற்குப் பத்துப் பன்னிரண்டு தடவையும், நோயாளிகளின் உணவைப்பற்றிக் கட்டளையிட

நாலைந்து தடவை சமையலறைக்கும் செல்ல நேரும். அவசரக் கேஸ்களைக் கவனிப்பதற்காக டாக்டரை அழைக்கக் காரியாலய அறைக்கு இரண்டு அல்லது மூன்று தடவையாவது நடக்க வேண்டும். பொதுவாக ஒரு நாளைக்குக் குறைந்தது ஆறு அல்லது ஏழு மைலாவது நடக்க வேண்டி இருக்கும். கொஞ்ச நேரம் உட்கார்ந்து சோர்ந்த தன் கால்களுக்கு ஒய்வு கொடுக்க நேரம் கிடையாது. எந்த நேரமும் நடைதான். இந்த வேலைத் தொல்லை அவளது கால்களில் வீக்கத்தைக்கூட உண்டாக்கி விட்டது. சில சமயங்களில் மற்றொரு அடியும் எட்டி வைக்க முடியாது என்று தோன்றும். சோர்ந்த தசைகளைத் தேய்த்துக் கொடுத்துச் சோர்வைப் போக்கி உயிருண்டாக்கி, தனது தினசரி வேலைகளைத் தொடங்குவாள். சொர்க்கம் எப்படியிருக்கும் என்று அவளைக் கேட்டிருந்தால் 'நாள் முழுதும் அசையாது கட்டிலில் படுத்திருக்கக்கூடிய இடம்தான் சொர்க்கம்' என்று சொல்லியிருப்பாள்.

சில்வியா !

அவள் ஒரு நர்ஸ். அவளது வார்டிலுள்ள நாற்பது நோயாளிகளைக் கவனித்துக் கொள்வது அவளது வேலை. மூன்றுமணி நேரத்திற்கு ஒரு முறை நோயாளிகளின் உடல் உஷ்ணத்தை அளவெடுத்து 'சார்ட்டை' நிரப்ப வேண்டும். அடிக்கடி அவர்களுக்கு மருந்து ஊற்றிக் குடிக்கக் கொடுக்க வேண்டும். தினமும் காலையில் அவர்களது படுக்கை விரிப்பை மாற்றவேண்டும். அவர்கள் உடல் கழுவவும், உடை உடுத்தவும் உதவ வேண்டும். உணவு கொடுக்க வேண்டும். பேசிச் சந்தோஷப்படுத்த வேண்டும். அசைய முடியாதவர்களின் உடலைக் கடற் பஞ்சால் தேய்க்க வேண்டும். 'எனிமா' கொடுக்க வேண்டும், படுக்கையில் மலம் கழிக்கப் பாத்திரம் வைக்க வேண்டும், அதிக அசௌகரியமாக இருந்தால் அவர்கள் நீர் கழிக்கப்

பாத்திரம் கொடுக்க வேண்டும். மிகுந்த பலவீனம் காரணமாக நோயாளி படுக்கையை அசுத்தப் படுத்திவிட்டால், அதனை அகற்றி உடையை மாற்றி அவனைச் சுத்தமாக்க வேண்டும். பின்னர் டாக்டரின் உத்தரவுப்படி நோயாளிகளின் முதுகில் படுக்கைப் புண்கள் தோன்ருதவாறு முதுகைத் தேய்க்க வேண்டும்.

சில்வியா !

அவள் மனிதப்பிறவி இல்லையா? ஓய்வு ஒழிச் சலற்ற யந்திரமா அவள்? ரத்தம், சலம், மலம், மூத்திரம் ஆகியவற்றைப் பார்த்துப் பார்த்து அவளுக்கு வெறுப்புத் தட்டவில்லையா? மெலிந்து வெளுப்பேறிய நோய் படைத்த முகங்களைக் கண்டு கண்டு அவள் உணர்ச்சியே மங்கிப்போய் விட்டதா? அவளது இதயமும் உள்ளமும் பழக்கத்தால் மரத்துப் போய்விட்டனவா? இளமையின் ஏக்கம், ஆவல், உணர்ச்சி ஆகியவை அவளது இதயத்தில் துடிப்பதில்லையா? சுற்றிலுமுள்ள உயிர்களைக் கண்டு உணர்வு தோன்றுவதில்லையா? அழுகைகளையும், முனகல்களையும், மரணக் கூச்சல்களையும் கேட்டுக்கேட்டு அவளது காதுகள், இன்னிசை, குருவிகளின் பாட்டு, குழந்தைகளின் குதூகலச் சிரிப்பு ஆகியவற்றைக் கேட்க முடியாமல் போய்விட்டனவா? நோயின் அருகில் தினம் இருப்பதால் ஆத்மாவின் ஆசைத் துடிப்புகளை மழுங்கச் செய்து விட்டதா?

அவள் இளமையும் வசீகரமும் பொருந்திய ஒரு நர்ஸ். அவள் திறமையும், உற்சாகமும், பணிவும் கொண்டவள். எல்லா நர்சுகளும் பார்வைக்கு அப்படித்தானிருக்கிருர்கள். இந்தச் செயற்கை வெளித் தோற்றத்துக்கிடையே அவர்கள் பேராசை மிக்கவர்களாகவும், ஒழுக்கமற்றவர்களாகவும் இருக்கிருர்கள் என்றும் சிலர் கூறுகிருர்கள். 'அவர்கள் வலையில் விழுந்தவர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்! கல்லூரி

மாணவர்கள், டாக்டர்கள், குமாஸ்தாக்கள் இவர்கள் அனைவரும் அவர்கள் வலையில் வீழ்பவர்கள். அவர்களது கஞ்சியிடப்பட்ட, தூய வெள்ளை உடையில் அவர்களைப் பார்த்தால் இரக்கமே உருவான தேவதைகள் போல் தோன்றுகின்றார்கள். ஆனால் அவர்களுடைய இதயத்தில் பேராசையும், காம வேட்கையுமே மிகுந்துள்ளது' என்றெல்லாம் பேசிக் கொள்ளுகிறார்கள். ஒரு வேளை அவர்கள் கூறுவது சரியாகவும் இருக்கலாம். அல்லது தவறாகவும் இருக்கலாம். துறவியாக இருந்தாலும், சினிமா நடிகர்களாக இருந்தாலும், நர்சுகளாக இருந்தாலும், கன்னிகா மடத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—அவர்கள் எல்லோரும் மனித ஜென்மங்கள்தானே. தவிர, தினசரி வேலைத் தொல்லை காரணமாகவும், கிடைக்கும் மிகக் கேவலமான சம்பளத்தின் காரணமாகவும், தங்கள் காதலையும் உடல்களையும் சில நர்சுகள் விற்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அதற்காக அவர்கள் மனிதப் பிறவிகளினின்று அப்பாற்பட்டவர்களாகி விடுகின்றார்களா? இந்த மோசமான சூழ்நிலையிலிருந்து சிறிது நேரமாவது விலகிச் சுத்தமான வாலிபனின் கரங்களில் கட்டுப்பட்டுச் சிலமணி நேரம் இன்பம் துய்க்க விரும்பினால், அது அவர்களது மனிதத் தன்மையைத்தான் காட்டுகிறது! தேவர்களும், பைசாசங்களுமே ஆசையை ஒழித்தவர்களாவர்.

சில்வியா!

அவள் ஒரு சாதாரண மனிதப் பிறவிதான். ஒரு குணக் குன்றல்ல. பெரும் கற்புக்கரசியுமல்ல. ஒரு முறையல்ல, பலமுறை அவள் இன்பங் கண்டிருக்கிறாள். இந்தக் கடினமான, சோர்வுற்ற, மந்தமான சூழ்நிலையுள்ள ஆஸ்பத்திரி வார்டுகளைச் சகித்துக் கொள்ள இவ்வின்பமே அவளுக்கு மாற்றாக இருந்தது. நோயாளிகளின் கூச்சல்கள், முனகல்கள், ரத்தம், சலம், மூத்திரம், வாந்தி

ஆகியவற்றின் வீச்சம்; புரையோடிய புண்கள்; சலம் தோய்ந்த கட்டிகள்; இன்ஜெக்ஷன்கள், ஆபரேஷன், குழி விழுந்த கண்கள், சுருக்கங்கள் நிறைந்த சூம்பிய முகங்கள், நீல நிறத்தில் வெளிக்காட்டும் நரம்புகள்; வீக்கங்கள், புற்று நோய்கள், யானைக்கால் வியாதிகள்—இவற்றையெல்லாம் மறப்பதற்கு—அது ஒரு சிறு கண நேரமாக இருந்தாலும்—இன்பம் நாடுவதுதான் ஒரே வழி. தன் உடல்மீது மற்ருெரு உடல்பட்டு உண்டாகும் லேசான சூடு, தன் கன்னத்தில் ஆடவரின் உணர்ச்சி மிக்க மூச்சுப்படுதல்—'லைசால்' மருந்து வாசனையிலிருந்து வேறுபட்ட அவனது உடலின் வாசனையை முகர்தல்—ஆ! எவ்வளவு அற்புதம்!

இந்த இன்பங்களெல்லாம் ஒரு சில நிமிடங்கட்குதான். கூடிஞல் ஒன்றிரண்டு மணி நேரங்கள் வரை இருக்கும். இத்தகைய இன்பத்தை அனுபவித்தபின் தன்னை யாரோ ஏமாற்றிவிட்டது போல் ஒரு வெறுமை தோன்றும். அவளது காதலர்கள் அவள்மீது அன்பு பாராட்டத்தான் செய்தார்கள். அவளைச் சினிமாவிற்கு அழைத்துச் சென்ருர்கள். நிலவுக்காலங்களில் உல்லாசப் பயணத்திற்கும், விருந்துகளுக்கும் அழைத்துச் சென்ருர்கள். அன்பு ததும்பப் பேசித் தங்கள் காதலையும் தெரிவித்தார்கள். கசப்பு மாத்திரையைச் சர்க்கரையால் மூடிஞர்கள். ஆயினும் சில்வியாவின் வாய் கொய்ஞக் கசப்பை உணர்ந்தது. இந்த வெளி வேஷங்களுக்குப் பின்ஞல் சந்தைக் கடையின் சந்தர்ப்ப வேஷம் இருப்பதை உணர்ந்தாள். அவர்களின் கொஞ்சல்களுக்கிடையே அவர்களின் அதிகாரமும் தொனித்தது. ஹாஸ்டலுக்குத் திரும்பி—மற்றும் ஐந்து நர்சுகளுடன் தான் வசிக்கும் தன் அறையில் இருந்த கட்டிலில் போய்ப் படுப்பாள். வாழ்க்கையின் சோர்வும், கசப்பும் ஒன்றுகூடி அவளை வாட்டும். சிலமணி நேர இன்பத்திற்குப்பின் தோன்றும்

இவ் வெறுப்புணர்ச்சி அதிகமாகும். இரவின் நிச்சலனத்தில் சில்வியாவின் உள்ளுணர்வுகள் தலை தூக்கும். மனத்திலே அடக்கி ஒடுக்கி வைத்திருந்த ஆசைகள், ஆவல்கள், உணர்ச்சிகள் அனைத்தும் காட்டாற்று வெள்ளம்போல் கட்டு மீறிக் கிளம்பும். விவாகம், அன்புமிக்க காதற் கணவன், நல்ல வசதியுள்ள வீடு, பெரிய மெல்லிய பஞ்சணைப் படுக்கை; எல்லாவற்றையும் விட முக்கியமாக... குழந்தைகள்! சில்வியாவின் சொந்தக் குழந்தைகள்! அவளால் என்றும் அவற்றைப் பெற முடியாமற் போய்விடுமா? வேலை செய்யும் நேரங்களில்கூட இந்தக் கேள்வி அவளது மூளையில் அடிக்கடி தோன்றி வாட்டும்.

அவ்வெண்ணம் தோன்றியதும் அவளையும் அறியாமலே அவளது கால்கள் குழந்தைகள் வார்டிற்கு இழுத்துச் செல்லும். அவர்களது குதூகலச் சிரிப்பிலும், சுருட்டைத்தலைக் குழந்தைகள் பேசும் குதலை மொழியிலும், தன்னையே மறந்து இருந்து விடுவாள். 'சிஸ்டர், நர்ஸ்' என்ற அழைப்புக் குரல்கள் காதில் விழுந்தபின்தான், இந்த உலகத்தில் இருப்பது அவளுக்கு ஞாபகம் வரும். அதன் பின்தான் வார்டுக்குப் போய்ச் சேருவாள்.

'அம்மா!'

மணிக்கூண்டில் நள்ளிரவில் பன்னிரண்டு மணிகள்—அடித்தன. வார்டிலுள்ள எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டுள்ளன. அந்த இருட்கடலிலே சில்வியா இரவு ரிப்போர்ட் எழுதும் மேஜை மீதிருந்த வெளிச்சம்மட்டும் ஒற்றைத் தீவுபோல் காட்சியளித்தது. அவளது அழகிய கரங்களால் எழுதும்பொழுது மூடியிடப்பட்ட விளக்கிலிருந்து சிறிய வட்டமாக வெள்ளைக் காகிதத்தின்மீது வெளிச்சம் விழுந்தது. பதினைன்காம் நம்பர் படுக்கையிலுள்ள நோயாளிக்கு நிமோனியா. ஒரே பக்கமாக ஆறு வார காலம் படுத்திருக்கும் நம்பர்

27 முதுகுவலியென்று குறை கூறுகிறான். நம்பர் 34 விடியும்வரை உயிர் வாழ்வானோ என்று கூடச் சந்தேகமாயிருக்கிறது. அவனது தலையில் ஆழ்ந்த காயம் பட்டிருந்தது. பாவம்! அவனது உடையிலிருந்தும் தோற்றத்திலிருந்தும் கிராமத்திலிருந்து வந்த விவசாயிபோல் தோன்றியது. பட்டணத்திற்கு அப்பொழுதுதான் வந்திருக்கிறான் போலிருக்கிறது. வந்ததும் ஒரு லாரி இடித்துத் தள்ளி விட்டது. அவன் இன்னும் ஸ்மரணை அடையவில்லை. வருத்தந்தோய்ந்த கம்மிய குரலில் கூப்பிடும் அந்த நோயாளி யார்?

'அம்மா!'

சில்வியா வார்டைச் சுற்றி நோக்கினாள். அவளது மேஜை விளக்கினருகிலுள்ள ஓரிரு கட்டில்களைத் தவிர மற்றவை இருளிலே கிடந்தன. அவளுடைய கூர்மையான காதுகளுக்கு நோயாளிகளின் குரல்கள் பழக்கமாகிவிட்டபடியால், இருட்டில்கூட யார் யார் அழுகிறார்கள், அனத்துகிறார்கள், இருமுகிறார்கள், குறட்டை விடுகிறார்கள் என்று அறிந்துகொள்வாள். அந்தச் சமயத்தில் அவள் யோசனையில் ஆழ்ந்திருந்ததால் அது யார் என்று அவளுக்குப் புலப்படவில்லை. பேனாவைக் கையிலேந்திக்கொண்டே சிறிது நேரம் அந்த நோயாளி மீண்டும் கூப்பிடுவதைக் கேட்கக் காத்துக்கொண்டிருந்தாள். 35-ஆம் நம்பரின் குறட்டையையும், 14-ஆம் நம்பரின் வறட்டு இருமலையும் தவிர வேறு ஒன்றும் கேட்காததால் பழையபடி தனது சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

சில்வியா தனது கடைசி ரிப்போர்ட்டை எழுதுவதில் ஒரு குதூகலமடைந்தாள். இதுவே அவளது நர்சுத் தொழிலின் கடைசி நாள். நாளை முதல் இந்தப் பாழாய்ப்போன ஆஸ்பத்திரியில் கால் அடி எடுத்து வைக்கமாட்டாள். நாளை முதல் அவளுக்கு ஆஸ்பத்திரியோ, வியாதியஸ்தர்களோ, இரவு வேலை பார்ப்பதோ கிடையாது.

இனி இந்த வார்டைச் சுற்றிப்பார்க்க வேண்டிய தில்லை. இதுவே அவளது அடிமை வாழ்வின் கடைசி நாள். நாளைமுதல் அவள் சுதந்திரமாக இருப்பாள். விடுதலை! ஆஸ்பத்திரியின் மத்தியி லிருந்த அவளுக்கு, எதிர்காலத்தில் தனக்காகக் காத்திருக்கும் வீடும் வாசலும், தோட்டமும், மேன் மையான மெத்தையும், அன்புள்ள கணவனும் கொண்ட சொர்க்கம் எதிர் நோக்கி யிருப்பதை எண்ண எண்ண அவளுக்குக் குதூகலமாக இருந்தது.

ஜார்ஜை நினைக்கையில் அவளுக்குச் சிறிது சங்கடமாக இருந்தது. ஜார்ஜ் கல்யாணம் செய்து கொள்ள லாயக்கற்றவர் என்பதற்காக அவள் சங்கடப்படவில்லை. ரயில்வேயில் அவர் ஒரு கார்டு; மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் கிடைக் கிறது. அதோடு வருஷா வருஷம் சம்பள உயர் வும் உண்டு. இப்பொழுதுகூட அவர் நான்கு அறைகளும் ஒரு தோட்டமும் உள்ள பங்களாவில் தான் வசித்து வருகிறார். தோட்டம் என்னவோ சின்னதுதான். இருப்பினும் ஏதோ தோட்டம் ஒன்று இருக்கிறது. மென்மையான மெத்தை நிச் சயமாக இருக்கும். அதைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. மூன்று முறை அவர் வீட்டிற் குத் தேனீர் அருந்தப் போயிருந்தும், படுக்கை யறையை அவளுக்குப் பார்க்கச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. காரணம் ஜார்ஜ் தெய்வ நம்பிக்கை யுள்ள ஒழுக்க சீலர். சில்வியாவை அவர் முத்த மிட்டதுமில்லை. படுக்கைக்கு அழைத்ததுமில்லை

ஜார்ஜும் அவரது படுக்கையும்......

அவள் உடல் முழுதும் ஒரு உணர்வு தோன் றக் காரணம் என்ன? எல்லா வகையிலும் ஜார்ஜ் ஒரு உத்தமமான கணவர்தான். கிறிஸ்மஸ் இர வன்று அவள் தனது சிற்றன்னை வீட்டில் அவ ரைக் கண்டபோது அவளை அன்புடனும் ஆதர வுடனும்—ஒரு தந்தை அன்பு காட்டுவது

போல்—உபசரித்தார். அது முதல் அவர் அவளை விரும்பி வந்தார். ஆனால் அவர் காதலித்தாரா? காதல்! அவர் சினிமாவில் வரும் கதாநாயகர்கள் போன்றவரல்ல. தமது காதலைத் தெரிவிக்கும் வெறிபிடித்த வாலிபர்களைப் போன்றவரல்ல. இருண்ட இடத்தில் வரும் பெண்ணை முத்தமிடக் காத்திருக்கும் ஆசாமிகள் போன்றவரும் அல்ல. இவையெல்லாம் அவர் வயதிற்கு ஏற்றதல்ல. அவர் வயது! அவர் வயது என்ன? அவ்வளவு அதிகமில்லை என்று சமாதானம் செய்துகொண்டாள் சில்வியா. முப்பத்தைந்து அல்லது நாற்பது இருக்கலாம். அதிகமிருந்தால் ஐம்பது இருக்கலாம். ஓய்வு பெற இன்னும் பல வருடங்கள் இருப்பதால் நிச்சயமாக ஐம்பத்தைந்து வயதாகி இருக்காது. முதல் மனைவி இறந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன. குழந்தைகள் ஏதும் இல்லாததால் அவர் தனியே வாழ்ந்தார். சில்வியாவைத் தன்னை மணக்கும்படி அவர் கேட்டுக்கொண்டபொழுது, அவர் தமது மந்தமான குரலில் 'இங்கே பார் சில்வியா, இந்தப் பெரிய வீட்டில் நான் மட்டுமே தனியாக இருக்கிறேன். என்னைக் கவனிக்க ஒருவரும் இல்லை. எனக்குக் கிடைக்கும் இருநூறு ரூபாயையும் வேலையாட்கள் வீணாக்கிவிடுகிறார்கள். நீ என்னைக் கல்யாணம் செய்துகொண்டாயானால் இருவருக்கும் நல்லதல்லவா?' என்று கூறினார். அவர் கூறியது அவ்வளவுதான். காதல் ஏக்கம் பிடித்த இருதயமுள்ள சில்வியாவுக்கு இவ் வார்த்தைகள் போதுமானவையாகத் தோன்றவில்லை, யாராவது தன்னிடம் உணர்ச்சி பொங்கிய காதல் மொழிகளுடன் 'சில்வியா, என்னுடைய இருண்ட வாழ்க்கையில் நீயே ஒரு பிரகாசமான தாரகை. நீயில்லாமல் ஒரு கணமும் உயிர்வாழ முடியாது நீ எனது மனைவியாவாய் என்று உறுதி கூறும்வரை எனக்கு நிம்மதியும் மகிழ்ச்சியும் தோன்றாது' என்று கூறவேண்டு

மெனத தோன்றியது. ஆனால் சில்வியாவின் அனுபவ உள்ளமோ 'நீ ஒரு முட்டாளாக இருக்காதே. உன்னிடம் எத்தனையோ இளைஞர்கள் காதல் வார்த்தைகள் கூறினார்களே, எத்தனை பேர் ஒரு நர்சை மணக்கச் சம்மதித்தார்கள்? ஒருவரும் இல்லையே!' என்றது. காதல் இதயத்தை அனுபவ உள்ளம் வென்றுவிட்டது. சில்வியா 'ஆம்' என்று கூறினாள்.

'அம்மா!'

இருளின் ஆழத்திலிருந்து ஒரு கம்மிய குரல் மீண்டும் கூப்பிடவே சில்வியாவின் எண்ண ஓட்டம் தடைப்பட்டது. அக்குரலிலே வேதனையும், சக்தியின்மையும்,அவசரமும் தோன்றவே உடனே எழுந்து சென்றாள்.

வார்டின் வலது புறத்தில் கிடக்கும் நோயாளியாக இருக்கவேண்டும் என அவள் எண்ணவே, தூங்குகிற நோயாளிகளின் முகத்தில் டார்ச் வெளிச்சத்தை அடித்துக்கொண்டே இடையிலுள்ள வழியில் நடந்தாள். 30-ஆம் நம்பர் பேர்வழி நன்றாகப் போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு தூங்கிக் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். ஒருவாறு அவனது விஷஜுரம் தணிந்து விட்டதால் இன்னும் ஓரிரண்டு நாட்களில் ஆஸ்பத்திரியை விட்டுப் போய்விடுவான். 33-ஆம் நம்பருக்கு மூலவியாதி யாகையால் காலையில் அவனுக்கு ஆபரேஷன் செய்யப் போகிறார்கள். 34-ஆம் நம்பர்? அவன் இன்னும் உயிருடனிருக்கிறானா, அல்லது இறந்துவிட்டானா? பாண்டேஜுகளால் மூடப்பட்டிருந்த ஒரு முகத்தின்மீது சில்வியாவின் டார்ச்சிலிருந்து வட்டமான வெளிச்சம் விழுந்தது. அது ஐம்பது வயதுள்ள ஒரு விவசாயினுடைய முகம். அவன் நேற்றுத்தான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். அது முதல் பிரக்ஞையற்றுக் கிடக்கிறான். நோயாளி இம் மயக்

கத்திலிருந்து தெளிவடைந்ததும் தன்னிடம் தெரிவிக்கும்படி டாக்டர் சில்வியாவிடம் கூறியிருக்கிறார். காரணம், விரைவில் அவன் மயக்கத்திலிருந்து எழுந்திருக்காவிட்டால் அவன் உயிர் வாழ்வதே சிரமம்.

'அம்மா!'

காயம்பட்ட மிருகத்தின் ஓசைபோல பாண்டேஜிற்குள்ளிருந்து சப்தம் வெளிவந்தது 34-ஆம் நம்பர் பழையபடி உணர்வு பெறுகிறான். டாக்டரைக் கூப்பிடச் சில்வியா ஓடினாள். அவசரமாக ஆவலுடன் டாக்டர் ஓடிவந்து நாடியைப் பார்த்து இன்ஜெக்ஷன் ஒன்றைக் கொடுத்தார். பின் மருந்துச் சீட்டை எழுதிச் சில்வியாவிடம் கொடுத்தார். அவன் இன்னும் சிறிது நன்றாக உணர்வு பெற்றதும் அம்மருந்து அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

டாக்டர் திரும்பிப் போய்விட்டார். ஆயினும் சில்வியா 34-ஆம் நம்பரின் படுக்கைக்கு அருகில் நின்று கொண்டிருந்தாள். காயம் பட்டவனின் உடலில் ஒரு போராட்டம்—உயிருக்கும் மரணத்திற்கும் இடையே ஏற்படும் போராட்டம்—நடந்து கொண்டிருந்தது. அது பெரிய போராட்டமாகும; வெள்ளை விரிப்பின் மீது கிடத்தப்பட்ட அவனது கறுத்த முரட்டுக் கரங்கள் வலியினால் ஆடின. விரல்கள் மூடி மூடித்திறந்தன. நகங்கள் உள்ளங்கைகளில் பாய்ந்தன. பாண்டேஜ் கட்டுக்கிடையே இருந்து 'அம்மா!' என்ற மெல்லிய குரல் கேட்டது. விவசாயக் கிழவனின் கைகளின் மேல் தனது மெல்லிய கரங்களை சில்வியா வைத்தாள். அவன் உடல் கொதித்துக்கொண்டிருந்தது. மெதுவாகத் தட்டிக் கொடுத்தாள். கைகளை மடக்குதல் நின்று விட்டதால் அவனுக்கு வலி நின்றிருக்கலாமெனத் தோன்றியது.

'அம்மா! ஏ என் அம்மா!'

இந்த முறை 34-ஆம் நம்பர், பெரிய குரலில் சப்தமிட்டான். சில்வியா மருந்து கலக்குமிடத் திற்குச் சென்று மருந்தைத் தயாரித்துக் கொண்டு வந்தாள். கவனமாகவும், மெதுவாகவும் சில சொட்டுக்களைச் சிறிய தேக்கரண்டியினுல் கொடுத் தாள். இன்னும் அவன் அரைப் பிரக்ஞையிலேயே இருந்தான். அவனது வாய் மிகவும் சிரமத்துடன் திறந்தது.சிற்சில சமயங்களில் அவனது மயங்கிய உள்ளம் தாயை நினைத்துக்கொண்டு 'அம்மா! என்னைப் பெற்ற அம்மா' என்று அழைத்தது.

'குழந்தாய், இந்த மருந்தைச் சாப்பிடு' என்று தனக்குத் தெரிந்த கொச்சை ஹிந்துஸ்தானியில் கனிவுடன் கூறினுள். பாதிப் பிரக்ஞையிலிருக்கும் அம்மனிதன் தனது பழைய குழந்தைக் காலத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்ததாலோ என் னவோ 'சரி அம்மா' என்று குழந்தைபோல் மருந்தை வாங்கிக் குடித்தான்.

ஆஸ்பத்திரிக் கடிகாரத்தில் நான்கு மணி அடித்தது. இருந்தும் 34-ஆம் நம்பர் படுக்கையை விட்டுச் சில்வியா நகரவில்லை. ஒரு மாதம் முழு வதும் அவள் இரவு வேலை செய்திருக்கிறுள். அவளது கால்கள் சோர்வினுல் கடுத்துவிட்டன. சிலமணி நேரங்கட்கு முன்னுல்தான் தனக்குச் சோர்வுமிகுதியாக ஆகிவிட்டதால் தனது தலையை மேஜைமீது சாய்த்துத் தூங்கலாமா என்று யோசித்தாள். ஆனுல் இப்பொழுது ஒரு நோயாளி துன்பப்படுவதைக் கண்டு அவளுக்கும் என்னவோ செய்தது. அவளுக்குத் தூக்கமோ சோர்வோ தோன்றவில்லை. அவளது கனவுகள், ஆவல்கள், திட்டங்கள், குழந்தை பெற வேண்டுமென்ற ஆவல்—ஆகிய எல்லா எண்ணங்களும் ஆசை களும் நிமிஷத்தில் மறைந்துவிட்டன. துயரப்படு பவனின் வருத்தத்தைப் போக்கவேண்டுமென்ற எண்ணத்தைத்தவிர, வேறு எண்ணம் அவளிடம் அப்போது தோன்றவில்லை. தனது நோயாளி

கள் கொடிய நோயால் கஷ்டப்படும்பொழுது, தான் ஒரு யுத்த முனையிலிருந்து மரணதேவதைகளுடன் தனியாக நின்று போராடுவதுபோல் எண்ணுவாள். அவனைக் காப்பாற்றிவிட்டால் வெற்றி கண்டு விட்டதாக இன்புறுவாள்.

'அம்மா!'

இம்முறை கிழ விவசாயியின் குரலிலிருந்து வலி குறைந்திருப்பதும் அமைதி பெருகியிருப்பதும் தெரிந்தது. பல ஆண்டுகளின் உழைப்பால் கரடு முரடாகியிருந்த அவனது முன் கைகளைச் சில்வியா மெதுவாக ஒரு கையால் தடவிக் கொடுத்தாள். மற்றொரு கையை, காய்கின்ற அவனது நெற்றியில் வைத்தாள். சிறிதுநேரங் கழித்து அவன் அமைதியுடன் தூங்குவதைக் கண்டு அவள் கடந்த ஐந்து ஆண்டுகளாக நர்சுத் தொழிலில் பட்ட துன்பம் கஷ்டமெல்லாவற்றிற்கும் வெகுமானம் கிடைத்தது போல் மகிழ்ந்தாள்.

திடீரென்று சில்வியாவுக்கு இந்த வார்டு, ஆஸ்பத்திரி, நோயாளிகள் ஆகிய அனைத்தும் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவை போலத் தோன்றின.

அவையில்லாமல் தனது வாழ்க்கையே பூர்த்தியாகாது, அர்த்தமில்லாது ஆகிவிடும். ஜார்ஜ் வேலைக்குப் போகும்பொழுது அவள் வீட்டில் தன்னந்தனியாக உட்கார்ந்து இருந்து என்ன செய்வாள்? மரண தேவதையுடன் போராடும் பொழுது பெறும் உணர்ச்சியை அவளால் பெற முடியுமா? அவளது நோயாளிகளின் கதி என்னுவது? மற்ற நர்சுகளோ வேலை நேரத்தில் தூங்கப் போய்விடுவார்கள். அவளும் அவர்களைப்போல் தூங்கியிருந்தால் இந்தக் கிழ நோயாளியின் முனகலைக் கேட்டிருக்கவும் முடியாது. அவனைக் காப்பாற்றி இருக்கவும் முடியாது. இவ்விதம் நினைத்ததும் அவள் வேலையைவிட்டு விலகப் போவதில்லை என்று முடிவு செய்து கொண்டாள்.

ஆனால் ஜார்ஜோ ஏற்கனவே 'நீ ஆஸ்பத்திரியிலிருந்து விலக வேண்டியதுதான். என் மனைவி இத்தகைய வேலைகள் செய்வதை நான் விரும்பவில்லை' என்றிருக்கிறார். அதனைச் சில்வியா யோசித்துப் பார்க்கும் பொழுது ஜார்ஜின் அன்பற்ற போக்கு, சில்வியாவுக்குப் புலனாகி வெறுப்புத் தோன்றியது.

"இந்த மனிதருக்காகவா எனது வேலை, என் எதிர்காலம், ஆயுள் அனைத்தையும் தியாகம் செய்கிறேன்? குட்டையாய், குறுகிய உள்ளமுடைய வழுக்கைத் தலை படைத்த இந்தப் பிற்போக்காளரையா மணக்க எண்ணினேன். அப்பா, மனுஷன் ஞாயிற்றுக்கிழமை மாதா கோயிலுக்குப் போவதைக் குறித்து எவ்வளவு பெருமைப்பட்டுக் கொள்கிறார். ஆயினும் கிறிஸ்துவ தர்மத்திற்குப் புறம்பான எண்ணம் கொண்டிருக்கிறார். எவ்வளவு கர்வம்! 'இந்த நாகரிகப் பையன்களும், பெண்களும் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் நரகத்தில் விழுந்து விடுவார்கள். நர்சுகளும் ஒழுக்க ஈனர்களென்று பொதுவாகக் கூறப்படுகிறது. நீயும் மற்றவர்களைப் போல்தான் இருப்பாயோ சில்வியா?' என்று ஒரு முறை சில்வியாவிடமே கேட்டிருக்கிறார். என்ன அகம்பாவம் பிடித்த கேள்வி!

"ஆம், நானும் மற்றவர்களைப் போலவேதான். நானும் எத்தனையோ முறை தவறியிருக்கிறேன்." இதைக் கூறினால் ஜார்ஜ் எப்படி வரவேற்பார் என்பதை நினைத்ததும் சில்வியா சிரித்து விட்டாள்

உடனே தனது மண ஒப்பந்தத்தை ரத்துச் செய்து விடுவார். அவருக்கு வீட்டைப் பார்த்துக் கொள்ள ஒரு வேலைக்காரிதான் வேண்டியிருந்ததேயொழிய மனைவி தேவைப்படவில்லை. இதற்கெல்லாம் வேறு யாரையாவது பார்த்துக்கொள்ளச் சொல்ல வேண்டியதுதான்.

"அப்படியென்றால் குழந்தைகள் ?"

அவளுடைய இப் புதிய தீர்மானத்தைத் தாய்மை எண்ணம் அசைத்துவிடும் போலிருந்தது. கல்யாணச் சந்தர்ப்பத்தை விட்டுவிட்டால் தாய் ஆவது எப்படி ?

"அம்மா !"

அக் கிழ விவசாயி தனது தூக்கத்தில் முனகினான்.

காலைப் பொழுதும் தோன்றிவிட்டது. திறந்த ஜன்னல் வழியாகக் குளிர்ந்த காற்று வீசியது. சில்வியா கண்களை உயர்த்தி வார்டைச் சுற்றும் முற்றும் நோக்கினாள். அவள் கவனிக்க வேண்டிய நாற்பது நோயாளிகள் ! அவர்களைக் கவனித்து, உணவூட்டி, குளிப்பாட்டி, உடுத்தி, அவர்களது கதகதப்பான கன்னங்களிலும் புருவங்களிலும் தனது மெல்லிய கையை வைத்து 'ஆம் மகனே ! நான் இங்கு இருக்கிறேன்' என்று அவர்கள் அரை மயக்கத்தில் 'அம்மா' என்று அழைக்கும்போது கூறவேண்டியது அவளது கடமை.

வார்டின் மற்றொரு மூலையிலிருந்து வறட்டு இருமலொன்று கேட்டது. 14-ஆம் நம்பர் மீண்டும் இருமுகிறான். நல்ல சூடான தேத்தண்ணீர் கொடுத்தால் சிறிது அவனுக்குத் தெம்பாக இருக்கும். கிழவனின் கைகளை லேசாகத் தட்டிக் கொடுத்துவிட்டு அவள் கட்டில்களின் இரு வரிசைகட்கும் நடுவே வார்டின் மத்தியில் செல்லும்பொழுது அவளுக்குத் தூக்கமோ, சோர்வோ தோன்றவில்லை.

ஆம். அவள் இப்போது உண்மையான தாயாகவே மாறி விட்டாள் !

# கொடி



"எஜமான், நீங்கள் ரொம்ப நாள் வாழணும். கடவுள் உங்களை லட்சாதிபதியாக ஆக்கணும், எஜமான்! என் மனைவிக்கும் மகளுக்கும் உரிய பங்கையும் கொடுத்தால் உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. அவர்களும் உங்களை எப்பொழுதும் வாழ்த்திக்கொண்டே இருப்பார்கள், எஜமான்?"

"போடா, புளுகுணிப் பயலே! உனக்குப் பெண்டாட்டியும் பிள்ளையும் இருந்தால், அவர்களே இங்கு வந்து, தங்கள் பங்கை வாங்கிச் செல்வதற்கென்ன?"

ராமு ஒரு மானஸ்தன். அவன் தனக்குக் கிடைத்த தன்னுடைய பங்கான நான்கு பூரிகளையும் இரண்டு லட்டுகளையும் வாங்கிக் கொண்டு திரும்பினான். தன் மனைவியும் மகளும் உடுக்க உடை இல்லாததால் கந்தலையுடுத்து உடலை அரைகுறையாக மறைத்துக் கொள்ள வேண்டியிருந்தது; அதனால் தான் மட்டுமே வர முடிந்தது என்பதை அவன் அவர்களிடம் கூறவில்லை. இந்த மூன்று பேருக்கும் உள்ளது ஒரே துணிதான். அதையும், வேலை தேடுவதற்காக வெளியே கிளம்பும் பொழுது அவன்தான் உடுத்திக் கொள்வான். பல மாதங்களுக்கு முன்னால் ஒரு சம்பள தினத்தன்று, தன் மனைவிக்கும் மகளுக்கும் எப்படியாவது ரூபாய் பத்து ஆனாலும் ஒரு ஜோடி உடை வாங்கி விடுவது என்று உறுதிகொண்டு டில்லி முழுவதும் சுற்றியது ஞாபகம் வந்தது. ஆயினும், ஒரு துணி இருபது ரூபாய்க்குக் கிடைப்பதே கஷ்டமாக இருந்தது. சாந்தினி சவுக்கிலுள்ள சிறிய கடைகள், பெரிய கடைகள் என்று எல்லாக் கடைகளையும் சுற்றியும்

அவனுக்குக் கிடைத்த ஒரே பதில் "துணி ஸ்டாக் கிடையாது" என்பதுதான். ஆனால், ஒரு கடையில் மட்டும் ஒரு வியாபாரி காதோடு காதாக, "உனக்கு அவசியமாகத் தேவையானால் ஒரு ஜோடி வாங்கித் தருகிறேன். அது ஐம்பது ரூபாய் ஆகும்" என்றான். ஐம்பது ரூபாய்! ஆனால் அவன் காலை முதல் மாலை வரை ஒரு மாதம் செங்கல் சுமந்து சமபாதித்தது இருபத்தைந்து ரூபாய். ஐம்பது ரூபாய்களுக்கு அவன் எங்கே போவது?

அதற்கப்புறம் அவனுக்கு வேலையும் போய் விட்டது. அமெரிக்கா ராணுவஸ்தர்களுக்குக் கட்டிடம் கட்டும் வேலையில்தான் அவன் ஈடுபட்டிருந்தான். அந்த அமெரிக்கர்களும் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிப் போய்விட்டதால் அந்த வேலையும் நின்றுவிட்டது. அவர்களுக்காக அவசரம் அவசரமாகக் கட்டிய கட்டிடங்களையும் தகர்த்தாயிற்று. கட்டிடச் சாமான்கள்மீது கடுமையான கட்டுப்பாடு இருந்ததால், பட்டணத்திலுள்ள தனிப்பட்ட நபர்களும் கட்டிடங்கள் எழுப்ப வில்லை. கடந்த பல மாதங்களாக ராமு வேலையில்லாதிருந்தான். வேலைக்காகத் தெருத் தெருவாக அலைந்தான். ஆனால், வேலை மட்டும் கிட்ட வில்லை. பஞ்சாபிலிருந்து அகதிகள் வந்து கூடிய பிறகு, வாழ்க்கை அவனுக்கு இன்னும் மோசமாகி விட்டது. இரண்டு நாட்களாக அவனோ, அவன் மனைவியோ, மகளோ ஒரு கவளம் உணவாவது உண்ணவில்லை. தெருவிலே பிச்சை எடுப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழி இல்லை. ஆம, கௌரவமுள்ள சித்தாளான ராமு பிச்சை எடுத்துத்தான் ஆகவேண்டும். ஏன், செய்தால் என்ன? அகதிகளில் பல பெரிய மனுஷர்கள்கூட இப்படி வாழவில்லையா?

அன்று காலை தன்னுடைய புதுத் தொழிலான பிச்சைத் தொழிலைத் தொடங்குவது என்று திடங் கொண்டு எழுந்தான் ராமு. ஆனால் பகவானின்

கிருபையால் அவன் மானம் தப்பியது. சாரக்தீ னும், மசிதாவும் விடியற் காலையிலேயே அவனைத் தேடி வந்து சேட் குல்ஜாரிலால், பூரிகளும் லட்டு களும் தர்மமாக விநியோகிக்கும் சந்தோஷச் செய்தியைச் சொன்னார்கள். தேசத்துக்குச் 'சுதந் தரம்' கொடுத்திருப்பதாகவும், பெரிய பெரிய தலைவர்களின் நண்பரான சேட் அந்தச் சந்தர்ப்பத் தைக் கொண்டாடுவதற்காக ஏழைகளுக்கு உணவு அளிப்பதாகவும் கேள்விப்பட்டான். இந்த விசேஷ நாளை முன்னிட்டு ரேஷன் கட்டுப்பாடுகளைக் கூடத் தளர்த்திவிட்டார்களாம்! எல்லாருக்கும் தலைக்கு நான்கு பூரிகளும் இரண்டு லட்டுகளும் கிடைத்தன. இரண்டு நாளாகப் பட்டினி கிடந்த மூன்று ஆத்மாக்களுக்கு இவை எம்மாத்திரம்? தன்னுடைய மனைவி, மகள் ஆகியவர்களுடைய பங்கும் கிடைத்தால் நல்லது; ஆனால் அவர்கள் நேரில் வந்தாலொழிய அதெல்லாம் கிடைக்காது. உடலை மூடித் தங்கள் மானத்தைக் காக்கத் துணியே இல்லாதிருக்கும்போது அவர்கள் தங்கள் குடிசையைவிட்டு எப்படித்தான் கிளம்பு வது? பகவான் அவர்களுக்குச் சில கஜம் துணிக் குக் கிருபை செய்தால்...?

அந்தச் சமயத்தில் பகவானும் அபூர்வமாகக் கிருபை புரிந்தார். ராமு கன்னுட் பிளேஸின் நடை பாதைக்குக் குறுக்கே செல்லும்பொழுது சிவப்பு, வெள்ளை, பச்சை வர்ணங்களுடன் மத்தியில் நீல நிறச் சக்கரம் பொறித்த ஒரு துணியைக் கிருபா மூர்த்தி அவனுக்கு அளித்தார். ஆகாயத்தில் அது பறந்துவந்து நேரே ராமுவின் தலைக்குமேல் விழுந்தது. மேலே அவன் நோக்கியபொழுது அதே போன்ற பல துணிகள் மாடிமீது காற்றிலே அசைந்தாடிக்கொண்டும், தூண்களில் சுற்றியும் கிடந்தன. கடைகளுக்கும் ஹோட்டல்களுக்கும் முன் அதே மாதிரி சில துணிகள தொங்கிக் கொண்டிருந்தன. கிடைக்கும் எந்தப் பொருளை

யும்—அதுவும் பகவானின் பரிசை—யார்தான் வேண்டாமென்பார்கள்! கூட்டத்தில் ஒருவராவது இதைக் கவனிக்கவில்லை. ராமு அவசர அவசரமாக இந்தச் சிவப்பு, வெள்ளை, பச்சை நிறங்கொண்ட துணியை மடித்து வேட்டியில் மறைவாகச் செருகி வீட்டுக்கு எடுத்துச் சென்ருன். இனிமேல் அவன் மனைவியும் மகளும் தங்கள் பங்கான பூரிகளையும் லட்டுகளையும் சேட் எஜமான் வீட்டுக்குப் போய் வாங்கி வரலாமல்லவா?

முன் அவள் சேலையாக உபயோகித்த தன் வேஷ்டியை அவளுக்குக் கொடுத்தான். அவளோ தான் உடுத்தியிருந்த கந்தலைத் தன் மகளின் யௌவன உடலை அரைகுறையாக மூடிக்கொள்ளக் கொடுத்தாள். சிவப்பு, வெள்ளை, பச்சை கலந்த அந்தத் துணியை இடையில் சுற்றிக்கொண்டான் ராமு. அவனுடைய பகட்டுத் தோற்றத்தைக் கண்ட மனைவிக்குச் சிரிப்பு வந்தது. பல நாட்களுக்குப் பிறகு அவள் சிரிப்பதைக் காண அவனுக்கும் மகிழ்ச்சி. இப்படி அவர்கள் சேட்டின் மாளிகையை நோக்கி மகிழ்ச்சியுடன் சென்ருர்கள். அங்கே இன்னும் சிலர் தங்கள் பங்கைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். பூரி சில்லிட்டும் லட்டு உதிர்ந்து பொடியாகியுங்கூட ராமுவின் குடும்பத்தாருக்கு அவை பெரு விருந்தாக இருந்தன. நிம்மதியுடன் அவர்கள் வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

மீண்டும் அவர்கள் கன்னுட் பிளேஸ் வழியாகச் செல்லும்பொழுது ஒரு கடைக்காரன் ராமுவை நோக்கிக் கூவினுன்,

“டேய் பயலே, இந்தக் கொடியை எங்கே திருடினுய்?

“கொடியா? கொடிகளைப்பற்றி எனக்கு என்ன தெரியும்?”

"ஓகோ, கொடியைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதோ? உன் இடையில் சுற்றியிருப்பது என்னவாம்?"

"ஓ இதுவா!......"—ராமுவுக்குத் திடீரென்று பயம் தோன்றவே, அவனால் பேச முடியவில்லை. அவனைச் சுற்றிக் கூடிய கூட்டத்தோடு இன்னும் பல பேர் கூடினார்கள்.

"அடே! இது நம் கடையில் இருந்த கொடியாகத்தான் இருக்க வேண்டும். மணிக்கணக்காக நாங்கள் இதைத் தேடிக்கொண்டிருக்கிறோம்!"

"இந்தத் திருட்டுப் பயலைப் பாருங்கள்—பெரிய கௌரவமாகக் கொடியை உடுத்திக் கொண்டு திரிகிறானே!"

"அந்த அயோக்கியப் பயலிடமிருந்து அதைப் பிடுங்குங்கள்."

"திருடனை நன்றாக உதையுங்கள்!"

"போலீஸ்காரனைக் கூப்பிடு."

"போலீஸ்கார ஐயா. இங்கே வாருங்கள். உங்களுக்கு இதோ நல்ல வேட்டை!"

ராமுவின் மனைவி கூச்சலிட்டாள். மகள் தன் தகப்பனின் அவமானத்தைக் காண விரும்பாமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்.

"ஹஹஹஹ!! ஹா!!! ஹி! ஹிஹி!! ஹீ!!!—" கூட்டத்தினரின் சிரிப்போசை ராமுவின் நிர்வாண உடலில் கூரிய கற்களை வீசியதுபோல் அவன் காதில் தாக்கியது. தன் காலடிக்குக் கீழுள்ள பூமி பிளந்து, தன்னையும் தன் மானத்தையும் விழுங்கினால் தேவலையே என்று எண்ணினான்.

மற்றவர்களைவிடச் சிறிது மனிதத் தன்மை கொண்ட ஒரு வழிப்போக்கன் தன்னுடைய மேல் துண்டை ராமுவுக்கு அளித்தான். முடிவில் ஒருவகையாகத் தன்மேல் பாய்ந்தவர்களை நோக்கித் தலை நிமிர அவனால் முடிந்தது. அவன் கண்களில் நீர் துளிர்த்தது. தன்னைக் கைது செய்வ

தையோ, அல்லது தன் கைகளில் விலங்கிடு வதையோ அவன் லட்சியம் செய்யவில்லை. எப்படி யாவது இந்த மானங்கெட்ட நிலைமையிலிருந்து அப்புறப்படுத்தினால் போதுமென்று எண்ணி னான்.

"அந்த அயோக்கியக் கொடித் திருடன் பிடி பட்டான்!"

"ஏன்? அவன் என்ன செய்தான்?—"

கூட்டத்தினர் பின் தொடர ராமுவை இழுத் துச் சென்ற போலீஸ்காரனை நோக்கி, விஷயம் அறியாத ஒரு புதியவன் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

கிரிமினல் சட்ட ஞானத்தில் தேர்ந்தவன் ஒரு வன் அவனுக்குப் பதில் கூறினான்.

"அவன் ஒரு குற்றமல்ல, மூன்று குற்றங்கள் செய்திருக்கிறான்."

"மூன்று குற்றங்களா? அவை என் னென்ன?"

"முதலாவது—திருட்டு."

"இரண்டாவது?"

"தேசீயக் கொடியை அவமதித்தது."

"மூன்றாவது?"

"பொதுஜன நடைபாதையில் நிர்வாணமாகக் காட்சியளித்தது; அதுவும் சட்ட விரோதம், தெரி யுமா?"

மேலே நூற்றுக்கணக்கான கொடிகள் இந்த விசித்திர சம்பவத்தைக் கண்டு சந்தோஷமில்லா மலே வறட்டுப் புன்னகை புரிவதைப்போல் காற் றிலே தவழ்ந்து ஆடிக்கொண்டிருந்தன.

# பிரதி பிம்பம்



நாட்டியக்காரி ராதா அப்பொழுது மிக்க மகிழ்ச்சியுடன் விளங்கினாள். அன்று தீபாவளி நாளாதலால் மற்ற நாட்களைவிடத் தன் நாட்டியக் கச்சேரிக்கு அதிகமான பேர் கூடுவார்கள் என்று எதிர்பார்த்தாள். மேலும் அன்று நல்ல வருமானம் கிடைக்கும் என்றும் நினைத்தாள். அன்றைக்கென விசேஷமாகப் புதிய பூஜா நாட்டிய மொன்றும் தயாரித்திருந்தாள். அவளது அமைப்பான பாதங்களில் சிறு சதங்கைகளைக் கட்டிக் கொண்டிருந்த பொழுது, அன்று இரவு தான் பாட நினைத்திருந்த பாட்டை வாயால் முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். அடுத்த அறையில் ஒத்திகை நடத்திக் கொண்டிருந்த பக்க வாத்தியக்காரர்களின் இன்னிசைக்கேற்ப அவள் பாதங்கள் தாளம் போட்டன.

“ராதா, ராதா” என்று கூவிக்கொண்டே வாத்தியார் ஓடி வந்து அறைக்குள் நுழைந்தார். அவருடைய மூச்சுத் திணறலிலிருந்து, அவர் ஒரு எட்டுக்கு இரண்டு படிகள் வீதம் ஓடி வந்திருக்க வேண்டும் போல் தோன்றியது.

“என்ன விசேஷம் வாத்தியாரையா?” என்று ராதா சிரித்துக்கொண்டே கேட்டாள். தன் சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே அடி எடுத்து ஆடவும் பாடவும் பழக்கிய இக் கிழ நட்டுவனார் மீது அவளுக்குத் தனியான பிரியம் உண்டு. ஆதி முதல் அவளுக்கு நண்பராகவும், ஆசானாகவும், இன்னும் பல விதங்களிலும் அவர் உதவி செய்து வந்திருக்கிறார்.

இரைப்பை அடக்கிக்கொண்டே “ராதா, நமக்கு நல்ல அதிர்ஷ்டம்; நல்ல கௌரவம் கிட்டி

யுள்ளது. உன்னுடைய நாட்டியத்தைப் பார்க்க ஜலபுரி மகாராஜா நேரில் விஜயம் செய்யப் போகிறார்'' என்று களிப்புடன் கூறிக் கையைப் பிசைந்து கொண்டே நின்றார்.

சந்தர்ப்பத்தின் விசேஷத்தை அறிந்த ராதா "ஓ, அப்படியா? உங்கள் ராஜா சாகிப்பைப்பற்றி வேறு ஏதாவது கூறுங்களேன். அவருக்கு வயது ரொம்ப ஆகியிருக்குமோ?'' என்று கேட்டாள்.

"வயதா?'' என்று சிறிது அலட்சிய பாவத்துடன் ஏதோ வயதைப் பற்றிப் பேசத் தனக்கு மட்டுமே உரிமை என்று எண்ணுவது போல் "ஏன் அவர் தகப்பனார், காலஞ்சென்ற ராஜா சாகிப், தன் மகன் பிறந்த நாளில் ஏற்பாடு செய்த நாட்டியக் கச்சேரி, ஏதோ நேற்று நடந்த மாதிரி இருக்கிறது. அவருக்குக்கூட இருந்தால் இருபத்தைந்து வயது இருக்கும். ஐந்து வருஷங்களுக்கு முன்னர்தான் அவருக்குக் கல்யாணம் ஆயிற்று. அடே அப்பா, என்ன பிரமாதமான கல்யாணம்! கல்யாணம் என்றால் அதுதான் கல்யாணம்.'' இவ்வாறு கூறியபோது கிழவரின் கண்கள் ஒரு புது ஒளி பெற்றன......."பாவம, உன் அம்மாகூட அங்கு ஆடப் போயிருந்தாள். அப்பொழுது நீ ரொம்பச் சின்னப் பெண்...'' என்று சொல்லிக் கொண்டு வந்தபோது, வாத்தியார் தான் செய்த தவறை உணர்ந்து பாதி வாக்கியத்தில் நிறுத்திக் கொண்டார்.

அவளுடைய தாயைப் பற்றி ஒரு வார்த்தை கூட அவர் கூறியிருக்கக்கூடாது. தாய் இறந்த துக்கத்தை மறக்க ராதாவுக்கு ஒரு ஆண்டுக்கு மேலாகியது. அம்மாவைப்பற்றிக் கூறிவிட்டால் அவளுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்து விடும்.

"இந்தா, இந்தா அ...அ...அழாதே அம்மா!'' என்று கிழவர் சங்கடத்துடன் குழறினார்.

"இன்றைக்கு, இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இதைச் சொல்லியிருக்கக்கூடாது. இப்பொழுது கண்ணைத் துடைத்துக்கொண்டு அலங்காரம் செய்துகொள்" என்றார்.

ஒரு வாத்தியக்காரன் அறைக்குள் லேசாகத் தலையை நீட்டி மெதுவான குரலில் "சீக்கிரம்! ராஜா சாகிப் வந்து கொண்டிருக்கிறார்" என்றான். ராதா அழுகையை அடக்கிக் கொண்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். தாயை நினைத்து அழுவதற்கு ஏற்ற சந்தர்ப்பமல்லவே இது! "நர்த்தகிக்கும், விபசாரிக்கும் உணர்ச்சியை வெளிப்படுத்த உரிமை ஏது?" என்று தனக்குள்ளே கூறிக்கொண்டு கண்ணாடியில் தனது அழகிய பிரதிபிம்பத்தைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக் கொண்டாள்.

உயரிய ராஜபுத்ர வம்சத்தில் தோன்றிய ஜலபுரி ராஜா கம்பீரத் தோற்றமும் தாராள மனப்பான்மையும் கொண்ட ஆஜானுபாகு. பலருக்கும் மத்தியில் திண்டில் அமர்ந்து ராதாவின் பூஜா நாட்டியத்தைக் கண்டுகளித்துக் கொண்டிருந்த ராஜா, அவள் அழகை அப்படியே பருகிவிடுவது போல் கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பார்வையின் பொருளை அங்கு சூழ்ந்திருந்தவர்கள் உணர்ந்து கொண்டனர். அறையை விட்டு ஒவ்வொருவராக நகர்ந்தனர். ராதா நடனத்தை முடித்தபொழுது அங்கு ராஜாவைத் தவிர வேறு ஒருவரும் இருக்கவில்லை.

கடைசியில் ராதா தனது இடத்திலமர்ந்ததும் ராஜா "ஆஹா! அற்புதம், அற்புதம்!" என்றார்; இனிமேலாவது அவளைத் தனியே கண்ணாரக் கண்டுகளிக்கலாமே என்ற எண்ணத்துடன்.

இங்கிலாந்தில் அவர் வசித்த காலத்தில் எத்தனையோ அழகிய பெண்களைக் கண்டிருக்கிறார். இந்த இனத்திலே அவர் காலமும், செலவும் பெரும்

பகுதி சென்றிருக்கிறது. அவருடைய சொந்த மனைவிகூட நல்ல அழகி என்று கேள்வி. ஆனால் அங்கு உட்கார்ந்திருந்தபொழுது ராதாவைவிடச் சிறந்த அழகியை அவருடைய கண்கள் பார்க்கவில்லை என்று பட்டது. அழகும் ஜீவனும் நெகிழ்வும் வேறு ஒரு பெண்ணிடமும் தாம் காணவில்லை என அவருக்குப் பட்டது. இனி எப்பொழுதுமே அவர் அம்மாதிரி கூறுவார் என்று எதிர்பார்க்க முடியாவிட்டாலும், அந்த நிமிஷத்தில் ராஜாவுக்கு அம்மாதிரி தோன்றியது.

"கண்ணே, உன் பெயர் என்ன?" என்று ராஜா அன்புகனிந்த குரலிலே கேட்டார்.

நாணத்துடன் "ராதா" என்று இதழ்களில் புன்னகை தவழப் பதில் கூறினாள்.

"குரலும் அற்புதமாகவல்லவோ இருக்கிறது!" என்று ராஜா எண்ணினார்.

வழக்கப்படி ராதா தாம்பூலம் தயார் செய்து வெள்ளித் தட்டிலே ராஜாவின் முன் நீட்டினாள். ராஜாவும் அதில் ஒன்றை எடுத்துக்கொண்டு தமது செல்வச் சிறப்பைக் காட்டுவதற்காக நூறு ரூபாய் நோட்டை வைத்தார். வணக்கத்துடன் ஏற்றுப் பணிவுடன் அதனை வாத்தியாரிடம் கொடுத்து விட்டாள்.

ராதாவை ஒத்த பெண்களிடம் பழகியதால் பெற்ற அனுபவத்தில் "என்னை உனக்குப் பிடிக்கிறதா, கண்ணே ?" என்று யாதொரு சங்கோசமுமின்றி அவள் உட்கார்ந்ததும் கேட்டு விட்டார்.

நாடகத்தில் தங்கள் பாகத்தை நன்கு உணர்ந்த நடிகர்கள், வெளியேறும் சந்தர்ப்பமறிந்து மறைவதுபோல பக்க வாத்தியக்காரர்கள் அனைவரும் வெளியேறினர்.

செல்வந்தர்கள் இத்தகைய கேள்விகளைக் கேட்டால், நாணத்துடன் பதில் அளிக்கும் முறையை நன்கு பயின்றிருந்த ராதா பட்டும் படாமலும் "விரும்பாமல் என்ன ?" என்றாள். பணம் குறை

வாய்க் கொடுக்கும் வாடிக்கைக்காரர்களுக்கு அளிக்கப்படும் பதிலோ வேறு விதமாகத்தான் இருக்கும்.

"நீ என்னுடன் வந்து இருப்பாயா?" என்று ஆவலுடன் ராஜா அடுத்த கேள்வியைக் கேட்டார். இதற்கு ராதா பதில் அளிக்கவில்லை. அவள் தனது தொழிலின் பழக்கத்திற்கொப்ப நாணிக் கோணிக் கொண்டு பதிலுக்கு வாத்தியாரைப் பார்த்துவிட்டு அறையைவிட்டு வெளியே சென்றாள்.

பொருளை நிச்சயமாகக் கொள்முதல் செய்யும் வாடிக்கைக்காரன் கேட்டவுடன், மறு பேச்சின்றி ஒப்புக்கொண்டு பதில் கூறுவதுபோல, "ஆஹா அதற்கென்ன? இத்தகைய கௌரவம் கிடைக்கக் கொடுத்து வைக்க வேண்டும்!" என்றார் வாத்தியார்.

ராஜா தனது காரியதரிசியிடம் சிறிது நேரம் தாழ்ந்த குரலில் ஏதோ பேசிய பின்னர், பேரம் பேசும் வேலையை அவனிடம் விட்டுவிட்டு ராதாவிடம விடைபெற்றுச் சென்றார்.

தான், ராஜாவுக்கு மாதம் ஐந்நூறு ரூபாய் வாடகைக்கு விடப்பட்டிருப்பதாக, ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் செய்தியை அறிந்து, அதனை அலட்சியமாக ஏற்றுக் கொண்டாள் ராதா. முன் தன்னை அமர்த்தியிருந்த ஜமீந்தாரைப் போல் குரூரமாக இல்லை அல்லவா இந்த ராஜா என எண்ணிக் கொண்டாள்.

மறுநாள் பரிவாரங்களுடன் ஜலபுரி ராஜாவின் அரண்மனைக்கு மாற்றப்பட்டாள். அன்றிரவு ராதாவின் வீட்டில் நாட்டியம் நடைபெறவில்லை.

அரண்மனை மேல்மாடியில் நன்கு சிங்காரிக்கப்பட்ட பல அறைகளை ராதாவுக்கென்று ராஜா ஒதுக்கியிருந்தார். அதில் வசித்து வந்த அவள், மூன்று மாதத்திற்குப் பின்னர் ஒருநாள் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தாள். குன்றுகளுக்குப்

பின்னல் சூரியன் வீழ்ந்துகொண் டிருந்தான். நிலப்பரப்பின்மீது இருளின் சிறகுகள் விரிந்து வந்தன. சந்தியா நேரத்தின் சோகச்சாயை அறையில் பரவி, ராதாவின் முகத்திலும் பிரதிபலித்தது.

மூன்று மாதங்களுக்குப்பின் முதன் முதலாகத் தனது நிலையையும், எதிர்காலத்தையும் பற்றித் தனக்குள் தீவிரமாகச் சர்ச்சை செய்துகொண்டிருந்தாள். அவள தோன்றிய குலத்தில் பிறந்த மற்ற பெண்களைப் போலவே ராதாவும், எல்லாவற்றையும்விட விதியிலும் மதியிலும் நம்பிக்கை கொண்டிருந்தாள். வாழ்க்கையின் கனவுகள் அவளிடம் அதிகம் இருக்கவில்லை. வருவது வரட்டுமென விதியின் வழியை ஏற்றுக்கொண் டிருக்தாள். தான் பிறந்த குலத்தின் குறைகளை நன்கு அறிந்திருந்ததால சமூகத்தின்மீது அவள் சிறிதும துவேஷம் கொள்ளவில்லை. ஊரிலேயே சிறந்த அழகியாகவும், நாட்டியக்காரியாகவும் இருந்தாலும் விபசாரியின் மகள் விபசாரியாகவே இருந்தாள். ஐந்து ரூபாயை ஜேபியில் வைத்துக்கொண்டு தன்னை நாடிவரும் ஒவ்வொருவருக்கும் உடலை விற்பதைவிடக் காதல் கலையில தேர்ந்த அழகிய இளம் பணக்கார ஜமீந்தாரின் நிரந்தர ஆசை நாயகியாக இருப்பது எவ்வளவோ சிறந்ததுதான். இருப்பினும், இது அவளது அந்தஸ்தை எவ்விதத்திலும் உயர்த்துவதாக இல்லை. காதல், வீடு, வாசல், பிள்ளைப் பேறு முதலியவை, தான் பிறந்த சமூகத்திலுள்ளவர்களுக்கு என்றுமே லாயக்கல்ல என்பதை அவள் உணர்ந்தே இருந்தாள். இருந்தும் 'இன்று வருவது வரட்டும்' என்ற எண்ணம் மாறி, 'வாழ்க்கை இப்படி இருந்தால் தேவலையே' என்று கனவு காணத் தொடங்கினள். மனைவியாகித், தாயாகிக் குடும்ப பாரம் நடத்திச் சமூகத்திலே தானும் ஒரு இடத்தைப் பெறவேண்டுமென்று ஆசைப்பட்டாள். அவளது பிறப்பின்

சூழ்நிலையைப் பற்றிய எண்ணத்தை யெல்லாம் மீறிப் **பெண்மை** தலைதூக்கத் தொடங்கியிருந்தது.

இவ்வித எண்ணங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவள் ஜலபுரி ராணியேயாகும்.

ராஜாவின் இருப்பிடத்திற்கு ராதா வந்து சேர்ந்த நாளிலிருந்தே ராணியை நேரில் காண வேண்டுமென்ற ஆசை அவளுக்கு இருந்தது. ராணியின் பேரெழிலைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த ராதா, இத்தகைய ஒரு அழகி தனக்கிருக்கையில் மற்ற இடங்களில் இன்பந் துய்க்க ராஜா விரும்புவதேன் என்று வியப்படைந்தாள். பல முறை, ராஜாவிடம் தான் அந்தப்புரத்திற்குப் போய்ப் பார்த்து வர விரும்புவதாகக் கேட்டும், தனது காதல் சாகசங்களால் இவளது கோரிக்கையை மழுப்பிவிடுவார். ''அன்பே, நாமிருவரும் காதலன் காதலியாவதற்காகவே படைக்கப்பட்டிருக்கிறோம். இந்தத் தெய்வீகக் காதலுக்கு இடையே வேறு யாரும் குறுக்கே நிற்பதை நான் விரும்பவில்லை'' என்பார். இருப்பினும் அவளுக்கு அந்தப் புரத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் நீங்குவதாக இல்லை. ராஜா தனக்கு அமர்த்தியிருந்த கிழட்டுப் பணிப்பெண்ணான லக்ஷ்மியிடம் தனது அந்தரங்கத்தைக் கூறினாள் ராதா. ஒரு நாள் ராஜா வேட்டைக்குச் சென்றிருந்த சமயம் பார்த்துத் தன்னை வேலைக்காரியைப்போல் வேஷம் மாற்றி, அந்தப் புரத்திற்கு அழைத்துச் செல்லும்படி கேட்டுக்கொண்டாள். அவ்விதமே ஒரு சந்தர்ப்பமும் வாய்த்தது.

அழகும், கம்பீரமும், செல்வ மிடுக்கும் கொண்ட ராணி ஒரு பெரிய அறையின் மத்தியில் உயரமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் தனது தோழிகளும், பணிப்பெண்களும் புடைசூழ அமர்ந்திருந்தாள். இருட்டிலே மறைவாக இருந்து அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த ராதாவுக்கு அவர்கள் தன்னைப் பற்றியே

அப்பொழுது பேசிக்கொண் டிருக்கிறார்கள் என்பதை அறிய ஆச்சரியமாக இருந்தது.

"ராணிஜி; நம் மகாராஜா கொண்டு வந்திருக்கும் அந்தத் தெருச் சுற்றியைப்பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப் படாதிருக்கிறீர்களே" என்று எரிச்சலுடன் தலைமை வேலைக்காரி கேட்டாள்.

அதைப்பற்றிக் கவலைப்படாத முறையில் "அவள் நல்ல அழகி என்று கேள்விப்பட் டிருக்கிறேனே!" என்றாள் ராணி.

ராணியின் பிரதம சகியான ஒரு ஜமீந்தாரின் கொழுத்த மனைவி இடைமறித்து "ஆனால் உங்களது கணவரின் காதலை அவள் அபகரித்துக் கொள்வதைப்பற்றி நீங்கள் கவலைப்படவில்லையா?" என்று கேட்டாள்.

ராணியின் பதில் உடனே வந்தது. தலை நிமிர்ந்து கர்வத்துடன், "இத்தகைய ஒரு பெண்ணைப்பற்றி அசூயைப்படுவது நம் அந்தஸ்திற்கு ஏற்றதல்ல. அது தவிர, ஒரு ராஜா தனது கேளிக்கைக்காகச் சில பெண்களை வைத்துக் கொள்வது ஒன்றும் புதிதல்லவே. என்னதான் இருந்தாலும் ஆசைநாயகியும் மனைவியும் சரிசமானமாகிவிடுவார்களா?" என்று கூறினாள். அந்த வார்த்தைகள் ராதாவின் முகத்தில் பளீரென அறைந்தது போலிருந்தன.

ராதாவினால் அதற்குமேல் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. வெட்கத்துடன் அந்த வீட்டிலிருந்து கிளம்பினாள். தன் இருப்பிடத்திற்குத் திரும்பியதும் வேலைக்கார லக்ஷ்மி தன்னை மன்னிக்கும்படி மிகவும் கேட்டுக்கொண்டு, "எல்லாம் உங்களாலேதான் நேர்ந்தது" என்று கூறினாள். "ஆமாம், எல்லாம் என்னால்தான் நடந்தது. என்னைச் சும்மா விட்டுவிடு" என்றாள் ராதா. அவளுக்குச் சிந்திக்க வேண்டுமெனத் தோன்றியது. 'ஒரு ஆசைநாயகியும் மனைவியும் சரிசமமாகி விடுவார்களா?' ராணியின் இவ்வார்த்தைகள்

அவள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. இவ் வார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் உண்மை அவள் உள்ளத்தை வாட்டி வதைத்தது. முகம் பார்க்கும் கண்ணுடியைக் கொண்டு காட்டுவது போல் இவ்வார்த்தைகளினுல் ஜலபுரி ராணி நாட்டியக்காரி ராதாவின் நிலையைக் காண்பித்துவிட்டாள். ராதா தன் பிரதிபிம்பத்தைக் கண்டு நடு நடுங்கினுள்.

தர்க்க ரீதியாக விஷயங்களை ஆராய்ந்து பார்க்கும் தன்மை இருந்திருந்தால் தன் நிலையைப் பற்றி ராதா ஆராய்ந்து பார்த்திருப்பாள். ஆனுல் ராதாவோ அப்பொழுது கீழ்த்தரமான உணர்ச்சிகளால் தூண்டப்பட்ட சாதாரணப் பெண்ணுகவே இருந்தாள். 'ஒரு ஆசைநாயகியும் மனைவியும் சரி சமமாக இருக்க முடியாதா?' என்று மட்டுமே அவளுக்குப் பட்டது. எனவே நடக்க முடியாத ஒரு காரியத்திற்கு—மனைவியாவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்வதெனத் தீர்மானித்தாள். இது சாத்தியமில்லை என்ற அவநம்பிக்கையினிடையே ஒரு லேசான நம்பிக்கையும் தோன்றியது. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும்விடத் தன்னை மிகவும் காதலிப்பதாக ராஜா பலமுறை தன்னிடம் உறுதி கூறவில்லையா? ராதாவுக்கு இத்தகைய வார்த்தைகளைப் பலரிடம் கேட்டுப் புளித்துப் போயிருந்தது. அதனை ஒரு ஏளனப் புன்னகையுடன் மனதிலிறுத்திக் கொள்வாள். இத்தகை காதல் மொழிகளில் அவள் நம்பிக்கை வைத்ததில்லை. ஆயினும் இவ்விளம் ஜமீந்தார் அடிக்கடி காதல் வார்த்தைகளைச் சொரிந்ததால் அவர் தன்னை ஆசைநாயகியாக மதியாது, அன்புக்குரிய காதலியாக மதித்திருப்பதாகவே அவளுக்குப் பட்டது. வெற்றிக் களிப்பிலே மூழ்கிய போது இத்தகைய எண்ணத்தில் நம்பிக்கை வைக்கலானுள். தன்னை உண்மையாகவே காதலித்தால் அவர் தன்னை மணந்து கொள்ள மாட்டாரா என்று

எண்ணியபோதே அவள் முகம் மலர்ந்தது. மண வாழ்க்கையைப்பற்றிச் சுந்தரக் கனவுகள் கண்டாள். நிரந்தரமான வாழ்க்கை, சமூகத்தில் ஒரு கௌரவமான அந்தஸ்து, வீடு வாசல், குழந்தை குட்டி என்றெல்லாம் நினைக்க அவளுக்குச் சந்தோஷமாகவே இருந்தது. இந்தக் கற்பனைக்கு ஒரு விஷயம் களங்கமாக இருந்தது—குல ஸ்திரீயாகிவிட்டால் அவள் நாட்டியமாட அனுமதிக்கப் படமாட்டாள் என்பதுதான் அது.

நாட்டியமே அவளது ஜீவநாடி. அது அவள் உடலிலும் உணர்விலும் ஊறிய விஷயம். தன் உணர்ச்சிகளைக் வெளிக் காட்டக்கூடிய சாதனம் அது ஒன்றே. நாட்டியமாடும் சந்தர்ப்பம் இல்லாவிட்டால் அவளால் சந்தோஷமாக இருக்க முடியாது என்று எண்ணினாள் ராஜாவின் மனைவியான பின்னரும் நாட்டியமாடுவது என்பதோ நினைக்கவே முடியாத விஷயம். தன் வீட்டிலே ஆடியபொழுது சுற்றிலும் கூடியிருந்த ரசிகர் கூட்டம் கை கொட்டி முழக்கியதைப் போல இன்றும் பாராட்டப் பெறுவதற்கு அவளுக்கு எவ்வளவோ ஆசைதான். நாட்டியமாட வசதியில்லாத வாழ்க்கை அவளுக்குச் சகிக்க முடியாததாகத் தோன்றியது. ராதாவின் உள்ளத்தே உறைந்த கலையுணர்ச்சி, இதனை எண்ணவும் நடுங்கியது. சமூக அந்தஸ்தில் உயர வேண்டுமென்றால் தியாகம் செய்துதானே ஆகவேண்டும்? மனைவியாகித் தாயாக விரும்பினால் நாட்டியப் பித்தை விட்டுவிட வேண்டியதுதான். பெண்மை என்னும் பேருணர்ச்சி கலையுணர்வை அடக்கிவிட்டது!

அப்போது முற்றத்தில் தோன்றிய பழக்கமான காலடியோசை ராதாவின் கனவைக் கலைத்தது. நாள் முழுவதும் வேட்டையாடிய பெருமையில் ஊறிச் சந்தோஷமாக நடைபோட்டுக் கொண்டு வந்தார் ராஜா.

"என் கண்மணி எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டு ராதாவின் கரங்களை எடுத்து ராஜா முத்தமிட்டார். தனக்குத் தோன்றியிருந்த உற்சாகத்தில் ராதா இச்செயலை உண்மைக் காதலின் செயலென மதித்தாள்.

சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு சிகரெட் பிடித்த வண்ணம், "என் பிரிவு உனக்குக் கஷ்டமாக இருந்ததா?" என்று கனிவுடன் கேட்டார் ராஜா.

ராதா நாணத்துடன் ஆமெனத் தலையசைத்தாள். தனது உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்த விஷயத்தைக் கேட்க இதுவே தகுந்த சர்தர்ப்பம் எனக் கருதினாள்.

ராதாவின் முகத்திலே கவலைத்திரை மூடியிருப்பதைக் கண்ணுற்ற ராஜா "கண்ணே, உன் மனதை வாட்டும் விஷயம் யாதோ? உன் அன்பிற்குரிய காதலனாகிய என்னிடம் கூடவா கூறமாட்டாய்?" என்று கேட்டார்.

தனது தைரிய மனைத்தையும் வரவழைத்து ஒரே மூச்சில் "ராஜா சாகிப்! உங்களை நான் ரொம்பவும் காதலிக்கிறேன். நாமிருவரும் கணவன் மனைவியாக ஆகிவிட்டால்...!" என்றாள்.

ஜலபுரி ராஜாவுக்கு ராதாவின் வேண்டுகோள் ஒன்றும் ஆச்சரியமளிக்கவில்லை. அவள் தன்னுடன் வசிக்க வந்த காலத்திலிருந்தே இதனை எதிர்பார்த்திருந்தார். 'அந்தக் கூட்டமே ஒரே மாதிரிதான்' என நினைத்துக் கொண்டார். அவரது ஒவ்வொரு ஆசைநாயகியும் கல்யாணப் பேச்சைப் பேசி அவருக்குத் தொல்லை கொடுத்துவிட்டுத் தொலைந்தார்கள். ராதாவும் அதே கல்யாணப் பேச்சைப் பேசித் தானும் அந்த விதிக்கு விலக்கல்ல என்பதைக் காட்டிவிட்டாள். இவளுக்காவது அப்படிப் பேசாதிருக்க புத்தியிருக்காதா என்று ராஜா எண்ணியிருந்ததுண்டு.

"ராஜா சாகிப், என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என அவரது கழுத்தைச் சுற்றித் தனது கைகளை வளைத்து "கல்யாணம் செய்து கொள்ளும் அளவு நீங்கள் என்னைக் காதலிக்கவில்லையா?" என்று கேட்டாள்.

ஆக்ஸ்போர்ட் கல்லூரி மாஜி மாணவரான ராஜா "சனியன், இவளும் தொல்லை கொடுக்கத் தொடங்கிவிட்டாளே" என்று எண்ணினார். ஆனால் அவளோ நல்ல அழகி; அவளது அழகில் இன்னும் அவர் சலிப்படையவில்லை. எனவே அவளைச் சிறிது தட்டிக் கொடுக்க வேண்டும் என்றெண்ணினார்.

தனது கரங்களால் அவளை வாரி எடுத்து "என் கண்ணே! நீகூட இந்தக் கல்யாணச் சடங்கு விஷயங்களை நம்புகிறாயே! நான் அதை விட உயர்ந்த உன்னதமான காதலில் அல்லவா நம்பிக்கை வைத்திருக்கிறேன்? ஏதோ ஒரு புரோகிதன் மந்திரத்தை முணுமுணுத்து விடுவதால் மட்டும் நம் நிலைமையில் என்ன மாறுதல் ஏற்பட்டுவிடுகிறது? காதலை மூடப் பழக்கங்களினால் கட்டிப் போடுவது மகாக் கேவலமல்லவா?" என்று சரமாரியாகப் பொழிந்தார்.

அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டே ராதா, "ஆனால், என் அன்பரே! நாம் இந்த உலகத்தில் தானே வாழவேண்டியிருக்கிறது? உலகம் கட்டுப்பாடற்ற காதலை விரும்புவதில்லையே! உங்களுக்கு என்றும் நிரந்தரமாகச் சொந்தமாக இருக்கவே விரும்புகிறேன்" என்றாள்.

"ராதா! நீ அப்படியே இருக்கலாம். உன்னையொத்த உத்தமப் பெண்ணை என் வாழ்க்கையில் கண்டதே கிடையாது. இனிமேல் காணப்போவதுமில்லை. நான் உன்னை என்றும் காதலிப்பேன் என்று சத்தியம் செய்கிறேன். இது போதாதா? உலகம் சொல்வதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? நான் எவருக்கும் கடமைப்பட்டவ

னல்ல. நான் உயிருடனிருக்கும்வரை நீயும இப்படியே இருக்கலாம். கல்யாணம் போன்ற துருப்பிடித்த மூடப் பழக்க வழக்கங்களை மறந்துவிடு. நான் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். அங்கெல்லாம் கல்யாணத்தைப் பற்றியே மக்கள் அக்கறை கொள்வதில்லை. அங்கு அனைவரும் கட்டுப்பாடற்று வாழ்கின்றனர். அவர்கள் காதல் ஒன்றையே நம்புகின்றனர்!'' என்றார்.

ராஜா சாமர்த்தியமாகப் பேசக் கூடியவர். கல்யாணப் பித்துப் பிடித்த தமது ஆசைநாயகிகளிடம் காதல், பெண்மை ஆகியவற்றைப்பற்றி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து, அவர்கள் நோயைத் தணித்திருப்பது இது முதல் தடவையல்லவே. சாதாரணப் பெண்களைப்போல் பழக்க வழக்கங்களை அவ்வளவு மதிக்காத ராதா, கல்யாணத்தைப் பற்றி, தான் அப்பொழுது புதிதாகக் கொண்டிருந்த நம்பிக்கையிலிருந்து தளரத் தொடங்கினாள். ராஜாவின் காதலுரைகளும் சரசமும் மிகுதியிருந்த சந்தேகத்தையும் போக்கிவிட்டன.

அப்பொழுது கதவு தட்டப்பட்டு ஒரு பணிப்பெண் தோன்றினாள். ''ராஜா சாகிப், உங்களை ராணியம்மாள் பார்க்க விரும்புகிறார்கள்'' என்று அறிவித்தாள். ராஜா விரைவில் திரும்பி வருவதாக ராதாவிடம் கூறிவிட்டு அந்தப்புரம் நோக்கிச் சென்றார்.

அப்பொழுது ராதாவுக்குப் பல்வேறு உணர்ச்சிகள் தோன்றின. இத்தகைய நல்ல குணம் படைத்த காதலரைப் பெற்றதற்காகச் சந்தோஷப்படுவதா அல்லது அப்பொழுது சத்தம் போடாது வந்து மூலையில் அமர்ந்திருந்த முதுமை யடைந்த லக்ஷ்மியைக் கண்டு வருததமடைவதா? என்ன

செய்வதென்பது அவளுக்குப் புரியவில்லை. ஆனால் அந்தக் கிழவி அப்பொழுது அழுதுகொண்டிருந்தாள்.

“என்ன லக்ஷ்மி, ஏன் அழுகிறாய் ?” என்று ராதா கேட்டாள். இந்தக் கிழவியின் மனதை என்ன கவலை வாட்டியதோ ? இவளுடைய அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் அறிய ராதா எப்பொழுதுமே விரும்புவதுண்டு.

“ஒன்றுமில்லை, அம்மா !” என்று அக் கிழமாது கூறிக் கண்ணீர் பெருகி அழத் தொடங்கினாள். “இதுதான் விஷயம்; நானும் உங்களைப் போலவே ஒரு நாள் இங்கு வந்தவள் தான்........” என்றாள். அப்போது அவளது குரல் உணர்ச்சி வேகத்தால் கனத்தது. “ராஜா சாகிப் உங்களிடம் இப்பொழுது கூறியது போலவே இவருடைய தந்தையும் என்னிடம் கூறியிருக்கிறார்” என்று முடித்தாள்.

ராதாவின் கண்களை மறைத்திருந்த திரை விலகியது. அந்தப் பேதைக் கிழவி லக்ஷ்மியைப் பார்த்தபோது அவளது கண்களின் கண்ணாடியிலே தனது முகத்தின் பிரதி பிம்பம் தோன்றுவதைக் கண்டாள்.

அன்று இரவு ராதாவின் வீட்டிலே மீண்டும் நாட்டியம் தொடங்கியது !

# அரிசி



பாம்புபோல் வளைந்து, நத்தைபோல் ஊர்ந்து, தேனீக்கள் போல் இரைச்சலிட்டுக்கொண்டு, ஆண்களும் பெண்களும் இரு பெரு வரிசைகளாக அரசாங்கத் தானியக் கடையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். ஆண்கள் வரிசையைவிடப் பெண்கள் வரிசை நீளமாக இருந்தது; சுமார் ஒரு பர்லாங் தூரம் இருக்கும். அதன் கடைசி முனை தெருவின் முடிவிலுள்ள சந்தின் அருகே இருந்தது. அவர்களால் தானியக் கடையைக் கண்ணால் கூடக் காண முடியவில்லை. ஒவ்வொரு பெண்ணும் தன் முன்னே நின்ற பெண்ணினுடைய தலையை மட்டுமே பார்க்க முடிந்தது.

நூற்றுக்கணக்கான பெண்கள்—இந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் எனப் பலர்...வந்திருந்தனர். முஸ்லிம் பெண்கள் முகத்திரையிட்டும் இடாமலும் வந்திருந்தனர். பரதவப் பெண்களிற் கூந்தலிற் சூடிய மலரின் வாசனையுடன் மீன் நாற்றமும் கலந்திருந்தது. அவர்களுடைய உடல் கட்டுமஸ்தாகக் கருத்துத் திரண்டிருந்தது. கவுன் உடுத்து வெறுங் காலுடன் வந்திருந்தார்கள் கோவனீயப் பெண்கள். செயற்கைப் பட்டும் மேல் ஜோடும் தரித்து, உயர்ந்த குதிகால் சப்பாத்தியணிந்து மலிவான வாசனையையும் பவுடரையும் பூசி ஆங்கிலோ-இந்திய நாரீமணிகள் வந்திருந்தனர். தோள்களைச் சுற்றிப் பூப்போட்ட சால்வை அணிந்தபடி கறுத்த கண்கள் கொண்ட கொழுத்த யூதப் பெண்கள்

வந்திருந்தனர். மராத்திப் பெண்கள் சேலை கட்டிய இறுக்கத்தால் உடலின் வளைவுகள் தோன்றக் கொடிபோல நின்று அசைந்தாடி ஊர்ந்து கொண்டிருந்தனர். மெலிந்தும் கொழுத்தும் இருந்த பல ரகக் குஜராத்திப் பெண்கள், குமாஸ்தாக்களின் மனைவியர், மில் தொழிலாளர் மனைவியர், மோட்டார் சாரதிகளின் மனைவியர், சிறு கடைக்காரர்களின் மனைவியர், மணமான பெண்கள், மணமாகாத பெண்கள்—இன்னும் பல வகையினர் அந்தக் 'கியூ' வரிசையில் காட்சியளித்தனர். வாடிய மல்லிகை மணம், மீன் நாற்றம், தேங்காயெண்ணெய், வாசனைச் செண்டுகளின் மணம் ஆகியவற்றுடன், நெடி வியர்வை வீச்சமும் கலந்து விசித்திர வாசனை கிளம்பியது. அது, உச்சிப்போதின் கொடிய சூரியனின் வெப்பத்திஞல் இழுக்கப்பட்டு, கண்ணுக்குப் புலஞகாத ஆவியில் இரண்டறக் கலந்தது. ஜனத்திறள் பேசிய மராத்தி, குஜராத்தி, இந்துஸ்தானி ஆகிய மொழிகள் ஒன்ருகக் கலந்து லட்சக்கணக்கான தேனீக்களின் இரைச்சல்போல் கேட்டன. ஊர்ந்து செல்லும் வரிசையைக் கண்டு நின்றுகொண்டிருந்த கூட்டத்தாருக்குக் கோபம் தோன்றியது. நிமிஷத்திற்கு அறுபது செகண்டுகள். அறுபது நிமிஷம் கொண்டது ஒரு மணி. இரண்டு மணி, மூன்று மணி......பாம்புபோல வளைந்து, நத்தைபோல ஊர்ந்து தேனீக்கள்போல் இரைச்சலிட்டுக்கொண்டு செல்லும இப்பெண்கள் வரிசை, ஒவ்வொரு நிமிஷமும் வளர்ந்துகொண்டே வந்தது. வரிசையின் முகப்பில் உள்ள ஒரு பெண் தானியத்தை வாங்கி முடித்து வெளிக் கிளம்பும் போது அதற்குப் பதிலாக 'க்யூவின்' கடைசியில் இரண்டு மூன்று பெண்கள் சேர்ந்து கொள்வார்கள். இருநூறு, இருநூற்றைம்பது, முந்நூறு, முந்நூற்றைம்பது என்று பெண்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போனது. விடியற்காலை முதல் எவ்வளவு பொறுமையுடன் இவர்கள்

காத்திருந்தனர்! முதலில் ஒரு காலின்மீது உடல் பாகத்தைச் சாய்த்து நிற்பார்கள். சோர்வு ஏற்பட்டதும் மறு காலில் தங்கள் உடல் கனத்தைச் சாய்த்து நிற்பார்கள். கோவில் கதவு திறப்பதற்கு முன் பொறுமையும் பக்தியும் கொண்டு காத்திருக்கும் பக்தகோடிகள் போலக் காத்திருந்தனர். ஆம் இதுவும் ஒரு புதிய கோவிலே! இக்கோவிலுக்கு இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அனைவரும் பக்தர்களாகி, கையில் ஒரு பையுடனும், இதயத்தில் ஒரே சிந்தனையுடனும் வந்திருந்தனர். அனைவருக்கும் ஒரே நோக்கம், ஒரே எண்ணம், ஒரே பக்தி. அப்போது அவர்கள் உள்ளத்தே குடிகொண்டிருந்த அந்த ஒரே பரம்பொருள், ஒரு படி அரிசிதான்.

துர்க்கா, வரிசையின் கடைசியில் வந்து சேர்ந்தாள். வழக்கம்போலில்லாது இன்று தாமதித்தே வந்தாள். காலையில் எழுந்திருக்கும் பொழுது அவள் உடல் முழுதும் ஒரே வலி. தானியக் கடைக்குச் சென்று மணிக்கணக்காக அவளால் காத்திருக்க முடியாதென்பதை அவள் உணர்ந்துதான் இருந்தாள். எனினும் அவளுக்கு வேறு வழிதான் ஏது? வீட்டிலோ கைப்பிடி அரிசிகூட இல்லை. இரண்டு நாட்களாகக் கணவனும் மனைவியும் கடையிலிருந்து உணவை வரவழைத்துச் சாப்பிட்டார்கள். பல நாட்களுக்குப் பிறகு இன்றுதான் தானியக்கடை திறக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு 'ரேஷன்' அரிசி கிடைக்காவிட்டால் என்றைக்குக் கிடைக்குமோ? கடவுளுக்குத்தான் தெரியும். அதற்குள் பேறுகாலம் ஆகிவிட்டால்......

துர்க்காவின் கணவன் ஒரு பஞ்சாலையில் வேலை செய்தான். காலையில் வீட்டை விட்டுக் கிளம்பி யந்திரங்களுடன் போராடி, பொழுது சாயுங் காலத்தில் சோர்வுடன் தள்ளாடி வீடு வருவான். துர்க்கா தானே கடைக்குப்போய் வீட்டுக்கு

வேண்டிய சாமான்களை வாங்கி வருவாள். அவள் அதைப்பற்றிக் கவலைப் படவில்லை. ஒரு தொழிலாளிப் பெண்ணுக்கு அது சிரமமானதோ வெட்கப்படக்கூடிய செயலோ அல்லவே! கிராமத்தில் பெற்றோர்களுடன் அவள் வசித்த காலத்தில் தன் தகப்பனுக்கு வயல் வேலைகளில் ஒத்தாசை செய்திருக்கிருள். கைராட்டையில் நூற்றிருக்கிருள். திரிகையில் மாவரைத்திருக்கிருள். மாட்டைக் குளிப்பாட்டி அதன் சாணத்தை வரட்டியாகச் சேகரித்திருக்கிருள். கணவனுடன் பட்டணத்திற்கு வந்ததும் தன் நந்துவைப் போலவே ஆலைக்கு வேலை செய்யவும் சென்றிருக்கிருள். கடைச் சாப்பாடு தன் கணவனுக்குப் பிடிப்பதில்லையாகையால் மாலை வீடு திரும்பியதும் தன் கைப்படச் சாதம் சமைப்பாள். அப்படியிருந்தும், தான் அதிகமாக வேலை செய்வதாக அவள் கொஞ்சங்கூட எண்ணுவதில்லை. அவளுடைய நந்துவுக்காக எதுவும் செய்யத் தயாராக இருந்தாள். எத்தனை நல்லவன் அவன்! மிருகக் காட்சிசாலை, சௌபாத்திக் கடற்கரை, பெரிய பெரிய கப்பல்கள் போய்வந்து கொண்டிருக்கும் அப்போலோ பந்தர் ஆகிய இடங்களுக்கு, அவன் அவளை அழைத்துச் சென்று காட்டியிருக்கிருன். தான் கேள்விப்பட்ட தெய்வங்களெல்லாம் உயிர்பெற்று நடமாடுங் காட்சியை, ஒரு சின்ன வெள்ளிதிரையில் காண்பிக்கும் அற்புத இடமான சினிமாக் கொட்டகைக்கும் அழைத்துச் சென்றிருக்கிருன். இவற்றையெல்லாம் கிராமத்திலிருந்தபோது துர்க்கா கனவிற்கூடக் கண்டவளல்ல.

நந்து அவள்மீது அன்பும் பரிவும் காட்டி வந்தான். மற்ற ஆலைத் தொழிலாளிகள் போல் சம்பள நாட்களில் அவன் குடித்துவிட்டு வருவதுமில்லை; மனைவியை ஒரு நாளாவது அடித்ததுமில்லை. துர்க்கா கர்ப்பமுற்று ஆருவது மாதமானதும் அவள் ஆலைக்கு வேலைக்குப் போவதை நிறுத்தி

விட்டான். 'நீ இப்பொழுது வேலை செய்யக் கூடாது. வீட்டிலிருந்து கொண்டு ஓய்வு பெற வேண்டும். நீ என் மகனுக்குத் தாயாகப் போகிறாய் அல்லவா? இந்தாப் பார் துர்க்கா, நீ எனக்கு ஒரு மகனைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஊளையிடும் பெண்குழந்தை எனக்கு வேண்டாம்' என்று கண்ணில் மகிழ்ச்சி பொங்கக் கூறுவான் நந்து.

பாம்புபோல் வளைந்து, நத்தைபோல் ஊர்ந்து, தேனீக்கள் போல் இரைச்சலிட்டுக்கொண்டு பெண்கள் வரிசை தானியக்கடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இப்பொழுது சுமார் ஒரு டஜன் பெண்கள் துர்க்காவுக்குப் பின்னால் வந்து சேர்ந்தனர். அவர்களிடையே பலவிதச் சர்ச்சைகள் நடைபெற்றன. ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசிகளைப் பற்றி ஒரு பார்சிப் பெண் சத்தமிட்டுப் பேசிக்கொண்டிருந்தாள். ஒரு கோஷா ஸ்திரீ தானியப் பஞ்சத்திற்காகக் காங்கிரஸ் மீது குறை கூறிக்கொண்டிருந்தாள். 'இதற்கெல்லாம் மகாத்மா காந்திதான் காரணம்; அரசாங்கத்தை அவர் எதிர்த்து நின்றதால், அவர்கள் வேண்டுமென்றே தானியக் கட்டுப்பாடுகள் வைத்து மக்களைப் பழிவாங்குகிறார்கள்' என்று கருதினாள் ஒரு கிறிஸ்தவப் பெண்மணி.

'காங்கிரசையும் மகாத்மாவையும் நீ ஏன் குறை கூறுகிறாய்? அரசாங்கம் லட்சக் கணக்கான டன் கோதுமையைப் பாரசீகத்திற்கும், எகிப்திற்கும் ஏற்றுமதி செய்து கொண்டிருப்பது உனக்குத் தெரியாதா?' என்று தலை நரைத்த ஒரு பெரிய குஜராத்தி மாது இடைமறித்துக் கூறினாள்.

'ஆம், அரசாங்கம் நாட்டைவிட்டுத் தானியங்களை அனுப்புவது எங்களுக்குத் தெரிந்ததுதான். ஆனால் நம் இந்தியர்கள் மட்டும் குற்றமற்றவர்களா என்ன? இந்த மார்வாடிகளைப் பார்! நிறையப் பொருள்களைக் குவித்து வைத்துப் பின்னால்

கள்ளச் சந்தையில் விற்கிறார்கள்' என்று மராத்திய மங்கை ஒருத்தி பதில் கூறினாள்.

'ஆமாம் உண்மைதான். நாம் ஐந்து ஆறு மணி நேரம் இந்த ஒருபடி அரிசிக்காகக் 'கியூ' வரிசையில் காத்திருக்க, இந்த மார்வாடிகள் ஆயிரக் கணக்கான, மணங்கு தானியத்தை, மூன்று மடங்கு அதிக விலையில் விற்பதற்காகப் பூமிக்கடியில் பதுக்கி வைத்திருக்கிறார்கள்.'

'இந்தத் தேவடியாள் மகன்களைக் கழுவில் ஏற்ற வேண்டும்.'

'மற்ற நாடுகளிலெல்லாம் அப்படித்தான் செய்கிறார்கள். ஆனால் இங்கோ அரசாங்கம் அவர்களுக்கு ராவ்பகதூர், கான்பகதூர்ப் பட்டங்களைக் கொடுக்கிறது. அவர்களும் யுத்தக் காண்டிராக்டினால் தினம் கொழுத்துக் கொண்டே வருகிறார்கள்.'

மற்றொரு பக்கம் சிலர் அப்போதைய புதிய யுத்தச் செய்தியைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள்.

'இந்தாப் பார் அக்கா, உனக்குத் தெரியாது; இந்தச் 'செருமனிக்காரன் சப்பான்காரன்' எல்லாம் ஒரே மாதிரிதான். வித்தியாசமே இல்லை. 'சப்பான்' காரனுக்கு மட்டும் வசதி கிடைத்தால் நிச்சயமாக 'ரசியா'வைத் தாக்குவான்.'

'நான் சொல்லுகிறேன் கேள். ஆயுள் காலம் முடிந்தால் காட்டுக் குள்ளநரி பட்டணத்திற்கு வருமாம். அதுமாதிரி 'சப்பான்' மட்டும் 'ரசியா'வைத் தாக்கினால் அதுதான் அதற்குக் கடைசிக் காலம். பர்மாவையும் பிலிப்பைனையும் விழுங்கிவிட்டு ஏப்பம் விட முடியாது தடுமாறுகிறதே, அந்த மாதிரி சின்ன விஷயம் அல்ல இது. ரசியா சரியான ரசியா அல்லவா ?'

'ரசியா!' வெயிலில் நிற்கும் துர்க்காவின் தலை, சுற்றத் தொடங்கியது. அவள் தனக்குத்தானே இந்த 'ரசியா' என்ற சொல்லை எங்கோ கேட்ட

மாதிரி இருக்கிறதே என்று யோசித்தாள். தனக்கும் இந்த ரஷ்யாவிற்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதுபோல் தோன்றியது. ஆம் இப்பொழுது ஞாபகம் வந்தது. நந்து அவளைத் திறந்த வெளியில் நடந்த ஒரு தொழிலாளர் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றான். அந்த மைதானத்தில் ஆண்களும் பெண்களும் கூடிய சுமார் முப்பதினாயிரம் தொழிலாளர்கள் அமர்ந்திருந்தார்கள். ஒரே இடத்தில் இவ்வளவுஜனங்கள் கூடியதைத் துர்க்கா தன் ஆயுள் காலத்திலேயே கண்டதில்லை. ஒரு பெருங்கடலில் ஒரு துளி எனத் தன்னை நினைத்தாள். எல்லாப் பக்கத்திலும் செங்கொடிகள், அவற்றில் தன் தகப்பன் அறுவடைக் காலத்தில் உபயோகிப்பதைப் போன்ற அறிவாளும், காய்ச்சிய இரும்பின் மீது கொல்லர் அடிக்கும் சம்மட்டி ஒன்றும் வெள்ளை நிறத்தில் காட்சியளித்தன. கூட்டத்தின் மத்தியில் உயரமான ஒரு மேடை இருந்தது. அதில் ஏறி நின்று பலர் பேசினார்கள். அந்த மேடையில் பேசும் மனிதர் குரல் அவள் அருகில் உள்ள மரக் கம்பத்தோடு இணைக்கப்பட்டிருந்த பெரிய கறுப்பு நிறமுள்ள குழாய் வழியாகக் கேட்டது. அந்தக் குரலும் சாதாரண மனிதர் குரலாகவே இருந்தது. யாரோ கிணற்றை எட்டிப் பார்த்துப் பேசுவதுபோல் கேட்டது. அந்தக் குரல் கூறியதாவது: "சகோதரர்களே, சகோதரிகளே! ரத்த வெறி பிடித்த ஹிட்லரின் ஓநாய்கள் ரஷ்யாவை—உலகத் தொழிலாளர்களின் தாயகமாகிய ரஷ்யாவை—விவசாயிகளும் தொழிலாளிகளும் ஆட்சி செய்யும் ஒரே நாடான ரஷ்யாவைத் தாக்கியுள்ளன. உலகத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு ரஷ்யாவைக் காப்பாற்ற வேண்டும்.' இப்படி இன்னும் ஏதேதோ பேசியது. அதைத் தொடர்ந்து 'சோவியத் ரஷ்யா ஜிந்தாபாத்' என்று முப்பதினாயிரம் குரல்கள் ஒலித்தன. துர்க்கா வானமே

இடிந்து விழுந்துவிடுமோ என்று பயந்து விட்டாள்.

இந்தக் 'கியூ' வரிசையில் அவள் எவ்வளவு நேரம் காத்திருந்தாள்? திரும்பிப் பார்த்தபோது தனக்குப் பின்னுல் இருபது பெண்கள் இருப்பதைக் கண்டாள். இப்பொழுது அவள் தெருவின் முனைக்கு வந்து விட்டதால், தலையைச் சிறிது உயர்த்திப் பார்க்கவும் கடையிலுள்ள சிவப்பு போர்டு கண்ணுக்குத் தெரிந்தது. இருந்தும் அவளுக்கும் அவளுடைய ஒரு படி அரிசிக்கும் மத்தியில் ஏறக்குறைய நூறு பெண்கள் நின்றனர். 'அரிசியை அளக்க இந்த வியாபாரிக்கு ஏன் இவ்வளவு நேரமாகிறது?' என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு கால்மேல் ஊன்றியிருந்த பாரத்தை மறுகாலுக்கு மாற்றினுள். வெப்ப மிகுதியினுல் மற்ற பெண்களும் பேசிச் சோர்ந்து போயினர். எதிர்த்தாற்போலிருந்த நடைபாதையிலிருந்த மரத்தின்மீது, நீலநிறமுள்ள வேடிக்கையான உடையுடுத்திய போலீஸ்காரன் சாய்ந்துகொண்டே அரைத் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் துர்க்காவிற்கு அவளது சோர்வு, கால்களில் தோன்றிய வலி, வயிற்றில் தோன்றிய கொடிய வேதனை அனைத்தும் கண்ணில் திரும்பியது போலாயிற்று. குளிர்ச்சியாகத் தோன்றிய நடைபாதையில் போய்ப் படுத்துத் தூங்கலாமா என்றுகூட எண்ணினுள். இலேசாகத் தலை சுற்றத் தொடங்கவும் தன் முன்னே இருந்த பெண்ணின் தோளைப் பிடித்துக் கொண்டு கீழே விழாது சமாளித்துக் கொண்டாள்.

"ஏன் அம்மா, நிற்க முடியவில்லையா?" என்று ஒரு சாந்தமான கிழவி கூறினுள். அவளது பேச்சில் ஆத்திரமோ கோபமோ இருக்கவில்லை. துர்க்காவிற்கு வெட்கம் அதிகமாகவும் நடுக்கம்

தோன்றியது. துர்க்கா சற்று பின் தாங்கிக் கால் வைத்ததுதான் தாமதம், "உனக்குக் கண் பொட்டையா? காலை மிதித்து விட்டாயே!" என்று கூச்சலிட்டு ஒருபெண் துள்ளியபடி பின்பக்கமாகச் சாய்ந்தாள். உடனே அவளுக்குப் பின்னால் இருந்த வரிசையில் கடைசிவரை பல மொழிகளிலும் வசை மாரிகள் கிளம்பின.

துர்க்காவிற்கு மிகவும் அவமானமாக இருந்தது. பல்லைக் கடித்துக்கொண்டே தன்னைச் சரிப் படுத்திக் கொண்டு கண்களைத் தரைமீது செலுத்தினாள். ஒரு சமயம் அரிசியையும் வேண்டாமெனச் சொல்லிவிட்டுக் 'க்யூ' வரிசையை விட்டுச் செல்லலாமென்றுகூட எண்ணினாள். ஆனால் நந்துவையும் அவன் மாலையில் சாப்பிட வேண்டியதையும் நினைத்துச் சமாளித்துக் கொண்டாள். அவளது அருமை நந்து அவளுக்காக இந்நாட்களில் 'ஓவர் டைம்' வேலை செய்து வருகிறான். அவனைப் பட்டினி போட்டால் என்ன ஆவது? இதற்குள் அவளும் கடைக்கு அருகே வந்து விட்டாள். இன்னும் ஒரு அரைமணி நேரமட்டும் காத்திருந்தால் தன் பையில் அரிசியுடன் வீடு போய்ச் சேரலாம்.

தன்னை அப்படியே பாதியில் ரம்பங்கொண்டு அறுப்பதுபோல் அவளுக்கு ஓர் கொடிய வலி தோன்றியது. உடையுடன் குளித்ததுபோல் அவ்வளவு வியர்வை அவள் உடலெல்லாம் கொட்டியது. தலை சுற்றி மயக்கம் வருவது போலிருந்தது. அவளுடைய குறுக்கில் வலி தோன்றித் தோன்றி மறைந்தது. ஒரு கூரிய கட்டாரியால் மீண்டும் மீண்டும் குத்தப்படுவது போல் இருந்தது. இவ்வளவு காலமாகக் காத்திருந்த அந்த நேரமும் வந்துவிடுமோ? இருக்காது. குழந்தை பிறக்க இன்னும் இரண்டு வாரங்களாகும் என்று மூன்று நாட்களுக்கு முன்னர்தானே மருத்துவச்சி கூறினாள். இது ஏதாவது வேறு வலியாக இருக்குமோ!

யோசித்து, எதிர்பார்த்து, சோர்வுற்று,

தன்னை வருத்துகின்ற வலியையும் பொறுத்துக் கொண்டு வரிசையில் நகர்ந்து நகர்ந்து சமாளித்துக்கொண்டிருந்தாள். முடிவில் ஒரு வகையாகத் தானியக் கடைக்கு எதிரில் வந்துவிட்டாள். அவளுக்கு முன்னால் ஒரே ஒரு பெண்தான் நின்றாள். அப்பெண் தன் பங்கை வாங்க உள்ளே சென்றபோது இரண்டு படிகள் உள்ள ஏணிமேல் அவள் ஏறிச் சென்றதையும் கவனித்தாள் துர்க்கா. ஒவ்வொரு அடி உயரமுள்ள இந்தப்படிகள் அவளது கிராமத்தின் அருகில் மலைமீதுள்ள கோவிலுக்குச் செல்லும் நூற்றிருபது படிகள் போலத் தோற்றமளித்தன. இந்தப் பழைய படிகளில் அவளால் ஏறிச் செல்ல முடியுமா?

முன் சென்ற பெண் வெற்றிப் புன்னகையுடன் தன் முகத்திலிருந்த வியர்வையைத் தன் சேலை முனையால் துடைத்துக் கொண்டே கடையிலிருந்து திரும்பினான். துர்க்காவைப் பின்னாலிருந்தவள் இலேசாகத் தள்ளினாள். 'இந்தா அம்மா, நடந்து போ. என்ன தூங்குகிறாயா?' என்றாள். மார்வாடி துர்க்காவைப் பார்த்தவண்ணம் 'சீக்கிரம் வா அம்மா, இன்னும் பல பேர் காத்திருக்கிறார்கள் அல்லவா ?'' என்றான். படிகளில் ஏறிச் செல்ல வேண்டியதை எண்ணி அவளது முகம் வெளுப்படைந்து கால்கள் நடுங்குவதை அவனால் காண முடியவில்லை.

''என். என்..என்னால் முடியவில்லை..இங்கேயே வந்து அந்த அரிசியைக் கொஞ்சம் கொடுத்து விடுங்களேன்'' என்று கூறும்போது அவளது உதடுகள் நடுங்கின. குரல் கம்மியது. ''உனக்கு மட்டும் சலுகை காட்ட உன் தலையில் மட்டும் கிரீடம் வைத்திருக்கிறதா ? மற்றவர்களைப்போல் மேலே வந்து உன் அரிசியை வாங்கிக் கொண்டு போ!''

''போ. விரைவாய்ப் போ.''

''உனக்கு வேண்டாமென்றால், உனக்கு அடுத்

திருப்பவளையாவது வாங்க விடு.''

ஒவ்வொரு எட்டிலும் தடுமாறி விழுவது போல் தோன்றியது. எப்படியோ சிரமப்பட்டுத் தள்ளாடிக் கொண்டே கடைக்குள் சென்று விட்டாள். நடுக்கத்துடன் அந்த மார்வாடியிடம் பையையும், கடந்த நான்கு மணி நேரமாகக் கையில் வைத்திருந்ததால் நனைந்து போயிருந்த சில்லறை நாணயங்களையும் கொடுத்தாள். மார் வாடி படியை எடுத்து அதில் அரிசியை நிரப்பித் துர்க்காவின் பையில் கொட்டினான். அப்பொழுது அவளுக்கு அந்தக் கொழுத்த மார்வாடி விசித்திர மான முறையில் சுழல்வது போல் தோன்றியது. படி, அரிசி மூட்டைகள், கடை முழுவதுமே சுற்று வது போல் இருந்தன. சுழன்று சுழன்று கொண்டே வந்தன. கடை, மூட்டைகள், நெய் டின்கள் அனைத்தும் சுற்றின. அங்கிருந்த ஹனு மானின் வர்ணப்படம் அவள் முகத்தில் மோதி யது. அவள் கூச்சலிட்டாள்.

தான் பெரிய அரிசிக் குவியலின் மத்தியில் புதைபட்டிருப்பது போல் அவளுக்குத் தோன்றி யது. மூச்சுத் திணறியது. யாரோ சிலர் மேலி ருந்த அரிசியை எடுத்து விடவும் அவளால் மூச்சு விட முடிந்தது. ஹனுமான் படியால் அரிசியை அளந்து அளந்து, காத்திருக்கும் பெண்களின் பையில் கொட்டி, 'இந்தா உனக்கு ஒரு படி அரிசி, இந்தா உனக்கு ஒரு படி அரிசி' என்று கூறுவது போல் தோற்றமளித்தது. அவருடைய பிரபல மான நீண்ட வால், மகிழ்ச்சியால் துள்ளிக்கொண் டிருந்தது. இல்லை, அது ஹனுமானின் வால் அல்ல. துர்க்காவைத் திட்டிய பெண்ணின் முகத் தைக் கொண்ட பாம்பு. திடீரென அப்பாம்பு நீண்டு தெரு முனைவரை வளர்ந்திருந்தது. இப் பொழுது அது நகர்ந்து வளைந்துகொண்டு துர்க் காவை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப் பாம்பு பெருமூச்சு விடவும் துர்க்கா அந்த அரக்க

உருவத்தின் வயிற்றினுள் இழுக்கப்படுவதுபோல் இருந்தது.

அது உண்மையில் பாம்பின் வயிறல்ல. அது ஓர் இருட்டறை. இருண்ட புழுக்கமான அறை. அதில் கொஞ்சங்கூடக் காற்று இல்லே. மீண்டும் அவளுக்கு மூச்சுத் திணறியது. அந்த ஆழ்ந்த இருளில் யாரோ 'இதுதான் இந்தியா!' என்று கூறினுர்கள். தூரத்தே இரண்டு சிவப்பு வெளிச்சங்கள் எரிந்துகொண்டிருந்தன. துர்க்கா அவற்றைப் பாம்பினது கண்களெனக் கருதினுள். ஆனல் அவை அருகில் நெருங்கவும் அரிவாளும் சம்மட்டியும் பொறித்த இருசெங்கொடிகளாகக் காட்சியளித்தன. இப்பொழுது எங்கும் வெளிச்சம் பளிச்செனத் தெரிந்தது. ஆயிரக்கணக்கான தொழிலாளர் வரிசையாக நடந்துகொண்டே விசித்திர மொழியில் பாடிக்கொண்டு சென்றனர். கிணற்றுக்குள்ளிருந்து 'இதுதான் ரஷ்யா' என்று யாரோ கத்தும் ஒலி கேட்பது போலிருந்தது.

துர்க்காவிற்குத் தான் நிர்வாணமாக இருப்பது போல் தோன்றவும் வெட்கம் தோன்றியது. எழுந்திருக்க முயலுமமுன்னர் ஒரு பயங்கர அரக்கன் தோன்றி அவள் உடலே இரு துண்டுகளாக ரம்பங் கொண்டு அறுப்பதுபோல் தோன்றியது. மீண்டும் பார்த்தபொழுது அவ்வுருவம் நந்தவாகத் தோன்றியது. அவளே அறுத்துக்கொண்டே வேடிக்கையாக 'இங்கே பார் துர்க்கா, நீ எனக்கு ஒரு மகன் கொடுக்க வேண்டும் தெரிகிறதா?' என்று அவன் கூறினுன். ஆயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்து நின்று இவள் இருக்கும் நிலேயைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தார்கள். அக்கூட்டத்திலிருந்த ஒருத்தி 'இதுதான் இந்தியா' என்ருள். கொழுத்த குஜராத்திப் பெண்ணுெ 'காந்ஜீயை ஏன் குறை கூறுகிருய்? அவரையும்தான் இந்த இங்கிலீஷ்காரர்கள் பட்டினி போடுகிருர்களே!'' என்ருள்.

அனைவரும் மறைந்தனர். தான் அந்த மார் வாடியை விடக் கொழுத்திருப்பதையும், தன் வயிறு முன் தள்ளிக் கொண்டிருப்பதையும், துர்க்கா கண்டாள். பின்னர் யாரோ ஒரு ஆசாமி நீண்ட கூரிய ஊசியை அவள் வயிற்றில் பாய்ச்சு வது போலிருந்தது. அதனுல் ரத்தம் பீறிடவும் அவளது உடைகளெல்லாம் ரத்தத்தில் தோய்ந் தன. தொலேவிலே யாரோ அவளது மனக் கத வைத் தட்டுவது போலிருந்தது. சிலர் பேசிக் கொண்டிருந்தனர். இன்னும் தலே சுற்றிக் கொண்டே இருக்கவும், கடையும் சுழன்று கொண்டே இருந்தது. மெதுவாக அதுவும் நின் றது. ஹனுமானின் படம் சுவரில் இன்னும் தொங்கிக்கொண்டிருந்தது. மிகவும் அசதியாக இருந்ததால் அவளால் தன்னைச் சுற்றி நிற்பவர் கள் போல் தோன்றியவர்களைப் பார்க்க முடிய வில்லே. அவர்கள் ஏதோ பேசினதில் ஒன்றி ரண்டு வார்த்தைகள் மட்டும் காதில் விழுந்தன.

'......பாவம் மனுஷி......இது அவளுக்கு முத லாவதாக இருக்கும் போலிருக்கு......'

'......கடவுளின் திருச்சித்தந்தான் என்ன...'

'......போயும் போயும் இந்த இடத்திலா?—'

'......யாரோ ஒரு தொழிலாளிப் பெண்...'

'......எல்லோரும் வெளியே போங்கள். இது எல்லாம் என்ன வேடிக்கையா?'

துர்க்காவிற்கு ஒரு வெறுப்பு உணர்ச்சி தோன்றியது கையினுல் துணிகளைத் தொட்டுப் பார்க்கையில் அவை நனைந்திருந்தன. தண்ணீரா? வியர்வையா? இல்லே, ரத்தம்! அவளது மனதில் ஒரு பயங்கரம் தோன்றியது

'ஐயய்யோ......இங்கே எல்லோரும் பார்த்தி ருக்கும் நேரத்திலா? இதைவிட வேறு என்ன கேவலம் வேண்டும்?' அந்த இடத்திலேயே பூமி பிளந்து தன்னையும் இந்த அவமானத்தையும் சேர்த்து விழுங்கிவிடக் கூடாது என எண்ணி ஞள். இந்த அவமானத்தைவிடச் சாவு

எவ்வளவோ மேலானதே! சோர்வு தோன்றவும் இலேசாகக் கண்ணை மூடியவாறே சிந்திக்கலானாள். 'இந்த இடத்தை விட்டு எப்படிப் போவது? இனி மேல் நாலு மனிதர் முகத்தில் எப்படி விழிப்பது? தெருவில் உள்ளவர்களெல்லாம் என்னைச் சுட்டிக் காண்பித்துப் பேசுவார்களே!'

பல நிமிஷ நேரம் இந்த அவமான எண்ணங்களில் சுழன்று கொண்டிருந்தாள். மீண்டும் ஒரு மயக்கம் தோன்றுவது போலிருந்த பொழுது……

ஒரு குழந்தை அழுதது.

ஒரு குழந்தை. யாருடைய குழந்தை? அவளுடைய குழந்தை! துர்க்காவின் குழந்தை! நந்துவின் குழந்தை!

இந்தச் சின்னஞ் சிறிய குரல் ஒரு கணத்தில் அவளது எல்லா அவமானத்தையும் சங்கடத்தையும் போக்கி விட்டது. சோர்வும் மயக்கமும் அவளது உள்ளத்திலிருந்து அகன்று விட்டன. வலியைக் கவனியாது தலையைத் திருப்பிப் பார்த்த பொழுது, கந்தைத் துணிகளால் சுற்றப்பட்டிருந்த சின்னஞ் சிறு சிவப்புநிற மாமிசத் துண்டத்தைக் கண்ணுற்றாள். தாய் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் அதன் வாயிலிருந்து அழுகுரல் கேட்டது. 'அதற்குப் பசிக்கிறது போலிருக்கிறது' என எண்ணி அவள் தனது ரவிக்கையை அவிழ்த்தாள்.

தாய்மையின் உயர்வு நாணத்தைப் போக்கியது. சுற்றியிருந்த அனைவரும் சிரித்துக் கொண்டே வெளியேறினர்.

சிறிது நேரங் கழித்து, தடுமாறி எழுந்து சுவரைப் பிடித்துக் கொண்டே தடுமாற்றத்துடன் வெளியே நடந்து சென்றாள். ஒரு கையால் மகனைப் பிடித்திருந்தாள். மற்றொரு கையில் அவளது பை. அந்தப் பையில் ஒரு படி அரிசி இருந்தது.

# பாத கமலம்




"இந்தியாவிலுள்ள உயர்தர 'பிலிம் டைரக்டர் களில் ஒருவராக எனது நண்பர் ராமகிருஷ்ணன் கருதப்படுகிறார். அவருக்கு இத்துறையில் பத்து வருஷங்களுக்கு மேல் அனுபவம் உண்டு. அவர் தமது வேலையை நன்கு உணர்ந்து திறமையுடன் முடிக்கக் கூடியவர். மிகப் பிரசித்திபெற்ற நட்சத் திரங்கள் அவரது படங்களிலே நடித்திருக்கிறார் கள். பொதுவாக எல்லா ஸ்டுடியோக்களிலும் அவ ருக்கு நல்ல செல்வாக்கு. ஆனால் அவருக்கு ஒரே ஒரு குறையுண்டு. குறைந்தது அரை டஜன் நண் பர்களிடமாவது கலந்தாலோசித்த பின்னர்தான் அவருக்கு எந்தக் காரியத்திலும் இறங்கத் துணிவு ஏற்படும். என் அதிர்ஷ்டமோ அல்லது, துரதிர்ஷ் டமோ அத்தகைய நண்பர்களில் நானும் ஒருவனாக இருந்ததால் மூன்று நான்கு நாட்களுக்கு ஒருமுறை எனது டெலிபோன் மணி அடிக்கும். அதில் ராமகிருஷ்ணனின் பரபரப்பான குரல் கேட்கும்:

"ஹலோ, ஹலோ! நான்தான்—ராம கிருஷ்ணன் பேசுகிறேன்......"

"ஆம், ஆம்; தெரிகிறது. இந்த முறை என்ன வாம்?"

"சாயங்காலம் உங்களுக்கு ஓய்விருந்தால் என் இருப்பிடத்திற்குக் கொஞ்சம் வந்துவிட்டுப் போங் கள்; உங்களிடம் ஒரு புது விஷயம் சொல்ல வேண் டும்."

அது புது விஷயமாக இல்லாவிட்டாலும் புதிய நட்சத்திரத்தின் 'முக வெட்டுப்' பற்றியோ, அல் லது குரல் இரவல் கொடுப்பவர்களின் குரல் பரீட் சையைப் பற்றியோ, அல்லது ஏதாவது சரித்திரப்

படத்தில் தோன்றும் கதாநாயகியின் புது உடைகள் பற்றியேதான் ஆலோசனை கேட்கப்படும். இவ்விஷயங்களில் டாம், டிக், ஹேரி, அப்பாஸ், மோஹன், வசந்த், ஷாகூர் ஆகியவர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொண்டாலொழிய அவராகவே ஒரு முடிவான தீர்மானம் செய்ய முடியாது.

ஒரு வருஷத்துக்கு முன் நான் வழக்கமாகக் 'கடைசிப் பக்கம்' என்ற வரிசையில் எழுதி வரும் கட்டுரையைப் பூர்த்தி செய்ய முயன்று கொண்டிருந்த போது டெலிபோன் மணி அடித்தது. ரிசீவரைக் கையில் எடுத்ததும் பரிச்சயமான குரல் கேட்டது:

"ஹல்லோ, ஹல்லோ! நான்தான் ராமகிருஷ்ணன்......"

"சரி, என்ன விசேஷம்?"

"இன்றைக்குச் சாயங்காலம் உங்களுக்கு ஓய்வு இருந்தால் இந்தப் பக்கம் கொஞ்சம் வந்து விட்டுப் போங்கள். சில விஷயங்களைப் பற்றி உங்கள் யோசனையை நான் கேட்கவேண்டியிருக்கிறது. அதை நீங்கள் இங்கு வரும்பொழுது கூறுகிறேன். இரவுச் சாப்பாட்டை என்னுடன் வைத்துக் கொள்ளுங்களேன்."

அவ்வளவுதான்; டெலிபோன் தொடர்பு அறுந்து விட்டது. நானும் மாலை ராமகிருஷ்ணன் இருக்கைக்குப் போய்ச் சேர்ந்தேன். எதிர்பார்த்ததைப் போலவே தாவூத், வசந்த், ஷாகூர் ஆகிய மும்மணிகளும் முன்னரே வந்திருந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர். நான் அவர்களை விசேஷம் யாதோ எனக் கேட்டேன். ஷாகூர் மர்மமாக, "ராமுவையே கேளுங்கள். அவர் ஆடை மாற்றிக் கொண்டிருக்கிறார்; இதோ வந்து விடுவார்!" என்று பதில் கூறினார். ஆனால் ஷாகூரின் சன்னக்கோடு போட்ட சர்ஜ் கம்பளிச் சட்டை விசேஷத்தை வெளிப்படுத்தியது. இன்று மாலை

எங்களுக்கு அளிக்கப்படும் வேலை எத்தகைய வேலையாக இருந்தாலும் சரி, நிச்சயமாகக் குறைந் தது ஒரு பெண்ணாவது சம்பந்தப்பட்டதாக இருக் கும் என்பதை அது எடுத்துக் காட்டியது.

அதற்கேற்றாற்போல் ராமுவும் ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு வாசனைகளைத் தாராளமாகப் பூசிக்கொண்டு வந்து சேர்ந்தார். "யார் தலையில் கைவைக்கப் போகிறீர்கள்? யார் அந்த அப் பாவி?" என்றேன்.

மர்மமான அந்த விஷயமும் புரிந்து விட்டது. ராமுவின் புதுப் படத்திற்கு ஒரு நாட்டியக்காரி தேவையாக இருந்தது. பிரசித்திபெற்ற சினிமா நாட்டியக்காரிகளைப் பெரும்பாலும் வேறு படங் களுக்கு எடுத்திருந்தார்கள். சிலர் பணம் அதிக மாகக் கேட்டனர். மற்றவர்கள் தடித்தோ மெலிந்தோ லாயக்கற்றவர்களாக ஆகிவிட்டனர். இத்தகைய காரணங்களினால் ஒரு புதிய நாட்டியக் காரியைத் தேடிப் பிடிக்கும் திருப்பணிக்கு நாங் கள் புறப்பட்டோம். ஆப்பிரிக்கா வனாந்திரங் களில் வேட்டையாடச் செல்லும் கோஷ்டிகளை நீங்கள் திரைப் படங்களில் பார்த்திருப்பீர்கள். அவர்கள் தோளில் ஒரு பக்கம் ரைபிள் துப்பாக்கி, இடுப்பில் கட்டாரி, கழுத்தைச் சுற்றித் தூரதிருஷ் டிக் கண்ணாடி, தலையில் பெரிய தொப்பி, காலில் முழங்கால்வரை நீண்ட சப்பாத்து ஆகியவை சகி தம் ஆயத்தமாகச் செல்வதைக் கண்டிருப்பீர்கள். அதே முறையில்தான் பிலிம் ஆசாமிகளும் புது முகங்களைத் தேடும் வேட்டைக்குப் புறப்படுவார் கள். ஆனால் அவர்களுடைய உடை அலங்காரங் கள் மட்டும் வேறு விதமாக இருக்கும். ரைபிள், சுழல் துப்பாக்கிகளுக்குப் பதில் இவர்கள் 'ஷீபர்' பேனாக்களையும், தங்க மூடி போட்ட பார்க்கர்ப் பேனாக்களையும், தாங்கள் தேடிப் பிடிக்கும் நாட் டிய ஜோதிகள் தங்களுடைய நிபந்தனைப்படி

கையெழுத்திடுவதற்காக எடுத்துச் செல்வார்கள். துப்பாக்கிக் குண்டுக் காட்ரிஜுகளுக்குப் பதிலாகக் கையில் சிகரெட் டின்களையும் ரூபாய் நோட்டுகள் பிதுங்கும் மணிப்பர்ஸ்களையும் ஏந்திச் செல்வார்கள். மற்றபடி வேட்டைக் காலத்தில் ஏற்படும் ஆவல், விரட்டல், வேட்டையை மோப்பங் காணுதல் ஆகிய இத்தியாதி எல்லாம் ஒன்றேதான்.

ஆப்பிரிக்காப் பாலைவனத்திற்குச் சிங்க வேட்டையாடச் சென்றாலும் சரி, அல்லது பம்பரயிலுள்ள பாரஸ் ரோட்டிலிருக்கும் நாட்டியக்காரிகளைத் தேடிச் சென்றாலும் சரி,—அதற்கு ஒரு வழி காட்டி வேண்டும். அவன் காட்டுப் பாதையின் நெளிவு சுழிவு, வேட்டைப்பொருள் தூரத்தில் வரும்பொழுதே அறியும் சக்தி, காட்டிலுள்ள ஒவ்வொரு ஜீவனின் பழக்க வழக்கங்கள் அனைத்தையும் அறிந்தவனாக இருக்க வேண்டும். பாரஸ் ரோடின் பக்கம் ராமகிருஷ்ணன் கார் போய்ச் சேர்ந்ததோ இல்லையோ, அத்தகைய ஒரு வழி காட்டி, காரின் புட்போட்டில் வந்து தொற்றிக் கொண்டான். அவன் தொழிலை அவனது தோற்றமே எடுத்துக் காட்டியது. "என்ன எஜமான், நீங்கள் 'குட்டி'களைப் பார்க்க வேண்டுமா? நான் நல்ல சரக்குகளை யெல்லாம் உங்களுக்குக் காட்டுகிறேன்" என்று கூறி, அவன் கண்ணடித்த முறையை அப்பாவி ராமு வெட்கத்துடன் நோக்கினார். அதற்குள் 'ஸ்டீரிங்' சக்கரத்திலுள்ள பிடிப்புத் தளரவும் கார் விளக்குக் கம்பத்தை நெருங்கி விட்டது. ராமு பிரேக்கைப் பிடித்திழுத்து எஞ்சினை நிறுத்திவிட்டார்.

"இதோ பார்! ஒரு படத்திற்காக நாட்டியக்காரி ஒருத்தி தேவை. நல்ல நாட்டியக்காரியாக இருப்பதுடன் நல்ல முகவெட்டும் இருக்க வேண்டும்."

"அப்படி யென்றால் என்னோடு வாருங்கள், எஜமான்! உங்களுக்கு வேண்டிய சரியான ஆசாமியைப் பிடித்துத் தருகிறேன். நாட்டியத்தில் சாதனுபோசும் அசூரியும் அவளிடம் பிச்சை வாங்கவேண்டும்..."

"அது சரி, ஆளின் தோற்றம் எப்படி?"

"அழகா! அவள் அப்சரஸல்லவா! பிரம்மாவின் அற்புத சிருஷ்டியல்லவா! அப்படியே வீணுவும் நசீமும் உருண்டு திரண்டு ஒன்றாகிய தோற்றத்தைப் போலிருப்பாள்!" என்றான் வழிகாட்டி.

எல்லாவற்றையும் ஒருவாறு பேசி முடித்த பிறகு இருளடைந்த மாடிப் படிகளின்மீது ஏறிப் பிரகாசமான ஓர் அறைக்கும் போய்ச் சேர்ந்தோம். எங்கள் வழிகாட்டி, அப்சரஸ் என்றும் வீணுவும் நசீமும் சேர்ந்து திரண்ட உருவம் என்று புகழ்ந்த அந்தப் பெண், முப்பது வயது நிறைந்த முற்றிய விபசாரியாக இருந்தாள். ஏதோ சினிமா நாடகங்கள் ஆடுவதாகப் பாவனை செய்தாள். அவள் பெயர் பிரேமலதாவோ பிரேமபாலாவோ என்னவோ எனக்கு இப்பொழுது சரியாக ஞாபகமில்லை. ஆனால் நான் இங்கே கூறப்போகும் கதை அந்தப் பிரேமலதாவைப் பற்றியோ, அல்லது பிரேமபாலாவைப் பற்றியோ, அல்லது வழிகாட்டி எங்களுக்குக் காட்டியபொழுது குட்டை, நெட்டை, தடி, மெலிவு, கறுப்பு, சொள்ளை மூஞ்சி—இப்படியாகக் காட்சியளித்த மற்ற ஆறு நாட்டியப் பெண்களைப் பற்றியோ அல்ல.

இத்தகைய ஓர் இடத்தில் ஹார்மோனியம் வாசித்தவன் எனது சொந்த ஊரிலுள்ள ஒரு 'காவாலி' என்பதை நான் அறிந்தேன். எங்கே அவன் எனது பெற்றோரிடமும் சுற்றத்தாரிடமும இரவு நேரங்களில் நான் இப்படி ரோந்து சுற்றுகிறேன் என்று சொல்லிவிடுவானோ எனப் பயந்து, வந்த வழியே மெதுவாய் நழுவிய செய்தியை இங்கே கூறுவது உங்களுக்கு அவ்வளவு ரஸமாய்

இருக்காது என்று நான் எண்ணுகிறேன். நாங்கள் சென்ற ஒவ்வொரு இடத்திலும் தாம்பூலத்திற்காகப் பெண்களுக்குத் தட்சணை அளித்த தொகையையும், அதைக் கண்டு நான் இந்தக் கணக்குகளையெல்லாம் ஸ்டூடியோக் கணக்கப் பிள்ளை எந்த இனத்தில் எழுதுவாரோ என்று மலைத்ததையும் தெரிந்துகொள்ள உங்களுக்கு அக்கறை இருக்காது என்றே நினைக்கிறேன்.

விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேனே! அன்று நடு இரவு ஆகியும் படத்திற்கு லாயக்கான ஓர் உருவத்தையும் காணக் கிடைக்காமற் போகவே, நாங்கள் அந்த வழிகாட்டியிடம் இனிமேல் எத்தகைய அப்சரஸ்களையோ, தேவ கன்னிகைகளையோ, மாதுரியும் சுலோசனுவும் ஒன்ருய்த் திரண்டு காட்சி யளிப்பவர்களையோ, இன்றேல் நர்கீசும், சுரயாவும் சேர்ந்து ஒருருவாய் விளங்குபவர்களையோ காணத் தயாராக இல்லை என்று பட்டவர்த்தனமாகக் கூறிவிட்டோம். ஆனல் அவனே விடாக்கண்டனுக இருந்தான். எதற்கும் அவன் அசைவதாகத் தெரியவில்லை. சலியாத உற்சாகத்துடன் "தயவு செய்து என்னுடன் இன்னும் ஓர் இடத்துக்கு மட்டும் நீங்கள் வாருங்கள். அதுவும் உங்களுக்குப் பிடித்தமாக இல்லை என்று தோன்றிஞல் என் தோலைச் செருப்பாய்த் தைத்துப் போட்டுக் கொள்ளுங்கள். ஆனல் நாம் இப்போது கென்னடிப் பாலத்திற்குப் போகவேண்டும்" என்ருன்.

வசந்திற்குப் பசியாயிருந்தால் இனித் தேடுவதில் பிரயோசனமில்லை எனத் தோன்றியது. ஆனல் ராமகிருஷ்ணனே ஸ்டூடியோவில் செட்டிங் எல்லாம் தயார் செய்து வைத்திருந்தார். 'டான்ஸ் ஸீன்' ஒன்றுதான் பாக்கி. படம் ஏற்கனவே மிகவும் தாமதித்துவிட்டது. ஷாகூரும் தாஹூதும் விடியும் வரையோ அல்லது ராமகிருஷ்ணனின் வெற்றிலைத் தட்சணையில்

கைப்பணம் தீரும் வரையோ சுற்றத் தயாராக இருந்தார்கள்.

''சரி, எப்படியோ இதை மட்டும் பார்ப்போம். ஆனால் கண்டிப்பாய் இதுதான் கடைசி. அப்புறம் வீடு போய்ச் சேர வேண்டியதுதான்!'' என்று வழக்கம்போல் நானும் சம்மதித்தேன். நாங்கள் ஏறிச் சென்ற கார் வெமிஸ்டன் ரோடு வழியாகச் சென்றது. கடைசியில் திரும்பி இருண்ட ஒரு சந்தில் ஏறக்குறையக் கென்னடி பாலத்திற்குக் கீழே நின்றது.

நாங்கள் அதுவரை சென்று வந்த பாரஸ் ரோடின் நாற்றம் பிடித்த பொந்துகளைவிடச் சுத்தமாக ஒரு ஐந்தடுக்குக் கட்டடம் நின்றது. பாட்டின் ஒலியும் கால் சதங்கையின் ஓசையும் காதில் விழுந்தன. வெள்ளைச் சிப்பாய்கள் ஓரிருவர் மேலும் கீழுமாய்ப் போய்க் கொண்டிருந்தார்கள். எதிர்த்தாற்போலிருந்த ஹோட்டலிலிருந்து ஒரு பையன் அரை டஜன் சோடாப் புட்டிகளைத் தூக்கிக்கொண்டு விரைவாய் வந்து கொண்டிருந்தான். வெளிச்சமான ஓர் அறையில் ஒரு பெண் பெருஞ் சதத்துடன் சிரித்துக்கொண்டிருந்தாள். அந்தச் சிரிப்பைத் துளைத்துக்கொண்டு இரவில் காயம் பட்ட பூனை வீறிடுவது போல் ஒரு கூச்சல். பின்னர் பாலத்திற்கடியில் மின்சார ரயில் இடியோசை போல் ஓடவும் அதன் ஓசை அந்தச் சிரிப்பையும் கூச்சலையும் அடக்கிவிட்டது. வண்டி சென்றதும் பழைய பாட்டொலியும் கால் சதங்கை ஓசையும் காதில் விழுந்தன. கீச்சிட்ட குரலில் பிரசித்தமான பாட்டான 'ஹமாரி கல்லி ஆனா!'—அதாவது, 'அன்பே, எங்கள் சந்திற்கு வாருங்கள்!' என்று யாரோ பாடினார்கள். நாங்களும் படியில் மலைமேல் ஏறுவது போல் ஏறிக் கொண்டிருந்தோம்.

எங்களுக்கு நல்வரவு கூறுவதுபோல் கதவு திறந்திருந்தது. எப்பொழுதோ ஒரு காலத்தில்

வெண்மையாக இருந்த வெள்ளை விரிப்பு ஒன்று தரையில் விரிக்கப்பட்டிருந்தது. சுவர் ஓரத்தில் பெருந் திண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த அறை காலியாக இருந்தது. அது நிர்வாணமாக இருப்பதுபோல எனக்குத் தோன்றியது. அறையின் ஒரு மூலையில் ஹார்மோனியம் ஒன்று கிடந்தது. மற்றொரு மூலையில் ஒரு ஜோடி தபேலாக்கள் இருந்தன. எங்கள் வழிகாட்டி அவ்வீட்டிற்கு மிகவும் பழக்கமானவன் போல் அழுக்குத் திரையை விலக்கி அப்பாலிருந்த அறைக்குள் சென்றான். கொஞ்ச நேரத்தில் வாயில் வெற்றிலையை மென்று கொண்டே அவன் திரும்பி வந்து, "அவள் வெளியே சென்றிருக்கிறாள்; சில நிமிஷங்கள் நாம் காத்திருக்கவேண்டும்" என்றான்.

வெள்ளைத் தாடியில் மருதாணிச் சாயம் பூசிக் கொண்டிருந்த கிழ வேலைக்காரன் ஒருவன், தட்டில் வெற்றிலை கொணர்ந்து எங்கள் முன் வைத்தான். அவனது கண்களில் ஒரு விசித்திரச் சோகம் இருந்தது. தட்டை வைத்துவிட்டு வந்த வேகத்திலேயே அவன் விரைவாகத் திரும்பிவிட்டான்.

"வேடிக்கையான இடம்!" என்றார் ஷாகூர்.

"ஆமாம்; இந்த அழுக்குத் திரைக்குப் பின்னால் ஏதோ மர்மம் இருப்பதுபோல் தோன்றுகிறது!" என்றேன் நான்.

"சோக நாடகமாக இருக்குமோ?"

"காஸ்லைட், ஜேன் அயர் முதலிய அழுமூஞ்சிப் படங்களைப் பார்த்த உனக்கு எல்லாம் சோகக் கதைகளாகத்தான் தோன்றும்" என்றார் ராமு.

வசந்த் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, "இப்பொழுது மணி பன்னிரண்டரையாகிவிட்டது. நாம் புறப்படுவோம். இரவு முழுவதும் நம்மால் காத்திருக்க முடியுமா?" என்று கூறினார்.

நான் சரி என்று ஆமோதிப்பதற்குள் அழுக்குத் திரைக்குப் பின்னுலிருந்து கிழிந்த வேஷ்டியும் சட்டையும் அணிந்த ஒரு மனிதன் தோன்றினுன். அவன் தோன்றியதும் அறையில் நிலவிய அமைதி குறைந்தது. தோற்றத்தில் ஒன்றும் விசேஷமில்லை. அவன் நடுத்தர உயரமாய், கறுப்பாய் இருந்தான். விசித்திரம் என்னவென்ருல் அவன் பேசிய முறையே யாகும்.

"ஆதாப் அர்ஸ்; நமஸ்தே; பந்தகி. தயவு செய்து அமருங்கள். உங்களைப் போன்ற கனவான்களை எளியவனுகிய நான் எப்படி உபசரிப்பது? என்ன சாப்பிடுகிறீகள்? விஸ்கியா, பிராந்தியா அல்லது ஜின்னு? இல்லாவிடில் பீர் சாப்பிடுகிறீர்களா? ஓ, நீங்கள் ஒருவரும் குடிப்பதில்லையோ? பரவாயில்லை. ஏதேனும் சூடாக வேணுமா? அல்லது குளிர்ச்சியாய்ச் சாப்பிடுகிறீர்களா? டீ வேண்டுமா? அல்லது கலரா?—ஆமாம், உஷ்ணமாகத்தான் இருக்கிறது; ஜில்லென்ற கலர்தான் நல்லது. அடேய் மசீதா......!"

அடுத்த நிமிஷம் துக்கம் நிறைந்த கண் படைத்த கிழவன் தோன்றினுன். "ஐந்து கிளாஸில் நிறைய ஐஸ் போட்டுக் கலர் வாங்கிக் கொண்டுவா!" என்று கட்டளையிட்ட பின்னர், எங்களிடம் அவன் தன் போக்கிலே பேசத் தொடங்கினுன். "நீங்கள் சந்திரா ஆடுவதைப் பார்க்க வந்தீர்களாக்கும்! அவள் இப்பொழுது தான் போலீஸ் கிளப்பிலிருந்து திரும்பி வந்திருக்கிருள். போலீஸ் கமிஷனர் துரையே அவளைப் பாராட்டி மாலை சூட்டினுர். முழுசாய் மூன்று மணி நேரம் அவள் ஆட நேர்ந்தது. கடைசியில் நான் மிகவும் சிரமப்பட்டு அவளை அழைத்து வர வேண்டியிருந்தது. அவளை லேசில் விடுவோம் என்கிருர்களா? எல்லோரும் அவள் நாட்டியத்தைப் பார்த்துச் சொக்கிப்போய் விட்டார்கள். சென்ற வாரம் அவள் ரேடியோ கிளப்பில் ஆடிய

பொழுது ஒரு அமெரிக்க டைரெக்டர்—நேரே 'ஹாலிவுட்'டில் இருந்து வந்தவர்—அவளைக் கண்டதும் ஒப்பந்தம் செய்துகொள்ள முயன்ருர். எல்லாம் இந்தக் கப்பல் தகராறுதான்! இல்லாவிட்டால் சந்திரா இப்பொழுது 'ஹாலிவுட்'டில் இருப்பாள். இதை வீணுக நான் கூறி உங்களைத் தொந்தரவு செய்கிறேனே! இந்தச் செய்தியெல்லாம் பத்திரிகைகளில் வெளி வந்ததுதானே! நீங்கள் படித்திருப்பீர்கள் அல்லவா?"

நான் பத்திரிகை ஆசாமி என்று தெரிந்து கொண்டுதாஞே என்னவோ, இந்தக் கேள்வியை அவன் என்னை நோக்கிக் கேட்டான். "ஆமாம், எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தது" என்று நான் புளுகினேன்.

அப்பொழுது ஒரு கொழுத்த சேட், குடி மயக்கத்துடன் இரண்டு தோழர்கள் சகிதம் வந்து சேர்ந்தான். தன் விரலால் தரையைச் சுட்டிக் காட்டி, "சந்திரா இங்குதான் வசிக்கிருளா?" என்று அவன் கேட்டான். நாங்கள் "ஆமாம்" என்ரேம்.

உடனே எங்களுடன் பேசிக்கொண்டிருந்தவன் எங்களை விட்டு விட்டுக் கிளம்பிவிட்டான். "வாருங்கோ, சேட் சாகிப்! நமஸ்தே; பந்தகி. உங்களை யொத்தவர்கள் வருகைக்குச் சந்திரா பாக்யம் செய்திருக்க வேண்டும். இதோ ஒரு நிமிஷத்தில் வந்துவிடுவாள். அரசாங்க மாளிகையில் அவளை ஆடுவதற்கு அழைத்திருந்தார்கள். அங்கு போய்விட்டு இப்பொழுதுதான் அவள் திரும்பி வந்தாள். அதிகாரிகளின் அழைப்பை நாம் நிராகரிக்க முடியுமா? அங்கே கவர்னர் துரையே தம் கைப்பட அவளுக்கு மாலை சூட்டினுர்......" என்று அவர்களிடம் அளக்க ஆரம்பித்துவிட்டான். அவன் பேசும் முறை எங்களைத் திகைக்கவைத்தது. தாவூத், என் காதில் மெதுவாக "இதோ பார், அடுத்தாற்போல் எவனுவது வந்தால் சக்கர

வர்த்தியே சந்திராவுக்கு மாலை யிட்டார் என்பான் அவன்!'' என்றான்.

அதே சமயத்தில் திரை ஒரு புறம் விலகியது. மெல்லிய முறுக்கு மீசை படைத்த உயரமான ஒரு மனிதனைத் தொடர்ந்து சந்திரா வந்தாள்.

நான் சந்திராவைப் பற்றி அழகின் சிகரம், இளமையின் எழில், அற்புத ஜோதி என்று இவ்வாறெல்லாம் வருணிப்பேன் என்று நினைத்தால் நீங்கள் ஏமாற வேண்டியதுதான். அவளை அழகி என்று கூறுவதற்கில்லை. அவள் முகத்தில் பூசிக் கொண்டிருந்த பவுடர்களும் மற்ற அலங்காரங்களும் மினுக்கிட்டும்கூட அவளை அழகியாக்க முடியவில்லை. ஏதோ சாதாரணத் தோற்றமுடையவளாகத்தான் இருந்தாள். அவள் மூக்கு ஒரு பக்கம் சாய்ந்திருந்தது. அவள் உருவத்திலும் பார்வையிலும் மென்மை காண்பதற்குப் பதில் ஒருவகை முரட்டுத் தோற்றமே தென்பட்டது. அவளது கண்களில் இளமையின் தூய்மைக்குப் பதிலாக, அவளது வாழ்க்கையின் காரணமாக எழுந்த கர்மவிகாரம் இருந்தது. இருந்தும் அவளது வளைவுகளில் இளமையின் கட்டு இருந்தது. அவளுக்கு வயது இருபதுக்குமேல் இராது. எனினும் புழுக்கமான அறையில் அளவுக்குமீறி விரைவில் வளர்ந்த செடிபோல் இருந்தாள் அவள். அவளது நடையிலும் பார்வையிலும் இளமையின் மிடுக்கு இருந்தது.

அனைவரையும் வணங்கிய பின்னர் சந்திரா சிரமப்பட்டு வரவழைத்துக்கொண்ட செயற்கை நாணத்துடன் தரையில் உட்கார்ந்தாள். உடனே சேட்டுக்கும் உணர்ச்சி தோன்றியது. தனது குடிகாரக் கண்களால் அவளை விழுங்குவதுபோல் பார்த்துவிட்டு ''சந்திராவா நீ? இல்லவே இல்லை. ஒருக்காலும் இருக்காது'' என்றான்.

தனது செயற்கை நாணத்தை விட்டு ஒரு

போலிச் சிரிப்புச் சிரித்தாள். அந்த அரட்டை மனிதனும் உடனே தொடங்கிவிட்டான்.

"சேட் சாகிப், நீங்கள் நல்ல ஹாஸ்யப் பேர் வழிதான். பலரும் இப்படித்தான்; இவளை யாரென்றே முதலில் புரிந்துகொள்வதில்லை. பதினாறு வயதில் இவ்வளவு அற்புதமாக ஆடமுடியுமா என்பது எல்லோருக்கும் சந்தேகம். இன்றைக்குப் பாருங்கள். சாக்ஷாத் போலீஸ் கமிஷனர்...இல்லை, இல்லை—கவர்னர் துரை முன்னிலையில் செப்புக்கம்பி முனையில் ஆடிக்காட்டினாள். எல்லோரும் அப்படியே திகைத்துப் போய்விட்டார்கள்!"

"என்ன? கம்பியிலா டான்ஸ்? பிரமாதம்!" என்று ஆச்சரியப்பட்டான் சேட்.

"இதெல்லாம் என்ன சேட் சாகிப்? அவளை வாள் முனையிலே ஆடச் சொல்லுகிறேன் பாருங்கள்" என்று கூறி உரத்த குரலில் "மசீதா டேய் மசீதா! அந்த வாளைக் கொஞ்சம் கொண்டுவா!" என்றான்.

அவ் வேலையாள், வாளைக் கொண்டுவரும் பொழுது அவன் முகத்தோற்றம் வருத்தமுள்ளதாக இருந்தது. உறையிலிருந்து மின்னுகின்ற வாள் வெளிவந்ததும் சந்திராவை அனைவரும் ஆச்சரியத்துடனும் பயத்துடனும் நோக்கினர். "இந்தக் கூரிய கத்தியின் முனையிலே இப்பெண்ணால் நிச்சயமாக ஆடமுடியுமா?" என்ற ஐயம் அவர்களுக்குத் தோன்றியது.

"என்றைக்காவது ஒரு நாள் உங்கள் முன்னால் இவ்வாளின்மேல் நடனம் ஆடிக்காட்டுவாள். பார்க்கத்தான் போகிறீர்கள்!" என்று கூறி வாளை உறையிலிட்டு "இன்றைக்கு முடியாது. அதற்கென்று விசேஷமாக ஒரு நாள் ஏற்படும். வாளின் முனையில் நடனமாடுவது என்றால் லேசான விஷயமா? பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் இவ்வைபவத்திற்கு அழைக்கப்படுவார்கள்

ஏன்? கவர்னர் துரை—இல்லை—போலீஸ் கமிஷனர் துரையே விஜயம் செய்தாலும் செய்ய லாம்'' என்று கூறி மசீதாவை நோக்கி ''இந்தா, இதை என் பெட்டிக்குள் கொண்டுபோய் வை'' என்முன்.

எக் காரணம் பற்றியோ அக் கிழ வேலைக் காரன் முகத்தை மீண்டும் நோக்கினேன். அவன் கண்களில் துக்கம் இன்னும் பிரதிபலித்துக் கொண்டுதானிருந்தது. ஆனால் அவனது கண் களில் வெட்டப்போகும் ஆட்டைக் கடைசி நேரத் தில் கொல்லாமல், கொல்லும் நாளை ஒத்திவைத் தால் அது எப்படிச் சிறிது மகிழுமோ அதுபோல் அவனது முகத்தில் லேசான மகிழ்ச்சி இருந்தது. ஒரு வேளை நான் இவ்விதம் கற்பனை செய்து கொண்டேனே என்னவோ?

அங்கிருந்த அனைவரும் கேட்டுக்கொண்ட தன்பேரில் சந்திரா ஆடத் தொடங்கினாள். உயர் தர நாட்டிய ஞானம் அவளுக்குச் சிறிதும் இல்லை என்பது நன்கு தெரிந்தது. ஆட்டத்தில் ஒரு லளி தமோ, அபிநயத்தில் ஒரு சுகமோ, தாளத்திற் கேற்ற காலடியோ கிடையாது. இருப்பினும் அவள் பிறவியிலேயே ஒரு நாட்டியக்காரி போல் தோன்றினாள். அவளது அங்க அசைவுகள் ஒழுங்காக அமைந்திருந்தன. கண்களில் பாவம் ததும்பியது. அவளது காலடிகள் ஒவ்வொன்றி லும் ஒரு சுருதியும் அதன் அசைவுகளில் தாள சுக மும் இருந்தது. அவளது குரலில் பயிற்சி காணு விடினும் அவ்வளவு மோசமாக இல்லை. பிரபல சினிமாப் பாட்டுகளுக்குச் சிற்றின்ப உணர்ச்சி யுடன் அபிநயம் பிடித்துக் காட்டினாள். பல திரைப்படங்களின் வெற்றிக்கு இத்தகைய சில் லறை உற்சாக நடனங்களே காரணமாகும். இம் மாதிரியான நடனம்தான் ராமகிருஷ்ணனுக்குத் தேவையாக இருந்தது.

''என்ன அபிப்பிராயம்?'' என்று தாவூதைப் பார்த்து ரகசியமாக ராமு கேட்டார்.

"பரவாயில்லை போலிருக்கே!"

"உங்கள் அபிப்பிராயம் என்ன?" இக் கேள்வி என்னை நோக்கிக் கேட்கப்பட்டது. இம் மாதிரி விஷயங்களில் தாவூத் நிபுணர் என்று கருதியதால் நானும் நல்ல அபிப்பிராயங் கூறினேன்.

நாட்டியம் முடிந்ததும் சந்திரா அனைவருக்கும் வெற்றிலை அளித்தாள். தட்டில் நல்ல தொகை சேர்ந்தது. சேட்டின் அருகில் சென்றதும் அவளுக்குப் பத்து ரூபாய் கிடைத்தது. அவளை அவன் மேலே நகரவொட்டாமல் கையால் பிடித்திழுத்துத் தன் அருகிலே உட்காரவைத்துக் கொண்டான். அது அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. அக்குடிகாரனும் அதைப் புரிந்துகொண்டான். "ஆமாம், நீ நல்ல வாலிபப் பெண். அதனால் என்னையொத்த கிழட்டு ரசிகர்களிடம் வரமாட்டாய். ஆனால் நீயும் ஒரு நாளைக்கு, தோல் சுருங்கிய கிழவியாவாய் என்பதை மறந்து விடாதே!" என்றான். பின்னர் குடி மயக்கத்தில் சிரித்துக்கொண்டே "நீ சந்திராவா? இல்லவே இல்லை! நீ சந்திராவே அல்ல!" என்று ஆரம்பித்தான்.

விஷயம் முற்றிச் சில்லறைச் சச்சரவுகள் தோன்றிவிடுமோ என்று எனக்குப் பயம். இத் தகைய தொல்லைகளிலிருந்து எப்பொழுதும் எனக்கு ஒதுங்கி இருக்கவே விருப்பம். ஆனால் சந்திரா கூறிய பதில்தான் எனக்கு ஆச்சரியமுண்டாக்கியது. "சேட் சாகிப், பிறந்தவர்களெல்லாம் ஒரு நாளைக்கு இறக்க வேண்டியதுதான். வாலிபர்களெல்லாம் கிழவர்களாக வேண்டியதுதான். நிச்சயமாக நடக்கப்போகிற ஒரு விஷயத்தைப்பற்றிக் கவலைப்பட்டு ஆவதென்ன?" என்றாள். இவ்வாறு கூறியதும் அவளது கண்களில் ஒரு சோகமும், குரலில் ஒரு வெறுப்பும் தென்பட்டது பின்னர் சேட் என் பக்கம் திரும்பி "நீங்கள் என்ன சொல்கிறீர்கள் மிஸ்டர்?"

என்றான். நான் பதிலளிக்க விரும்பவில்லை. ஆயினும் அவன் திரும்பத் திரும்ப, "என்ன சொல்கிறீர்கள் மிஸ்டர்?" என்று கேட்டுக் கொண்டே இருந்தான்.

"நீங்கள் சொல்வது சரிதான், சேட் சாகிப்! ஓடிக்கொண்டிருக்கும் யந்திரத்தில் யாரும் கையை விட்டால் கையைத் துண்டித்துவிடும் என்பதை எதிர்பார்க்க வேண்டியதுதானே!" என்று நானும் சொல்லி வைத்தேன்.

"ஆமாம் நீங்கள் கூறுவது ரொம்ப உண்மை" என்ற சந்திராவின குரல் எனக்கு ஆச்சர்யத்தை அளித்தது.

சேட் எழுந்து அறைக்குள்ளே அரட்டை மனிதனிடம் ஏதோ பேசி முடிக்கச் சென்றான். கூரிய மீசை படைத்த வாலிபனுக்கு அப்பொழுது தான் சந்தர்ப்பம் கிடைத்தது. சந்திராவிடம் ராம கிருஷ்ணனைச் சுட்டிக் காட்டி "சந்திரா, இவர் யார் என்று தெரிகிறதா? இவர்தான் நமது புகழ் பெற்ற பட டைரெக்டர் ராமகிருஷ்ணன்" என்றான்.

அந்த வழிகாட்டியிடம் நாங்கள் ஸ்டுடியோவி லிருந்து வந்தோம் என்று தெரிவிக்க வேண்டா மென்று கூறியிருந்தும் அவன் ராமுவைச் சந்தி யில் இழுந்து விட்டுவிட்டான். அதற்குமேல் ராமு எங்கள் அனைவரையும் அறிமுகம் செய்துவைத் தார். மற்றவர்களின் கவனம் தன்னிடமிருந்து என்பக்கம் திரும்புவதற்காக "இவருடைய கட் டுரைகள், கதைகளைத்தான் நீங்கள் படித்திருப்பீர் களே?" என்று கூறினார். அதற்கேற்றாற்போல் சந்திராவும் "நிச்சயமாக; அவர் எழுதியதைப் படிக்காதவர்கள் யார்?" என்று ஒரு பச்சைப் புளு கைச் சொன்னாள். பின்னர் கொஞ்சிக்கொண்டே "என்னைப்பற்றி ஒரு கதை எழுதமாட்டீர்களா?" என்றாள்.

ஆனால் அந்த வாலிபன் தன்னை அனைவரும் மதிக்கவேண்டுமென எண்ணி "என்னை அறிமுகப்

படுத்திக்கொள்ள வேண்டாமா? என்னை அமிர்த தாக்கூர் என்று அழைப்பார்கள். உங்களைப் போலவே நானும் ஐக்கிய மாகாண வாசிதான். அதோடு நானும் உங்கள் தொழிலில்தான் ஈடுபட்டிருக்கிறேன்'' என்றான்.

''ஒஹோ! அப்படியா.........நீங்களும்......'' என்று ராமு ஒரு சகா டைரெக்டரை இத்தகைய சூழ்நிலையில் காண நேர்ந்ததை எண்ணிச் சங்கடப்பட்டுக்கொண்டார்.

''ஆமாம்; நானும ஒரு டைரெக்டர்தான். எனது முதல் படத்திற்கு இப்பொழுதுதான் சீனரியோ எழுதுகிறேன். உங்களுக்கு நேரமிருந்தால் கொஞ்சம் வாசித்துக் காட்டி உங்கள் யோசனைகளைக் கேட்க விரும்புகிறேன்'' என்றான்.

''நீங்கள் எந்த ஸ்டுடியோவில் வேலை செய்கிறீர்கள்?''

''பொதுவாக நான் பல கம்பெனிகளில் வேலை செய்தேன். பாம்பே டாக்கீஸ், பிரபாத், நியூ தியேட்டர்ஸ், பிரகாஷ் இவற்றிலெல்லாம் இருந்திருக்கிறேன். பின்னர் கொஞ்ச காலம் மோஹனிலும் இருந்தேன். ஆனால் இப்பொழுது இந்தக் கதையை லைசென்சுக்காக விண்ணப்பம் செய்துகொண்டிருக்கும் ஒரு புதுக் கம்பெனிக்காக டைரெக்ட் செய்யப் போகிறேன்.''

இதுதான் சாக்கென ஷாக்கூரும் வேடிக்கையாக ''நீங்கள் எந்தப் பாகத்தில் நடிக்கப் போகிறீர்கள்? எங்களையும் மறந்துவிடாதீர்கள்?'' என்றார்.

''ஏன்? சந்திராதான் கதாநாயகி. கதாநாயகனுகப் பிரிதிவிராஜை அமர்த்துவோமா அல்லது மோதிலாலை அமர்த்துவோமா அல்லது வேறு யாராவது ஒரு புதிய ஆசாமியைப் பிடிப்போமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்.''

ஷாக்கூர் எப்பொழுதுமே அதிகம் பேசுவதில்லை. ஆனால் பேசினலோ கத்தி வெட்டு மாதிரி தான் இருக்கும். ''ஏன்? நீங்களே கதாநாயகனுக

இருக்கலாமே? நன்ருய்ப் பொருத்தமாக இருக் கும்'' என்ருர்.

ஷாக்கூரும் மேலும் கிண்டல் விட்டிருப்பார். ஆனல் அதற்குள் சேட் அந்த அரட்டையுடன் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

“அம்மா சந்திரா, சேட் சாகிப்பை வணங்கு. அவர் இதோ போகப் போகிருர்.''

“சந்திரா, நான் இப்பொழுது போய்விட்டு நாளை இரவு வருகிறேன். கண்ணே, என்னை மறக்க மாட்டாயே!'' என்று சொத்துரிமை பாராட்டி அவளது கன்னங்களைக் கிள்ளிவிட்டு நகர்ந்தான் சேட்.

“மசீதா அப்பா, கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள்'' என்று சந்திரா அழைத் தாள். 'அப்பா' என்றதில் எத்தனை அன்பு பொதிந்திருந்தது! சோகக் கண்கள் கொண்ட கிழவன் வந்து சென்ருனே இல்லையோ, அரட்டை மீண்டும் தொடங்கிவிட்டான். “இவன் எங்கள் பழைய வேலையாள். சந்திரா குழந்தையாக இருந்த காலந்தொட்டு அவளை வளர்த்து வருகிருன். அதனுல்தான் சந்திரா அவனை 'மசீதா அப்பா' என்று அழைக்கிருள்'' என்று கூறி விஷயத்தை மாற்றுவதற்காக “சரி டைரெக்டர் சாகிப், உங்கள் உத்தரவு என்னவோ ?''

ராமகிருஷ்ணன் சுற்றி வளைக்காமல் நேரா கவே “உன் மகள் சினிமாவில் நாட்டியமாட வேண் டும். என்ன சொல்கிருய் ?'' என்று கேட்டார்.

“அவளுக்கும் நடிப்பு என்ருல் மிகப் பிரியம். ஒரு மாதிரிக்காக உதவிக் கதாநாயகியாக 'ஈரானி ஹூர்' என்ற படத்திலும் நடித்திருக்கிருள். ஆனுல் இப்பொழுது ஏதாவது கதாநாயகி பாகம் கிடைத்தால்தான் அனுமதிப்பது என்று முடிவு செய்திருக்கிறேன்.''

“கதாநாயகி பாகமா ?'' என்று கேட்ட ராம கிருஷ்ணன் சிறிது நேரம் மௌனம் சாதித்தார்.

"ஆமாம், அப்படித்தான் முடிவு செய்திருக்கிறேன்" என்று கூறியவன், எங்கே அதனை நம்பி வேண்டாமென்று போய்விடுவார்களோ எனப் பயந்து "அதெல்லாம் மற்றவர்களுக்கு. ஆனால் உங்களை யொத்த டைரெக்டர்கள் விஷயத்தில் அப்படி அல்ல. உங்கள் படத்தில் எந்தப் பாகம் கிடைத்தாலும் அவள் அதிர்ஷ்டசாலியல்லவா ?" என்ருன்.

"சரி, ஏதோ பார்ப்போம், புரடக்ஷன் இலாகா மானேஜரிடம் கூறி ஏதாவது நடிப்புப் பாகம் கொடுக்க முடியுமா என்று பார்க்கிறேன்" என்ருர் ராமகிருஷ்ணன்.

பேரம் பேசுவதில் அவருக்கு அதிகப் பழக்கமில்லை. ஆகவே பேரம் பேச வேண்டிய சந்தர்ப்பம் வந்தால் அவர் தமது உதவியாளரிடம் விட்டுவிடுவது வழக்கம்.

இன்னும் என் மனதில் அக்காட்சி இன்று நடந்ததுபோல் நன்ருக ஞாபகம் இருக்கிறது. நாங்கள் எழுந்து எங்கள் 'பாதுகை'களைத் தேடிக்கொண்டிருக்கும் பொழுது, சுமார் இருபது அல்லது இருபத்திரண்டு வயதுள்ள ஒரு வாலிபப் பூக்காரன் பூச் செண்டுகளும், கதம்பங்களும், தலையில் பின்னுவதற்காகச் சந்திரப் பிறை போன்ற 'வேணி'களும் நிறைந்த கூடையைத் தலையில் சுமந்து வந்தான். சந்திரா திண்டில் சாய்ந்துகொண்டு கால்களை ஒய்யாரமாக நீட்டிக்கொண்டிருந்தாள். அந்தப் பூக்காரன் அவளேயே சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு உல்லாசமாகப் பாடத் தொடங்கினுன்.

'பாபு, பூல்வாலா ஆயா
ஹார் ஔர் கஜ்ரே லாயா'

"எசமான், பூக்காரன் வந்திருக்கிறேன். பூக்களும் மாலையும் கொண்டு வந்திருக்கிறேன்" என்னும் பொருளுடைய பாட்டு அது.

சந்திரா அவனை நோக்கி "ஓடிப்போ, உன் பூ ஒன்றும் எங்களுக்கு வேண்டாம்" என்ருள்.

"உங்கள் முடியில் சூட ஒரு 'வேணி' மட்டு மாவது வாங்குங்கள்."

"நான் ஏற்கெனவே வாங்கி இருப்பது உன் கண்ணிற் படவில்லையா?" என்று தனது பள பளத்த கூந்தலில் வட்டப் பிறை போன்று சுற் றப்பட்டிருந்த மல்லிகைப் பூக்களைக் காட்டினுள் சந்திரா.

"அப்படியென்ருல் உங்கள் காலுக்காவது ஒரு 'வேணி' எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிக் கூடையைத் தரையில் இறக்கி வைத்தான். பின்னர் மிக உயர்ந்த 'வேணி' யொன்றைக் கையில் எடுத்தான். அவன் என்ன செய்யப் போகிருன் என்று சந்திரா யோசிப்பதற்கு முன்ன தாகவே, அவளது வலது காலைச் சுற்றிச் சதங்கை போல் கட்டிவிட்டான் அந்தப் பூக்காரன். நாட் டியத்திற்கேற்ற அவளுடைய மெல்லிய இனிய பாதங்களை அம்மலர்கள் மேலும் அழகு செய்து எடுத்துக்காட்டின. அந்தப் பையனின் கபடமற்ற செயல் அனைவருக்கும் சிரிப்பை உண்டாக்கிவிட் டது. "டேய், உன் பணத்தையாவது வாங்கிக் கொண்டு போ" என்று சந்திரா கூப்பிடுவதை யும் லட்சியம் செய்யாமல் வெட்கத்துடன் போய் விட்டான்.

நாங்கள் வெளியே வந்து வழிகாட்டிக்கு ஐந்து ரூபாய் கொடுத்து அவனை அனுப்பிவிட் டோம். அன்றிரவு நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி அந்யோன்ய சிநேகிதர்கள் என்ற முறையில் நாங்கள் சர்ச்சை செய்தோம்.

"பாருங்கள், இந்தப் பெண்ணுக்கு டாபர் அப்பன், மசீதா அப்பன், டைரெக்டர் அப்பன் என்று குறைந்தது மூன்று அப்பன்களாவது இருப்பார்கள் போலிருக்கிறதே."

"இந்த மூன்று அப்பன்களுமே......" என்று துடுக்காகத் தாஹூத் பேசத் தொடங்கினுர்.

"அது கிடக்கட்டும். அவள் அரட்டையின் மகளா அல்லது அந்தச் சோக வேலைக்காரனின் மகளா? யாருடைய பெண் என்று நினைக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"விபசாரியின் மகள் எப்பொழுதுமே தன் தாயின் மகள் மட்டும்தான்" என்று தனது தத்துவத்தை ஷாக்கூர் அவிழ்த்து விட்டார்.

"என் அபிப்பிராயம் என்னவென்ருல் அவள் மசீதாவின் மகளாகத்தான் இருக்க வேண்டும். அவன் வாலிப காலத்தில் சந்திராவின் தாய்க்கு வேலையாளாகவும் ஆசைநாயகனுகவும் இருந்திருக்லாம்."

"அப்படியானுல் அந்த அரட்டைக்கு அவள் எப்படி உறவாளுள்?" என்று, துப்பறியும் கதைகளிலே கொலைகாரனைத் தேடுவதுபோல் நாங்கள் ஆராய்ந்து கொண்டிருந்தோம்.

"சந்திராவின் வருமானத்தில் பங்கு பெறுவதற்காகச் சந்திராவின் தாயை ஒப்புக்கு அவன் கலியாணம் செய்திருக்கலாம்"

"அந்தப் போலி டைரெக்டர்?"

"அவன் ஒரு சினிமா லோலனுக இருக்கக் கூடும். எதிர்காலக் கதாநாயகி ஒருத்தியின் வாலைப் பிடித்தால் 'டைரெக்டர் சான்ஸ்' கிடைக்கலாமென்று எண்ணிக் கொண்டிருக்கிருன் போலிருக்கிறது."

"நம் தொழிலில் இப்படி முன்னுக்கு வந்தவர்கள் எத்தனையோ பேர் இல்லையா? அரட்டை அவளுக்குக் கதாநாயகி பாத்திரம் ஏற்பாடு செய்து விடலாமென்று எண்ணித் தாகூரை உற்சாகப் படுத்தி வருகிருன் போலிருக்கிறது. பணம் பண்ணுவதற்கு ஏதாவது ஒரு வழி வேண்டாமா?" என்றேன் நான்.

அன்று இரவு முழுவதும் சந்திராவின் வாகான பாதத்தைச் சுற்றிச் சூட்டப்பட்ட மலர்ச்சரங்களின் சித்திரம் என் மனதை வாட்டிக் கொண்டிருந்தது.

பூக்களும் பாதமும்! பாதமும் பூக்களும்! பாத கமலத்திற்குப் பூக்கள்! பாதத்திற்கு மலர்கள்! அழகான அற்புதமான சின்னம்! ஆனால் அது எதன் சின்னம்? பல மணி நேரம் யோசித்தும இந்தப் புதிரை என்னால் விடுவிக்க முடியவில்லை.

மறுநாள் காலை நான் எழுந்தபொழுது முதல் நாள் இரவின் நிகழ்ச்சிகள் நூறாண்டுகள் கழிந்த நிகழ்ச்சிகள் போல் தோன்றின. அதன் பிறகு தினசரி வேலையின் மும்முரத்தில் சந்திராவைப் பற்றியோ அல்லது அந்தப் பூக்காரனைப் பற்றியோ மீண்டும் நினைக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்படியாகப் பல மாதங்கள் கழிந்தன.

கதை இத்துடன் முடிந்துவிடவில்லை. உண்மையில் கதையே இப்போதுதான் ஆரம்பமாகிறது. ராமகிருஷ்ணன் எடுத்த படத்தில் சந்திரா நடித்தாள். அவளுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக்கப்பட்டது. படம் வெளிவந்த பிறகுதான் நான் திரையில் அவளைப் பார்த்தேன். படத்தில் சந்திராவின் அங்க வெளித் தோற்றமும் கிளர்ச்சியூட்டும் உடல் அசைவுகளுந்தான் பெரும்பாலும் காட்டப்பட்டிருந்தன. அக்கட்டத்தைப் பொது ஜனங்கள் மிகவும் ரசித்தார்கள் என்றும் அதன் காரணமாக இதைப் போன்ற நடனங்கள் ஆடும்படி வேறு பல பிலிம் கம்பெனியார் அவளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர் என்றும் பின்னால் அறிந்தேன். ராமகிருஷ்ணனைத் தன் வீட்டிற்கு வரும்படி அரட்டை பலமுறை அழைத்தான். ஆனால் ஒவ்வொரு முறையும் ராமகிருஷ்ணன் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி விடுவார். என்னைப் பொறுத்த வரையில் சந்திராவை சந்திக்கும் சந்தர்ப்பமே கிட்டவில்லை. ஒருநாள் டெலிபோன் மணியடித்தது. அதன் மூலம் பழக்கமான குரல் கேட்கும்வரை எனக்கு அவளைப்பற்றிய ஞாபகமில்லை.

"ஹல்லோ, ஹல்லோ நான்தான்—ராமகிருஷ்ணன்."

"ராமகிருஷ்ணனு ? நமஸ்காரம். என்ன விசேஷம் ?"

"அந்தி நேரத்தில் உங்களுக்கு ஒய்வு இருந்தால் இந்தப் பக்கம் கொஞ்சம் வந்துவிட்டுப் போங்கள். சில விஷயங்களைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்க வேண்டியிருக்கிறது !"

நான் அவர் இருக்கைக்குச் சென்ற பொழுது அவர் தனியாகவே இருந்தார். சிறிது நேரம் உலக விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த பின்னர், "இதோ பாருங்கள். எனது அடுத்த படத்துக்கு ஒரு கதை வேண்டும்" என்ருர்.

"அப்படியென்ருல் ஸ்ரீமான் தாவேயிடம் போவதுதானே ? அவருக்கு வேலை அதிகமென்ருல், மாதோக், திவான்ஷாரார், அகாஜானி, கமால் அம்ரோஹி என்று எத்தனையோ பேர் இருக்கிருர்களே ! சிக்கனமாக இருக்க வேண்டுமென்று எண்ணிஞல் ஒரு சுருக்கெழுத்துக்காரரை அமர்த்திக் கொண்டு மாலை 'மெட்ரோ' பட மாளிகைக்கு அழைத்துச் செல்லுங்கள். அதில் நடக்கும் 'பேதிங் பியூட்டிஸ்' என்ற ஆங்கிலப் படத்தின் வசனத்தை அப்படியே குறித்துக்கொண்டு வந்து பின்னுல் ஹிந்துஸ்தானியாக்கிக் கொண்டால் போகிறது ?" என்றேன்.

"உமது தமாஷெல்லாம் அப்புறம் இருக்கட்டும். எனக்குப் புதிதாக முற்றிலும் வேறுபட்டதாக ஒரு கதை வேண்டும். எனக்கு இப்பொழுது பழைய மோஸ்தர் கீழ்த்தரப் படங்களை எடுத்து எடுத்துச் சலித்துவிட்டது. வாழ்க்கையோடு ஒன்றிய ஒரு கதைதான் எனக்கு இப்பொழுது தேவை" என்ருர் ராமகிருஷ்ணன்.

எல்லோருடைய மனதிலும் ஒரு குட்டிச்சாத்தான் இருந்துகொண்டு எப்பொழுதாவது ஓரோர் சமயத்தில் மனோரதத்தைத் தட்டி எழுப்பிக்

கொண்டிருக்கிறது. இந்தச் சாத்தானின் பெயர் 'ஆவேசம்' என்பதாகும். இந்த அற்புதப் பேர்வழி ஏதாவது பொருளாதாரத் தூண்டுதல் ஏற்பட்டா லொழிய நெடுந்தூக்கம் போடுவான் என்பது என் அனுபவம். எது எப்படியாயினும் அந்நாட்களில் எனது பொருளாதார நிலைமையும் மோசமாகவே இருந்தது. யுத்த காலத்திற்கு முன்னுள்ள நூற் றெண்பது ரூபாய் சம்பளம் யுத்தகால விலைவாசிக ளிருக்கும் நிலைமையில் எப்படிப் போதும்? படங் களுக்குக் கதை யெழுதிக் கொடுத்தால் சில ஆயி ரம் ரூபாய்கள் கிட்டலாமல்லவா? ராமு என்னிடம் கதை கேட்ட பொழுது எனது மூளையில் அமர்ந் திருந்த குட்டிச்சாத்தான், தன்னுடைய பழக்கமான பெண் குரலில் மெதுவாக "என்னைப்பற்றி ஒரு கதை எழுதமாட்டீர்களா?" என்றது.

"சரி அப்படியானால் நான் கூறப்போகும் வாழ்க்கையோடு ஒட்டிய கதையைக் கேளுங் கள்" என்று ராமகிருஷ்ணனிடம் கூறத் தொடங் கினேன்.

"ஒரு காலத்திலே, பாஞ்சாலத்திலுள்ள ஒரு நகரிலே ஆடலிலும் பாடலிலும் முக வெட்டிலும், அம்மாகாணம் முழுதும் பிரசித்திபெற்றிருந்த ஒரு கணிகை வாழ்ந்து வந்தாள்......பார்த்தீர்களா? வேண்டிய பாட்டுகளும், நாட்டியங்களும் கதையில் சேர்ப்பதற்குத் தகுந்தாற்போல் செய்திருக் கிறேன்......அது கிடக்கட்டும். அவளுக்கு ஒரு பெண் பிறந்தது. வாழ்க்கை முழுதும் ஸ்திரீ லோலர்களிடம் இருந்து அல்லலுற்ற அவள், தனது தொழிலின் கேவலத்தை எண்ணித் தன் மகளை இத்தீய சூழ்நிலையிலிருந்து ஒதுக்கி வளர்க்க விரும்பினாள். ஆகவே அவள் தன் மகளைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்தாள். அவளும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் படித்து வளர்ந்து வரலானாள். தனது மகளுக்கு உரிய அந்தஸ்தும் தகுந்த வரனும் கிட்டவேண்டுமென எண்ணி அப்

பெண்ணின் தாய், தொழிலை விட்டுவிட்டுத் தன்னை விரும்பி நாடி வந்தவர்களில் ஒருவனை மணந்து கொண்டாள். அவனோ பசுத்தோல் போர்த்த புலி. சினிமாக்களில் வரும் 'வில்லன்' கள் போல, அவன் கணிகையின் பெண்ணைக் கொண்டு நல்ல பணம் தட்டலாமெனத் திட்டமிட்டான். எனவே, அவன் அவளைப் பம்பாய்க்கு அழைத்துப் போவதென்று முடிவு செய்தான். ஆனால் அதற்குள் அப்பெண் ஒரு பூக்காரனை உண்மையாகவே காதலிக்கத் தொடங்கியதால் அவனது திட்டங்களுக்குத் தடை ஏற்பட்டது......"

"அந்தக் கதையின் தலைப்பு 'சந்திரா' என்பது தானே?" என்று சிரித்துக் கொண்டே ராமகிருஷ்ணன் என்னிடம் கேட்டார்.

"இல்லை; சந்திரா அல்ல. அதன் பெயர் 'பாத கமலம்'!"

"சரி சொல்லுங்கள்."

"ஆகவே அந்தப் பெண் நாட்டியக்காரியாகவும் விலை மாதாகவும் வாழும் தனது கீழ்த்தரமான வாழ்க்கையை விடுத்து, பூக்காரனை மணந்து எளிய வாழ்க்கை நடத்தவும் தீர்மானித்தாள்...... இதனை அறிந்ததும் அவளது இரண்டாவது தகப்பனுக்கு ஆத்திரமாக இருந்தது. தனது இந்த ஒரே வகை வருமானத்தை அவன் இழக்க விரும்புவானா? அப்பெண்ணிடம் கெஞ்சினான், மன்றாடினான், பயமுறுத்தினான். ஆசை வார்த்தைகளும் கூறிப் பார்த்தான். அவள் ஒன்றுக்கும் அசையவில்லை. அதன் பேரில் அவன் அவளை ஒரு அறையில் போட்டுப் பூட்டினான். அதனால் அவளால் தன் காதலனைப் பார்க்க முடியவில்லை. தனது தாயின் மூலம் அவனுக்குச் செய்தி அனுப்பினாள். அன்று இரவு அவனுடன் ஓடிவிடத் திட்டமிட்டிருந்தாள். எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. கடைசி நேரத்தில் அவளது இரண்டாந் தந்தை எப்படியோ

விஷயத்தைத் தெரிந்து கொண்டு விட்டான். அப்புறம்......

"அப்புறம் என்ன நடந்தது?...என்ன நடந்தது அப்புறம்?...சரி பார்ப்போம்...எனக்கு இன்னுந் தெரியவில்லை. ஒருக்கால் உங்களுக்கு நான் நாளைக் கூறலாம் என நினைக்கிறேன்" என்று கூறி விட்டுப் போவதற்கு எழுந்தேன்.

"அற்புதமான கதை, ஜோராய் ஜோடித்து விடுங்கள். நான் அதற்கு ரொக்கமாக நாலாயிரம் ரூபாய் தருகிறேன்."

ரொக்கமாக நாலாயிரம் ரூபாய்! இந்த ஆவலைப் பூர்த்தி செய்ய என்னதான் செய்ய முடியாது? எனக்குள்ள சாதாரண சங்கோஜத்தையும், முன் ஜாக்கிரதையையும் விடுத்து மோட்டாரை எடுத்துக்கொண்டு நான் நேரே அந்தக் கேவலமான சந்திற்குப் பட்டப் பகலிலேயே சென்றேன். மூலையில் ஒரு பூக்கடை இருந்தது. அங்கு ஒரு கிழவன் மாலை கட்டிக்கொண்டிருந்தான். நான் அவனை நோக்கி "இந்தப் பக்கம் ஒரு வாலிபப் பூக்காரன் இருந்தானே. அவன் பெயர் கூட 'பாபு' என்று நினைக்கிறேன். அவன் கடை எங்கிருக்கிறது என்று காட்டுவீர்களா?" என்று கேட்டேன். கிழவன் தனது ஒளி மங்கிய கண்களால் கூர்ந்து பார்த்த பின்னர் மெல்லிய குரலில், "நான் இப்பொழுது உட்கார்ந்திருக்கிறேனே, இந்த இடந்தான் முன்பு அவனது கடையாக இருந்தது. இப்பொழுது அவன் பூக்கார பாபு அல்ல. அவன் 'காதலன் பாபு' ஆகிவிட்டான்" என்று கூறிக் கொண்டே சந்திரா வசித்த வீட்டை நோக்கிப் பார்த்தான்.

'கதைத் தொடரில் ஒரு இணைப்பாவது ஒழுங்காய்ப் பொருந்தியிருக்கிறதே!' என்று எண்ணி, பூக்காரனிடம் பேசிக்கொண்டிருப்பதற்குச் சாக்காக ஒரு செண்டு கட்டும்படி கூறினேன். அவனுக்கும் பாபுவின் காதல் வாழ்க்கையைப் பற்றிக்

கூறுவது இன்பமாகவே இருந்தது. "அந்தச் சூனியக்காரி இதோ இங்குதான் வசிக்கிறாள்! அந்த மூதேவியைச் சந்திரா என்று அழைக்கிறார்கள்" என்றிவ்வாறு என்னிடம் பேசுவதைவிடத் தனக்குள்ளேயே பேசிக்கொள்பவன்போல் பேசலானான்.

"அவள் உண்மையிலேயே சூனியக்காரிதான். அந்தப் பையன்மீது மை போட்டுவிட்டாள். அவன் போயே போய் விட்டான். இந்த மூதேவிகளுக்கெல்லாம் இது ஒரு விளையாட்டு. ஆகவே, அந்தப் பாபு அடியோடு கெட்டே போய்விட்டான். கையிலுள்ள பணத்தை எல்லாம் தொலைத்துவிட்டுக் கடையையும் போக்கிவிட்டுப் பேய்பிடித்தவனைப் போல் அங்கு மிங்குமாக மஜ்னுவைப் போல் திரிகிறான்...இந்தாருங்கள். ராஜகுமாரிக்கு லாயக்கான செண்டு!......விலை எட்டணா ஆகும்... சந்தோஷம்."

அதற்குமேல் நான் அங்கிருப்பது நியாயமில்லை. எனினும் எனக்கு வேண்டிய தகவலை அவனிடமிருந்து தெரிந்து கொண்டேன். அப்புறம் நேரே சந்திரா வீட்டிற்கே சென்றேன். அங்கு போய் மூச்சு வாங்க நீண்ட படிக்கட்டுகளின் வழியே மாடி ஏறினேன். முழுக் கட்டடத்திலும் மயான நிசப்தம் குடிகொண்டு இருந்தது. எல்லோரும்—எல்லாப் பொருள்களுமே—தூங்குவது போலிருந்தன. செத்தே போய்விட்டனவோ? சூரியன் அஸ்தமனமான பிறகுதான் அவ்விடத்தில் உயிர் தோன்றும் போலும்!

கீழ்மூச்சு மேல்மூச்சு வாங்க நான்காவது மாடி ஏறிக் கதவைத் தட்டினேன். சோகக் கண் படைத்த வேலையாள் கதவைத் திறந்தான். முன்னைப் போலவே அவனது கண்களில் துக்கம் நிறைந்திருந்ததுடன் அவன் கண்களில் சோகத்தின் சாயையும் தென்பட்டது.

நான் ஒரு சாதாரணக் கேள்விதான் அவனிடம் கேட்டேன். அவன் சுட்டு விரலை உதட்டில்

வைத்து மெதுவாகப் பேசும்படி சமிக்ஞை செய்தான். "சந்திரா, ஜே. ஜே. ஆஸ்பத்திரியில் மோசமான நிலையில்..." இதற்குமேல் அவனால் பேசி வாக்கியத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

கதவு திறக்கப்பட்டு அந்த அரட்டை வெளியே வந்தான். ஆனால் இம்முறை அவன் தனது அரட்டையை எல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு மௌனமாக இருந்தான். அவனது ஓயாத அரட்டையைவிட அவனது மௌனம் விசித்திரமாக இருந்தது. அவன் மிகவும் மோசமான நிலையில் இருந்தான். பல நாட்களாகத் தூங்கவில்லை போலிருக்கிறது. அவனது கண்கள் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன. எல்லாவற்றையும்விட அவனது பேச்சு முறையிலே ஒரு அற்புத மாறுதல் ஏற்பட்டிருந்தது. பணிவும் பவ்யமும் எங்கோ போய் விட்டன. அப்பொழுது என்னை எரிச்சலுடன் வரவேற்றான். "ஏன் ஐயா, இந்த இடத்தை என்ன என்று நினைத்தாய்? மரியாதையாய் வெளியே போ, தெரிகிறதா?" என்று கூறிவிட்டு வேலைக்காரனை நோக்கி "என்னடா ரகசியம் வேண்டிக் கிடக்கிறது? அயோக்யப் பயலே! போடா உள்ளே!" என்றான். பயந்த எலியைப்போல் வேலைக்காரன் உள்ளே சென்றான். ஆனால் அந்தக் கோவைப்பழக் கண்கள் என்னைப் பார்த்தவண்ணமாகவே இருந்தன. அப்பொழுதுதான் அவன் நன்றாகக் குடித்திருந்தான் என்பதை அறிந்தேன்.

"ஏய், நீ போலீஸ்காரப் பயல். அப்படித்தானே? நீ ஒரு மைலுக்கு அப்பால் வரும்பொழுதே தான் எனக்கு வாசனை அடிக்குமே, இதோ பார், நீ என்னதான் முயன்றாலும் உன்னால் ஒன்றுமே செய்ய முடியாது. நான் போலீஸ் கமிஷனர் துரையின் அத்யந்த சினேகிதன்......"

எனக்கு அவன் சொல்லுவது ஏதாவது புரிந்தால்தானே!

"நீ என்னப்பா கூறுகிறாய்?"

"ஆமாம், ஆமாம். நான் நினைத்தது சரிதான். உன்னால் ஒன்றுமே செய்ய முடியாது. தெரிகிறதா? என் சந்திரா போலீஸ் கிளப்பில் ஆடிய பொழுது கவர்னர் துரையே தனது கைகளால் அவளுக்கு மாலையிட்டார். தெரிகிறதா?" என்று கூறிவிட்டு உடனே முகத்திலடிப்பதுபோல் கதவை ஓங்கிச் சாத்தினான்.

இந்தக் கேலிக்கூத்தின் விவரம் ஒன்றுமே எனக்குப் பிடிபடவில்லை. ஆனால் அன்று மாலை பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரத்தில் ஜே. ஜே. ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். பல வார்டுகளில் விசாரித்த பின்னர்தான் சந்திரா இருந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது. நான் அவள் படுக்கை அருகில் சென்றபொழுது அவள் ஆடாது அசையாது வெள்ளைத் துணியால் போர்த்தப் பட்டுப் படுத்திருப்பதைக் கண்டேன்.

நான் சந்திராவின் படுக்கைக்கு பக்கத்திலிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தேன். அவளது முகத்தை மட்டுமேதான் காண முடிந்தது. அதுவும் வெளுத்துச் சவம் போல் இருந்தது. இறந்துவிட்டாளோ என்று கூடச் சந்தேகித்தேன். எனது காலடி ஓசையைக் கேட்டு அவள் மிகவும் லேசாகக் கண்களைத் திறந்தாள். நான் நாற்காலியை இழுத்து அவள் படுக்கையருகில் போட்டு அமர்ந்தேன். பூச் செண்டு என் கையிலேயே இருந்ததால் அதனைத் தலையணையின்மீது வைத்தேன். அவள் என்னைப் பார்ப்பதற்காக முகத்தைத் திருப்பிய பொழுது அவளது முகம் கிட்டத் தட்டப் பூக்களைத் தொட்டது. அதன் வாசனை அவளது உணர்ச்சியை எழுப்பிவிட்டதுபோலும். அவள் வாயிலிருந்து 'பூக்கள்' என்ற சொல் பெருமூச்சுடன் வெளி வந்தது. கண்களில் நீர் பெருகியது. அதில் துயரமும் துக்கமும் பிணியும் ஒன்றாகக் கலந்திருந்தன. அக் கண்ணீர்!—அவளது முகத்திலிருந்த

பாவச் சின்னத்தையும் போலித்தன்மையையும் கழுவி விட்டன.

"நீங்களா! இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று மெல்லிய குரலில் கேட்டாள். நாலாயிரம் ரூபாய்க்காக நான் விலை பேசியிருந்த அவளது வாழ்க்கைக் கதையின் உச்சநிலையை உணரவே அங்கு வந்திருக்கிறேன் என்று அவளிடம் என்னுல் கூற முடியவில்லை. அவளது வீட்டிற்கு ஏதோ போனபொழுது அவள் அசௌகரியமுற்று ஆஸ்பத்திரியில் இருப்பதாக அறிந்து அவளது உடல் நிலையை விசாரித்துவிட்டுச் செல்லலாமென வந்ததாகக் கூறி வைத்தேன்.

"நீங்கள் மிகவும் அன்புடையவர்" என்று கூறியவள் திடீரென, சம்பந்தா சம்பந்தமில்லாமல் "நீங்கள் கதை எழுதுகிறவர் அல்லவா?" என்ருள்.

நான் பதில் கூறுவதற்கு முன்னுல் அந்த வெள்ளைத் துணியில் ஒரு நிழல் விழுவதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தேன். அங்கே பாபு நிற்பதைக் கண்டேன். பல நாட்கள் தூங்காதவன் போலவும், அழுது வடிந்தவன் போலவும் அவன் காட்சியளித்தான். இந்தக் கதையையும் அவளது காதலையும் தொடங்க வைத்த அந்தப் பாதபூஜைப் பொருளான வேணி அவன் கையில் இருந்தது. எனது பேராசைக்காரச் சாத்தான், "கதையின் உச்சமும் நெருங்கிவிட்டது. சபாஷ்! கையிலே நாலாயிரம் ரூபாய் ரொக்கம்" என்று கூறினேன்.

பாபு நான் அங்கிருப்பதைக்கூட உணரவில்லை என நினைக்கிறேன். அவன் நேரே கட்டிலின் தலைமாட்டருகில் சென்று ஆதரவுடன் சந்தராவை நோக்கி "சந்திரா, நீ இங்கிருப்பதை இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன். உன்னைப் பற்றி அவர்கள் எவ்வளவோ புளுகினுர்கள். நீ அந்தச் சேட்டுடன் வாழ்க்கை நடத்தச் சென்றுவிட்டதாகக்கூடக் கூறினுர்கள். ஆனுல் நான் நம்பவே இல்லை. உன் உடம்புக்கு என்ன சந்திரா? நீ மெலிந்து துரும்பாய்ப் போய்விட்டாயே! எல்

லாம் என்னுல்தான் என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு அறை வாடகைக்கு எடுத்திருக்கிறேன். இன்றைக்கே இப்பொழுதே உன்னை என்னுடன் அழைத்துச் செல்கிறேன். ஒரு கணமேனும் எனது சந்திராவை எனது பார்வையிலிருந்து விலகியிருக்கச் செய்யமாட்டேன்'' என்று ஆவேசத்துடன் கூறினுன்.

பாபு இவ்வாறு உளறிக்கொண் டிருக்கையில், நான் சந்திராவின் முகத்திலே தோன்றும் உணர்ச்சி பாவங்களை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தேன். முதலில், அவன் வந்தவுடன் அவளது வாழ்க்கையின் ஜோதியே அவளது கண்களில் திரும்பியது போலிருந்ததைக் கண்டேன். பின்னர் சிறிது நேரத்தில் அணைக்கப்பட்ட மின்சார வெளிச்சம்போல அது மறைந்து, துக்கம் குடிகொண்டதையும் கண்டேன். பின்னர் திடீரென ஒரு புதிய பயங்கரத் தீர்மானத்திற்கு வருவது போல் கண்களில் ஒளி தோன்றியது. அதன் பிறகு.....?

நான் பெண்களின் சந்நதியை வணங்கும் உணர்ச்சிப் பேயனல்ல. அவர்களது மாருு அன்பு, பணிவு என்பதெல்லாம் ஆண்களை வலைக்குள் இழுத்து வீசப்படும் மாய்மாலம் என்று எண்ணுபவன். பாபுவின் உணர்ச்சி மிக்க காதல் மொழிகளுக்குப் பதில் கூறுவதற்குப் பதிலாக என்னைப் பார்த்து—ஆம், என்னைத்தான்—ஆத்திரங் கொடுக்கும்படியான குரலில், 'அன்பே, இந்த மனிதனை வெளியே போகச் சொல்லுங்கள்'' என்று கூறினுள். அதைப்போல் கேவலமாக ஒரு பெண் நடக்க முடியுமென எனது கற்பனையில் கூட எட்டினதில்லை.

'அன்பே!' என்றது, என்னைப் பார்த்துத் தான், வாழ்க்கையில் இரண்டே இரண்டு முறை சந்தித்த என்னைப் பார்த்து, தனது வாழ்க்கையையும், இதயத்தையும், அன்பையும், தன் உயிரையும் அவள் பாதத்திற்குச் சமர்ப்பித்த அந்த மனிதனைப்

போகச் சொல்லும்படி கூறுகிறாள். ஏன் ? இதற்கு ஒரே ஒரு காரணந்தான் இருக்க முடியும்.

அவனோ ஒரு ஏழை, பூ வியாபாரி. நானோ வாழ்க்கையில் ஏதோ ஒரு நல்ல அந்தஸ்தில் இருக்கிறவன். இதுதான் காரணம். இதை நினைத்ததும் அன்று நான் பெண்ணினத்தை வெறுத்ததைப் போல் வாழ்க்கையில் என்றுமே வெறுத்ததில்லை.

தான் கேட்ட வார்த்தைகளினால் ஸ்தம்பித்தவன்போல் சில விநாடிகள் பாபு நின்றான். அவனது கன்னங்களின் நிறம் வெளுப்படைந்ததையும் அவனது பரந்த தோள்கள் குறுகிவிட்டதையும் கண்ணுற்றேன். தன் கையில் அப்பொழுது வைத்துக்கொண்டிருந்த வேணியைக் குருடனைப் போல் வெற்றுப் பார்வை பார்த்துக்கொண்டிருந்தான். அவனும் இவ்வன்பின் அர்ப்பணம் தனது வாழ்வோடு சம்பந்தப்பட்டதல்ல என எண்ணினான போலும். நடுங்கிய கைகளால் சங்கோஜத்துடன் அதனைப் படுக்கைமீது வைத்து "நான்...நான்... உனக்காகக்...கொண்டு வந்தேன்...!'' என்று உணர்ச்சியுடன் கூறினான்.

சந்திரா அவன் கூறிய வார்த்தைகளைச் சற்றும் பொருட்படுத்தியதாகத் தோன்றவில்லை. அதற்கு மாறாக நான் கொண்டுவந்த செண்டைச் சந்திரா கன்னத்தில் அணைத்துக்கொண்டே கண்களால் என்னைச் சுட்டிக் காண்பித்து "இதோ இவர் ஏற்கெனவே இவ்வழகான பூக்களைத் தந்திருக்கிறார். உன்னுடைய வேணி வேண்டாம், பாபு'' என்றாள்.

"உன் பாதத்திலாவது கட்டிக்கொள்ளலாமே'' என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு வெளியே போய்விட்டான் பாபு. அவனது காதல் கனவின் கடைசித் தந்திகள் என்றுமே ஒன்று சேர முடியாதவாறு துண்டுகளாக அறுந்த சத்தம் காதிலே கேட்டதுபோல் இருந்தது.

இந்தக் கேவலமான அற்பப் பெண்ணிடம் கோபங்கொள்வது காலத்தை விரயமாக்குவதாகத்

தான் முடியும் அவளை வெறுப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை என எண்ணினேன். அப்போது என் சிந்தனையைக் கலக்க "உங்கள் வரவை நான் இவ்விதம் உபயோகித்துக் கொண்டதற்காக மிகவும் வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள்" என்றாள் சந்திரா.

நான் வேணியைச் சுட்டிக்காட்டி ஆத்திரத்துடன் "நீ மன்னிப்புக் கோருவதானால் என்னிடம் எதற்குக் கேட்கிறாய் ? இதோ இந்தப் பூக்களிடம் கேள். சந்திரா, உன்னைப் போன்ற பெண்கள் பூக்களின் உயர்வையோ காதலின் பெருமையையோ அறிய முடியாதவாறு சாபக் கேட்டிற்கு உள்ளானவர்கள். அன்றொரு நாள் இரவு பாபு உன் பாதங்களில் மலரைச் சுற்றிய பொழுது நீ நகைத்தாய். உனக்கு அது ஒரு வேடிக்கையாக வெறும் கேலிக் கூத்தாகத் தோன்றியது. நான்கூட அப்பொழுது தலையிலே சூட்டிப் போற்றப் படவேண்டிய இந்தப் பூக்கள், கேவலம் உன்னுடைய காலுக்குப் போடப் பட்டு அவமதிக்கப்படுகின்றனவே என் நினைத்தேன். பாபு பூச்சரத்தை மட்டும் உன் பாதத்தில் சேர்க்கவில்லை. அவன் தனது இதயத்தையும் உனது பாதத்தில் அர்ப்பணித்தான். கால்களில் சூடி அவமதித்ததற்குப் பதிலாக நீ அம்மலர்களைத் தலையிலே சூடிக் கௌரவித்துப் பாராட்டி யிருக்க வேண்டும். உன்னைப் போன்ற பெண்கள், இதயங்களையும் பூக்களையும் மிதித்து அழிப்பதிலேயே இன்பங்காணுகின்றார்கள். உனது காலருகே உள்ள மலர்கள் எதன் சின்னமாக இருக்கின்றன என்பதை இன்று நன்கு உணர்கிறேன். காலிலே மலர்கள் சூடி, பூக்களையொத்த உயரிய நோக்கங்களை மிதிக்கும் உன்னைப்போன்ற அற்பப் பெண்களின் மடமையை என்னவென்பது ? ஏ பேயே ! இதோ இதை எடுத்துக்கொள்" என்றேன்.

எனக்கு ஏதோ பித்துப்பிடித்ததுபோல் இருந்தது. மனித சமுதாயத்தின்மீதே எனக்கு வெறுப்பு

ஏற்பட்டிருந்தது. பெண் மனத்தின் இந்த விபரீதப் போக்கைக் கண்டு என் நெஞ்சம் கொதித்தது. "இந்த வேணியை எடுத்து உனது காலில் அணிந்துகொள். இது வெறும் மலர் மாலை மட்டும் அல்ல. பாபுவின் இதயமாக்கும்'' என்று வெறி பிடித்தவன்போல் கத்தினேன்.

வேணியை ஒரு கையால் எடுத்து மறு கையால் துணியை உயர்த்தி, "அவன் உனது கால்களில் இதனைச் சூட்டச் சொன்னான். அவனது எண்ணம் நிறைவேறும்படி...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தேன்.

ஆனால் அவள் போர்வையை உயர்த்திய போது நான் கண்ட காட்சியை என்னவென்பது? அந்தக் காட்சியைக் கண்டதும் நான் சொல்லவந்த வார்த்தைகள் அப்படியே எனது உதடுகளில் உறைந்துவிட்டன. எனது கரங்களிலிருந்து வேணி கீழே விழுந்தது. அது சந்திராவின் பாதங்கள் இருக்கவேண்டிய இடத்தில் விழுந்தது. ஆனால் அங்கே பாதங்கள் இல்லை. பாதங்களுக்குப் பதிலாக பாண்டேஜ் இருந்தது!

"சந்திரா!''

உடனே எனது மனதிலே பல காட்சிகள் 'விர்' என்று சுழலத் தொடங்கின—அரட்டையின் செக்கச் சிவந்த கண்கள், மின்னுகின்ற வாளின் கூரிய முனை, துக்கமே குடிகொண்ட மசீதாவின் முகம், மீண்டும் அந்த ரத்தக் கண்கள்!

"சந்திரா!''

"வாளின் கூறிய முனையிலே ஆடுவதென்பது லேசான விஷயமல்ல.''

டாக்டரிடமும் இவர்கள் இதையேதான் கூறியிருக்கவேண்டும்.

"சந்திரா!''

"ஏன் இப்படிப் பதறுகிறீர்கள்? ஓடுகின்ற யந்திரத்திலே எவனாவது காலைவைத்தால் நிச்சயமாய்க் காலை இழக்க வேண்டியதுதான் என்று நீங்களே அன்று கூறவில்லையா?'' என்றாள்.

# ஒரு வேடிக்கை

பெரிய பஞ்சத்தின்போது பாபு பாரிசால் கிராமத்திலிருந்து கல்கத்தாவுக்குக் கால் நடையாகவே சென்றான். வழியில் கிழவர்கள், வாலிபப் பெண்கள், பால் குடிக்கும் குழந்தைகள் ஆகியோர் நூற்றுக் கணக்கில் விழுந்து சாவதைக் கண்ணாலே கண்டான்; ஆனால் பாபு மட்டும் சாகவில்லை. அவன் உயிர் தப்பிப் பிழைத்தது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஒரு வேளை அவனைக் கவனிக்கத் தாய், தகப்பன் பெண்டாட்டி பிள்ளை குட்டிகள் உறவினர் இல்லாததுதான் காரணமோ என்னவோ! அவனோ நினைத்தபடி எங்கும் போகலாம். காலையில் மற்றவர்களெல்லாம் தூங்கிக் கொண்டிருக்கையில், தெருக்களில் பிச்சை எடுக்கப் போய்விடுவான். குப்பைத் தொட்டிகளிலுள்ள உணவுகளைத் தேடிச் சென்று விடுவான். முண்டி அடித்துப் போய் அவனே எல்லோருக்கும் முன் வரிசையில் சுடச் சுடக் கஞ்சி பெறுவதற்குக் காத்திருப்பான்.

அவனோடு சேர்ந்த மற்ற அகதிகள் 'அவன் ஒரு மைல் தூரத்திலேயே உணவின் வாசனையை மோப்பம் பிடித்துவிடுவானே' என்று கூறுவார்கள். பட்டணத்தில் யாராவது தர்மகர்த்தாக்கள் தானம் கொடுத்தால் அங்கே பாபு நிச்சயமாக இருப்பான். எங்காவது சமையலறையிலிருந்து எச்சிற் பண்டங்கள் வீசப்பட்டால் அவை தரையில் விழுவதற்கு முன்னரே பிடிப்பதற்குப் பாபு தயாராக இருப்பான். அவன் உணர்ச்சிகளெல்லாம் உணவு என்ற ஒரு விஷயத்தின்மீதே பதிந்திருந்தது. எங்காவது தூரத்தே ஒரு மைலுக்கு அப்பால் சமைக்கப்பட்டால் அந்த வாசனையை அவன் மூக்கு, தீட்சண்யமடைந்து வேட்டை நாய்போல்

மோப்பம் பிடிக்கும். முழு இருட்டடிப்பில்கூட வீதியில் ஏதாவது ஒரு தானியம் விழுந்திருந்தாலும் கண்டுபிடித்துவிடுவான். தூங்கும்பொழுது பாலாறுகளையும், சோற்று மலைகளையும், தூண் போல் ஆகாயத்தை நோக்கி வளர்ந்த ரசகுல்லாக்களையும் சொப்பனம் காண்பான். விழித்திருக்கும் பொழுதெல்லாம் அடுத்த வேளை நிஜச் சாப்பாடு கிடைக்கும் வழியை ஆராய்வான். சாப்பாட்டுக்காக, பாபு வகுக்கும் திட்டங்களைப்போல் ராணுவ ஜெனரல்கூட, ஒரு கடும் யுத்தத்திற்குத் திட்டமிட மாட்டான். பாபு உணவை எண்ணித் தன்னையே மறந்திருப்பதுபோல் ஒரு காதலன்கூடத் தன் காதலியை எண்ணி அவ்வளவு ஏங்க மாட்டான். பட்டினி அவனது மற்ற எல்லா உணர்ச்சிகளையும் கொன்றுவிட்டது. தெருவில் யாராவது இள நங்கை நடந்து சென்ருல்கூட, அவளது கன்னங்கள் நன்ருய்ச் சுடப்பட்டு உப்பிய ரொட்டிபோல் இருக்கிறதென்றும், அவளது நிறம் மாதுளங்காய் போல் இருக்கிறது என்று மட்டுமே எண்ணுவான். அவள் மட்டும் வெறும் பெண்ணுக இல்லாமல் ஒரு வாய்ச் சோருகவோ, ஒரு ஆப்பிளாகவோ, ஒரு ரசகுல்லாவாகவோ இருந்திருந்தால், நிச்சயமாக அவளையே தின்றிருப்பான்!

அரசாங்கத்தின் அறிக்கைப்படி இனிமேல் வங்காளத்தில் பஞ்சமே கிடையாது. கிராமங்களிலிருந்து வந்து முற்றுகையிட்ட அகதிகளெல்லாம் கல்கத்தாவிலிருந்து விரட்டப்பட்டனர். ஆனுல் பாபு மட்டும் எப்படியோ போலீஸின் கழுகுக் கண்களிலிருந்து தப்பி, கல்கத்தாவில் இன்னும் வசித்துக் கொண்டுதானிருந்தான்.

கொடிய மேகத்தைப்போல் பஞ்சம் விவசாயிகளின் மண்குடிசைகளையெல்லாம் கடந்து சென்றது. அதன் கரிய நிழல் நகரங்களிலும் பட்டணங்

களிலுமுள்ள மத்தியதர வகுப்பினர்களின் இல்லங்களின்மீதும் படர்ந்தது. பஞ்ச நிவாரண சமையற்கூடங்களெல்லாம் மூடப்பட்டன. ஒருவர்கூடத் தானம் கொடுப்பதில்லை. குப்பைத் தொட்டியில் ஒருவரும் அலட்சியமாக உணவை வீசுவதில்லை. அப்படியானல் பாபு எப்படிச் சாப்பிடுவான் ?

அவன் கற்ற எல்லா முறைகளையும் கைக்கொண்டான். மானமின்றிப் பிச்சையெடுத்தான் ; குப்பை கூளங்களை ஆராய்ந்து உணவு தேடினன். ஆனல் ஒரு பொழுதும் திருடினது மட்டும் கிடையாது. எக்காரணத்தாலோ அத்தகைய பாதகத் தொழிலைக் கைக்கொள்ளவில்லை. ஒரு வேளை கடவுள்மீதுள்ள பயமோ பக்தியோ என்னவோ ? அவன் ஒவ்வொரு முறையும் உணவு திருட எண்ணும்பொழுது, ஏதோ ஓர் உணர்ச்சி அவனைத் தடுத்துவிடும்

ஒருவனுடைய ஒழுக்கத்திற்கும் ஒரு எல்லையுண்டல்லவா ? மூன்று நாள் பட்டினி கிடந்த பின்னர் அவனது மனச்சாட்சியும் லேசாக மறைந்துகொண்டிருந்தது. வயிறு ஒட்டிப்போய் அவன் கால் தள்ளாடியது. நடக்க முடியவில்லை. அவனது கண்களில் ஒரு விசித்திரச் சோர்வு—சாவின் முன்னறிவிப்பு—தோன்றியது. உணவு தேடுவது எப்படி ? பிச்சை கேட்க, அவன் உதட்டை அசைக்கக்கூட முடியவில்லை. அவன் மனதில் எண்ணங்கள் தோன்றவில்லை , இருதயத்தில் உணர்வில்லை.

நான்காம் நாள், கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே எதையாவது திருடித் தின்பதென முடிவு செய்தான் பாபு. ஆனல் எங்கே ? எப்படித் திருடுவது ? தன்னிடம் மிகுதியிருந்த பலம் முழுவதையும் வரவழைத்துக்கொண்டு கால்கள் தள்ளாட, 'தர்மத்தலா வெல்லஸ்லி' வீதி வழியாகச் 'சௌரிங்கி' என்னும் இடத்தை நோக்கி நடந்தான்.

பட்டணத்தில் ஒரே களிப்புணர்ச்சி பொங்கியிருந்தது. வீட்டு மாடங்களிலும் முற்றங்களிலும் வானவில் போன்ற பல நிறங்கொண்ட கொடிகள் தொங்கின. பள்ளிகளில் மணியடித்தன. சந்தோஷத்துடன் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் பல முகங்கள் தென்பட்டன. நன்ருய் நாசூக்காக உடுத்திய மங்கைகள் சௌரிங்கியை நோக்கிப் போய்க்கொண் டிருந்தனர். காக்கியுடை உடுத்திய சோல்ஜர்கள் நடுத்தெருவிலும், வீட்டு வாசற்படிகளிலும் புட்டியோடு உட்கார்ந்த வண்ணம் குடித்துக்கொண் டிருந்தனர். "ஏதோ ஒரு கொண்டாட்டம் போலிருக்கிறது" என்று பாபுவின் மனதில் தோன்றியது. ஒரு மூடிய கடையின் வாசலில் ஒரு குடிகாரச் சோல்ஜர் அரைகுறையாகக் குடித்த பாட்டிலேக் கையில் வைத்துக்கொண்டு தூங்கி வழிந்துகொண் டிருப்பதைக் கண்ட பாபுவுக்கு, ஒரு புதிய யோசனை தோன்றியது. சுற்று முற்றும் பார்த்துத் தெருவில் ஒருவருமில்லாமல் போகவே சோல்ஜரின் கையிலிருந்த பாட்டிலேப் பிடுங்கிஞன். அதிலிருந்து துர்நாற்றம் வீசியது. ஆயினும் பாபுவுக்கு அழுகிய உணவுகளே உண்டு பழகியிருந்ததால் அதைப் பொறுத்துக்கொள்ள முடிந்தது. பாட்டிலிலிருந்த திராவகத்தை ஒரே மடக்காகத் தொண்டையில் ஊற்றிஞன். ஊற்றியதும் யாரோ தனது தொண்டையில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீவைத்ததுபோல் தோன்றியது. பின் அதன் ஜ்வாலேகள் விரைவில் குடலிற்குள்ளும் வயிற்றிற்குள்ளும் சென்றன. அவன் வயிற்றிற்குள் நீராவி தோன்றுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அப்பொழுது யாரோ அவனது நெற்றியில் தாக்கிஞர்கள். தலே நிமிர்ந்து யாரெனெ நோக்கிஞன்—அது ஒரு சுவர்.

அதன் பின்னர் அவனது கால்கள் எப்படி எங்கு இழுத்துச் சென்றனவென்பதே அவனுக்குத் தெரியவில்லை. ஆயினும் அவனது உள்ளுணர்ச்சி உணவுள்ள இடத்தின் அருகில் இருப்பதாகக் காட்டியது. அவன் தனது பருத்த புருவமுள்ள கண்களை அகல விரித்துத் தன் கனவு நனவாகியுள்ளதைக் கண்டான். அவனுக்கு முன்னால் திறந்த கதவுக்குமப்பால்—கேக்குகளும், மிட்டாய்களும், கிண்ணங்கள் நிறையச் சூப்புகளும், தாம்பாளம் நிறையத் தக்காளிகளும், பழங்களும், காய்கறிகளுமாகத் தென்பட்டன. அது 'கிராண்டு ஹோட்டலின்' சமையலறை. பாபு அதிகமாகக் குடித்திருந்தால் அதைப்பற்றித் தெரிந்துகொள்ளவோ, புரிந்துக்கொள்ளவோ முடியவில்லை. ஒரு க்ஷணமும் தாமதமின்றி உள்ளே நுழைந்து ருசியுள்ள ஒரு தின்பண்டத்தை எடுக்க அவன் கை சென்றபொழுது, மேஜையின்மீது ஒரு பெரிய கத்தியின் அருகிலிருந்த அரைத்துண்டு ரொட்டியைக் கண்ணுற்றான்.

"ரொட்டி! ஆஹா ரொட்டி!" என்று அவனது மனம் இன்பகீதம் பாடியது. மற்ற உணவுகளைத் தொடுவதற்கு முன்னரே ரொட்டியை எடுத்தான். எப்பொழுதும் பழக்கமான மாவின் மணமும் புளிப்பின் வாசனையும் மூக்கைத் துளைக்கவும் தனக்குள்ளாகவே 'ரொட்டிக்கு ஈடானது இந்த உலகத்தில் என்ன இருக்கிறது?' என்று கூறிக்கொண்டான். அதனைத் தின்ன வாயைத் திறந்தான். ஆனால் வாய் திறந்தபடியே நின்றுவிட்டது.

உடனே கோபக் குரல்களுடன் பல சமையற்காரர்கள் திறந்த கதவின் வழியாக வந்தார்கள். பாபு அகப்பட்டுக் கொண்டான். அவனது கையிலிருந்த ரொட்டி பிடுங்கப்பட்டது. அவனை அறைந்து, உதைத்து, முடிவில் போலீசார் வசம் ஒப்புவித்தார்கள். அவனை இழுத்துச் சென்ற

பொழுது, "அயோக்கியப் பயல்! இவன் இந்த வெற்றி தின டின்னர் சாப்பிடலாமென்று நினைத்தானே?" என்று ஒருவன் கூறக் கேட்டான். மற்றையோரெல்லாம் அதைக் கேட்டுச் சிரித்தார்கள். அவர்கள் எதற்காகச் சிரித்தார்கள் என்பதே அவனுக்குப் புரியவில்லை. 'டின்னர்' என்பது என்ன என்று பாபுவுக்குத் தெரியும். உணவு சம்பந்தமான உலகத்திலுள்ள எந்த வார்த்தைதான் பாபுவுக்குத் தெரியாமலிருக்கும்? ஆனால் 'வெற்றி தினம்' என்றால் என்ன? 'லாக்அப்'பிலிருந்த பல மணி நேரமும் இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

சங்கிலி அசையும் சப்தத்தைத் தொடர்ந்து சிறையின் கற்சுவரில் சப்பாத்தி போன்ற வட்டமான வெளிச்சம் தோன்றியது. ஓர் இரும்புப் பாத்திரத்தைத் தள்ளி 'இதைத் தின்னு' என்று ஒரு குரல் உருமிற்று.

பாபு கீழே குனிந்து பார்த்துவிட்டுத் திடீரெனச் சிரிக்கத் தொடங்கினான்.

"என்னடா உனக்கு வந்த சிரிப்பு, அப்படி என்ன வேடிக்கை?" என்று போலீஸ்காரன் அதிசயத்துடன் கேட்டான்.

"என்ன சிரிப்பு? என்ன வேடிக்கை?"—பாபுவுக்கு மேலும் சிரிப்புத் தாங்கவில்லை. தொடர்ந்து சிரித்துக்கொண்டே இருந்தான். சிரித்துச் சிறிது ஓய்ந்ததும் தரையைப் பார்ப்பான்; பார்த்ததும் மீண்டும் சிரிக்கத் தொடங்கிவிடுவான்.

"படு பைத்தியக்காரன்" என்று போலீஸ்காரன் தீர்மானித்துப் போய்விட்டான். ஆனால் பாபு போலீஸ் ஸ்டேஷனின் கற்சுவர்களைத் தனது சிரிப்பால் உலுக்கிக்கொண்டிருந்தான். தரையில் இருந்த இரும்புப் பாத்திரமும் அதிலுள்ள அரைத் துண்டு காய்ந்த ரொட்டியுமே அவனுக்குச் சிரிப்பு வரக் காரணமாக இருந்தன.

URAI UNIVERSITY